REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்





## சங்கிலித் தொடராகும் தமிழ் அரசியல்வாதிகளின் படுகொலைகள்



## பூட்டோ குடும்பம் தப்பிப் பிழைக்குமா?

## இலங்கை மக்களுக்கு புத்தாண்டு தரப்போகும் பரிசு யுத்தம்தான்!



பொதுசன நூலகம்

# இலங்கை மக்களுக்கு புத்தாண்டு தரப்போகும் பரிசு யுத்தம்தான்!

இலங்கை விவகாரத்தில் இருந்து சர்வதேசம் விலக்கப்பட்டு, போர் நிறுத்த உடன்பாடு கிழிக்கப்பட்டு, பெரும் போர் ஒன்று வெடிப்பதற்கான ஏது நிலை மெல்ல மெல்ல உருவாகி வருகிறது.

பயங்கரவாதத்தை இவ்வாண்டு முற்றாக ஒழித்து தமிழர்களுக்கு உரிமை வழங்கப்போவதாக அரசுத் தரப்பில் இருந்து உரத்த குரல்கள் எழத் தொடங்கியுள்ளன.

தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்க அரசு முன்வந்தால் அதை எதிர்த்துப் போராடுவோம் என தெற்கில் பேரினவாதிகளின் குரல்களும் ஒலிக்க ஆரம்பித்துள்ளன.

தனது ஆட்சியை வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பில் காப்பாற்றுவதற்காக பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி. யிடம் மண்டியிட்டு வழங்கிய உறுதி மொழியின் படி, விடுதலைப்புலிகளைத் தடைசெய்து, போர்நிறுத்த உடன்படிக்கையை கிழித்தெறிந்து போரைத் தீவிரமாக்க கங்கணம் கட்டி நிற்கும் அரசுத் தலைமை, ஆகக்குறைந்த அதிகாரப் பரவலாக்கல் தீர்வையாவது வர மறுத்தனர்.

வேலை வாய்ப்பு, உயர்கல்வி, மொழி ஆகிய விடயங்களில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டே வந்தனர்.

தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்ற இலக்குடன் ஓரிரு தமிழ் இளைஞர்கள் ஆரம்பித்த ஆயுத வழியிலான விடுதலைப் போராட்டம் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து இன்று முப்படைகளுடன், நிர்வாகக் கட்டமைப்புக்களுடன் எழுச்சி பெற்று நிற்கிறது.

ஆனையிறவை மீட்டு இலங்கைப் படையுடன் சம படைப் பலத்துடன் தமிழர் தரப்பு 2002 ஆம் ஆண்டு இருந்த போது, அப்போதைய ஐ.தே.கட்சி அரசு சமாதானத்துக்காக நேசகரம் நீட்டியது. சர்வதேசமும் கோரிக்கை விடுத்தது.

''தாங்கள் யுத்தப் பிரியர்கள் அல்லர், சமாதானத்திலும் பற்றுறுதி கொண்டவர்கள்'' என பகிரங்கமாக அறிவித்த தமிழர்தரப்பான விடுதலைப்புலிகள் யுத்தத்தை நிறுத்தி சமாதானச் கைச்சாத்தான யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து நடைமுறையில் இருப்பதாக விடுதலைப்புலிகள் மட்டுமல்ல, அரசும் கூறிவந்தது.


இன்று நிலைமை மாறி விட்டது. யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்து அரசுத்தரப்பில் இருந்து வரும் கருத்துக்கள் அந்த உடன்பாட்டில் இருந்து அரசுத்தரப்பு ஒரு தலைப்பட்சமாக விலகிவிட்டதா என்ற சந்தேகத்தை எழுப்பி நிற்கின்றது.

மக்களை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கை என்ற பெயரில் கிழக்கில் அரசு ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை இன்று வடக்கின் வாசலில் வந்து நிற்கின்றது.

வடக்கையும் மீட்போம் என்ற பிரகடனம் அரசுத் தரப்பில் இருந்தும் படைத்தரப்பில் இருந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

விடுதலைப்புலிகளை வடக்கில் இருந்தும் அழித்து, அந்தப்பிரதேச மக்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுப்போம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரரும்







முன்வைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆட்சியைத் தக்க வைக்க உதவிய ஜே.வி.பி. அதிகாரப்பரவலாக்கலை எதிர்க்கும் போது, எப்படி அதிகாரப் பரவலாக்கலை அரசால் முன்வைக்க முடியும்? மொத்தத்தில் தமிழர்களுக்கு

சூழலுக்குள் பிரவேசிக்க இணங்கினர். இதன் வெளிப்பாடாகவே, நோர்வேயின் பிரசன்னத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது.

அந்த ஒப்பந்தம் ஐந்தாம் ஆண்டைக் கடந்து இன்னும் இருமாதங்களில்

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ, பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்க, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் சூளுரைத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளை முற்றாக வடக்கில் இருந்து ஒழித்து தமிழர்களுக்கு

## தெற்கில் இருந்து வெளிவரும் செய்திகள் அதையே கூறுகின்றன

தீர்வும் இல்லை. அவர்களுக்கு மிஞ்சப் போவது அழிவுதான்.

கடந்த கால வரலாறுகளை சற்றுப் பின் நோக்கிப் பார்த்தால், அரசு தற்சமயம் முன்னெடுக்கும் நிலைப்பாடு சாத்தியமாகுமா என்ற கேள்வியை எழுப்புகிறது.

1983 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக, தமிழர்கள் சாத்வீக வழியிலிருந்து விலகி ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் தமிழர்களுக்கு சம உரிமைகளை வழங்க தெற்கு தலைவர்கள் முன்வராத தன் விளைவே இந்நாட்டில் மற்றொரு படை உருவாகக் காரணமாக அமைந்தது.

மிதவாதத் தமிழ்த் தலைவர்கள் நீண்டகாலமாக தமிழர்களின் உரிமைக்காக பல்வேறு வழிகளில் போராடினார்கள். ஆனால் தெற்குத் தலைவர்கள் இறங்கி

ஆறாவது ஆண்டில் காலடி வைக்கப் போகிறது.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மஹிந்த ராஜபக்ஷ அரசு பதவியேற்று, ஓரிரு மாதங்கள் அமைதி நிலவிய போதும், பின்னர் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள் காரணமாக எழுந்த அமைதியற்ற நிலை தொடர்ந்து, இன்று முழு அளவிலான யுத்தம் ஒன்றுக்குள் நாடு மூழ்கும் சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது.

அமைதியற்ற சூழல் நிலவிய போதும், இரண்டு கட்டப்பேச்சுக்களை, இன்று அரசால் பயங்கரவாதிகள் என வர்ணிக்கப் படும் விடுதலைப்புலிகளுடன் மஹிந்த அரசு நடத்தியது.

இந்தப் பேச்சுக்களில் அரசு விட்டுக் கொடுப்பற்ற நிலையில் செயற்பட்டதன் விளைவாக பேச்சுக்கள் எல்லாம் தோல்வியில் முடிந்தன.

பேச்சுக்கள் தோல்வியில் முடிந்த போதும், சர்வதேசத்தின் பிரசன்னத்தில்

உரிமை வழங்கப் போகிறேன் என்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

2008 ஆம் ஆண்டு பயங்கரவாதத்தை ஒழிக்கும் ஆண்டாக இருக்கப் போகிறது என்கிறார் பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்க.

தற்சமயம் நடக்கும் யுத்தத்தில் முக்கிய திருப்பு முனையை எதிர்வரும் ஒகஸ்டில் கொண்டு வருவோம் என்கிறார் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

கிழக்கு மாகாணத்தை பயங்கரவாதிகளிடம் இருந்து விடுவித்தது போன்று பிறக்கும் புதிய ஆண்டில் வடமாகாணமும் விடுவிக்கப் படும் என்கின்றார் பாதுகாப்பு அமைப்புச் செயலாளர் கோத்பாய ராஜபக்ஷ

அமெரிக்கா உதவியை நிறுத்தினாலும் வேறுநாடுகளில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்து விடுதலைப் புலிகளுக்கு- பயங்கரவாதத்துக்கு- எதிரான போரை அரசு முன்னெடுக்க வேண்டும் என்கிறார் ஜே.வி.பி. யின் பிரசாரச் செயலாளர் விமல் விரவன்ஸ.

தெற்கின் தலைமைகளென தற்போது பிரபல்யம் பெற்றுள்ளவர்களின் இந்தக் கருத்துகளை உற்று நோக்கும் போது, நாலாம்கட்ட ஈழப்போருக்கான பாதையை அவர்களே திறந்து விட்டார்களா என்று கருதவேண்டி உள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் முக்கிய திருப்புமுனை வரும் என எதிர்வு கூறும் இராணுவத் தளபதி-

'விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சாகடிப்போம். தற்போது தினமும் 10 பேர் என்ற அடிப்படையில் விடுதலைப் புலிகளைக் கொன்று வருகின்றோம். அவர்களின் மொத்தத் தொகையில் 50 வீதம் அழிக்கப்பட்டு விட்டது. எஞ்சியவர்களையும் விரைவில் அழித்து பயங்கரவாதத்துக்கு முடிவுகட்டுவோம்' என்று தெற்கில் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசின் தலைமையில் போரை வழிநடத்தும் அவரின் கணக்குகள் சரியாக இருக்கலாம். அதை விமர்சிக்க முன்வரவில்லை.

ஆனால் வடக்கில் வெடிக்கப்போகும் போர், இரு நாடுகளின் முப்படைகளும் மோதும் போராகவே இருக்கப்போகின்றது.

கிழக்கில் இழப்புக்கள் ஏதுமின்றி பின் வாங்கி வந்து வன்னியில் பலமான நிலையில் விடுதலைப் புலிகள் இருப்பதாக கணிப்பீடுகள் கூறுகின்றன.

தென்னாசியாவின் வல்லரசு ஒன்றுடன் மோதி அனுபவம் பெற்றவர்கள் விடுதலைப்புலிகள். அவர்களின் பலத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. அவர்கள் தமது முழுவளங்களையும் பயன்படுத்தி வன்னியைக் காப்பாற்றப் போராடுவார்கள் என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள்.

''போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டால், விடுதலைப் புலிகளை முழுமையாக அழிப்பது என்பதே அரசாங்கத்தின் உண்மையான கொள்கை என்றாகிவிடும். அத்தகைய ஒரு நிலைப்பாட்டில் அரசு இராணுவத்தீர்வில் தோல்வி காணுமாயின், அதன்பின்னர் அரசாங்கம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாற்று உபாயம் எதனையும் நாட முடியாது'' என்று தேசிய சமாதான பேரவையின் இயக்குநரும் அரசியல் விமர்சகருமான ஜெகான் பெரேரா கருத்து வெளியிட்டுள்ளார்.

**யாழவன்**

இந்தக் கருத்து, போரில் நாட்டம் கொண்டு நிற்கும் தெற்கின் தலைமைகளின் காதில் விழுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

யுத்த ஆயத்தங்களுடன் கடந்துபோன ஆண்டைவிட பிறந்துள்ள ஆண்டு நாட்டுக்குப் பேரழிவை ஏற்படுத்தப் போகின்றது. தமிழர் தாயகப்பகுதியில் மட்டுமல்லாது இலங்கை முழுவதும் பேரழிவுகள் அரங்கேறப் போகின்றன. வடக்குமுனை, கிழக்கு முனை, தெற்குமுனை என பல முனைகள் 4 ஆம் கட்ட ஈழப் போரில் திறக்கப்படலாம். அதன் மூலம் ஏற்படப்போகும் அழிவுகள் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் 10 ஆண்டு காலத்துக்கு பின்னோக்கிச் செல்ல வைக்கப் போகின்றன.

''அழிவை ஆக்கத்துக்கு மாற்றும் மனப்பாங்கே வெற்றிதரும். பிறக்கும் புதிய ஆண்டில் அதுவே தேவை'' என்று கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன்.

பிறந்துள்ள புத்தாண்டு தரப்போகும் அழிவுகள் எந்தத் தரப்புக்கு வெற்றியைக் கொடுக்கப் போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# பூட்டோ குடும்பம் தப்பிப் பிழைக்குமா?

உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவம் கடந்த 27ஆம் திகதி பாகிஸ்தானில் இடம்பெற்றது. தென்னாசியாவிலேயே இராணுவ ஆட்சிக்குப் பெயர்போன நாடு பாகிஸ்தான். ராவல்பிண்டியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ கொல்லப்பட்டார். இந்தச் சம்பவமானது பாகிஸ்தானை மட்டுமல்ல முழு உலகையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

உலகிலேயே பெரிய ஜன நாயக நாடான இந்தியாவில் இருந்து 1947ஆம் ஆண்டு தனி நாடாகப் பிரிந்து சுதந்திரம் பெற்ற பாகிஸ்தானில் இன்று ஜனநாயகம் கானல் நீராகவே உள்ளது. பாகிஸ்தான் தனிநாடாகி 60 ஆண்டுகள் கழிந்துவிட்டன. 35 ஆண்டுகளை இராணுவ ஆட்சியின் கீழ் கழித்துள்ளது.

1947ஆம் ஆண்டு இந்தியாவின் கிழக்கிலும் மேற்கிலும் கிழக்குப் பாகிஸ்தான், மேற்குப் பாகிஸ்தான் என்று இரண்டு பிர தேசங்கள் இணைக்கப் பட்டு உரு வாக்கப் பட்ட நாடு தான் பாகிஸ்தான். 1971ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இருந்து - கிழக்கு பாகிஸ் தான் பிரிந்து பங்களாதேஷ் என்ற பெயரில் தனிநாடாக இயங்கிவருகின்றது. பாகிஸ் தானுடன் யுத்தம் செய்து இந்தியாவே இதனைப் பெற்றுக்கொடுத்தது. பங்களா தேஷை அங்கீகரித்த முதல் நாடும் இந்தியாதான்.

இந்தியா, சீனா, ஈரான், ஆப்கானிஸ் தான் ஆகிய நாடுகளையும் தெற்கே அரா பிக் கடலையும் எல்லையாகக் கொண்டது பாகிஸ்தான். உலக அளவில் முஸ்லிம் களை அதிகமாகக் கொண்ட நாடுகளில் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. மக்கள் எண்ணிக்கையில் 96.3 வீதத்தினர் முஸ்லிம்களே!

பாகிஸ்தானில் ஜனநாயக நீதியான தேர்தல்கள் மூலம் மக்கள் நாட்டுத் தலை வரைத் தேர்ந்தெடுத்தாலும் அவர்கள் நீண்ட காலம் ஆட்சியில் நீடிப்பதில்லை. காரணம் இராணுவ ஆட்சியாளர்கள் அரசியலில் தலையிடுவதே.

இந்த நிலைமை பாகிஸ்தானில் காலம் காலமாகத் தொடர்ந்து வருகின்றது. இது வேதனைக்குரிய ஒரு விடயமாகும். இதனால் பாகிஸ்தானுக்கு உலக நாடுகளின் உதவிகள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

பாகிஸ்தான் சுதந்திரமடைந்த காலப் பகுதியில் இருந்து அது கடந்த வந்த பாதையைப் பார்ப்போமானால் அரசிய லில் ஸ்திரமற்ற தன்மையே காணப்பட்டு வருகின்றது.

★ 1947ஆம் ஆண்டு பாகிஸ்தான் தனிநாடு ஆகியது. முகமது அலி ஜின்னா முதல் கவர்னர் ஜெனரல் ஆனார்.

★ 1958ஆம் ஆண்டு அதிபர் இஸ்காந்தர் மிர்ஷா அரசமைப்பை ரத்துச் செய்து இராணுவச் சட்டத்தைப் பிறப் பித்தார். ஆனால், அவரை இராணுவத் தளபதி முகமது அலிப் கான் நாடு கடத்தினார்.

★ 1965ஆம் ஆண்டு காஷ்மீர் பிரச் சினையில் இந்தியாவுடன் இரண்டாவது போர் மூண்டது.

★ 1969 ஆம் ஆண்டு இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. முகமது அலிப் கான் இராஜினாமா செய்தார். இராணுவத் தளபதி முகம்மது யாஹ்யாகான் ஜனாதிபதியானார்.

★ 1971 இல் இந்தியாவுடனான மூன்றாவது போரில் பாகிஸ்தான் தோல்வி கண்டது. கிழக்குப் பாகிஸ்தான் தனிநாடா கப் பிரிந்தது. முகம்மது யாஹ்யாகான் ராஜினாமாச் செய்தார். சுல்பிகார் அலி பூட்டோ பிரதமர் ஆனார்.



## முஷாரப்பின் இரும்புப்பிடி!



★ 1973 இல் புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.

★ 1977இல் இராணுவத் தளபதி ஸியா-உல்-ஹக் இராணுவ ஆட்சியை பிரகடனம் செய்தார்.

★ 1978இல் ஸியா - உல் - ஹக் பாகிஸ் தானின் ஆறாவது ஜனாதிபதியானார்.

★ 1979இல் இஸ்லாமியச் சட்டம் அறிமுகம். பூட்டோ தூக்கிலிடப்பட்டார்.

★ 1985 இல் பொதுத் தேர்தல்.

★ 1988 இல் பிரதமர் முகம்மது கான் ஜன் யோவை ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் பதவி நீக்கம் செய்துவிட்டு புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

★ 1988 இல் ஸியா - உல்- ஹக் விமான விபத்தில் பலி. பெனாஸிர் பூட்டோ இஸ்லாமிய உலகில் முதல் பெண் பிரதமரானார்.

★ 1990இல் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் பெனாஸிர் பூட்டோ பதவி நீக்கம் செய்யப் பட்டார். பொதுத் தேர்தலில் நவாஷ் செரீப் பிரதமரானார்.

★ 1993 ஊழல் குற்றச்சாட்டின் பேரில் நவாஷ் செரீப் பதவி நீக்கம் செய்யப்பட்டார். தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் பெனாஸிர் பிரதமரானார்.

★ 1996 இல் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் பெனாஸிர் மீண்டும் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

★ 1997 பொதுத் தேர்தலில் நவாஷ் செரீப் மீண்டும் இரண்டாவது தடவையாக பிரதமரானார்.

★ 1999இல் கார்கில் போர் மூண்டது.

★ 1999 ஒக்டோபரில் முஷாரப் இராணு வப் புரட்சி மூலம் நவாஷ் செரீப்பின் ஆட்சியைக் கலைத்தார்.

★ 2000 டிசம்பர் நவாஷ் செரீப் சவூதி அரேபியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

★ 2001 ஜூன் 20 முஷாரப் தன்னை ஜனாதிபதியாகவும் இராணுவத் தளபதி யாகவும் அறிவித்தார்.

★ 2002 ஏப்ரல் முஷாரப் மேலும் 5 ஆண்டுகள் ஜனாதி பதியாகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

★ 2002 ஒக்டோபர் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மீர் ஜப ருலலா ஜமாலி பிரதமர் ஆனார்.

★ 2004 ஆகஸ்ட் சவுகத் அஷிஸ் பிரதமர் ஆனார்.

★ 2007 மார்ச் தலைமை நீதிபதி இப்திகார் சவுத்திரியை முஷாரப் பதவிநீக்கம் செய்தார்.

★ 2007 ஜூலை லால் மசூதியில் இராணு வம் புகுந்து தீவிரவாதி களுடன் சண்டை. சவுத்திரிக்கு ஆதரவாக பொதுமக்கள் கிளர்ந் தெழுந்ததால் அவர் மீண்டும் தலைமை நீதிபதியாக நியமிக் கப்பட்டார்.

★ 2007 ஜூலை அபுதாபியில் நவாஷ் செரீப்பும் பெனாஸிர் பூட்டோவும் இரகசிய மாக பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

★ 2007 ஆகஸ்ட் நவாஷ் செரீப் நாடு திரும்ப உயர் நீதிமன் றம அனுமதி அளித்தது.

★ 2007 செப்டெம்பர் நாடு திரும்பிய நவாஷ் செரீப் விமான நிலை யத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டார்.

★ 2007 அக்டோபர் முஷாரப் ஜனாதி பதித் தேர்தலில் அமோக வெற்றி பெற் றார். முடிவை அறிவிக்க உயர்நீதிமன்றம் தடை.

★ 2007 அக்டோபர் 19 பெனாஸிர் நாடு திரும்பினார். கராச்சி நகரில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிர் தப்பினார். 165பேர்வரை அப்போது பலியாகினர்.

★ 2007 நவம்பர் 3இல் அவசரகால நிலை பிரகடனம். 2007 நவ. 30 இல் ஜனாதி பதியாக முஷாரப் பதவி ஏற்பு.

★ 2007 டிசம்பர் 15 அவசரகால நிலைமை ரத்துச் செய்யப்பட்டது.

★ 2007 டிசம்பர் 27 ராவல் பிண்டியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் பெனாஸிர் பூட்டோ கொல்லப்பட்டார்.

அருண்
யாழ். பல்கலைக்கழகம்

மேற்குறிப்பிட்ட சம்பவங்களைப் பார்க்கும்போது பாகிஸ்தான் அரசியல் என்பது குழப்பங்களும், சிக்கல்களும் நிறைந்ததாகவே காணப்படுகின்றது.


சுட்டுக்கொல்லப்பட்ட பெனாஸிர் பூட்டோ தனது வாழ்வின் பெரும்பகுதியை போராட்டங்கள் மத்தியிலேயே கழித்தார். தனி ஒரு மனிதராக, ஒரு பெண்ணாக இருந்து கடும் சோதனைகளையும், சவால்களையும் சந்தித்தார்.

1953ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம் திகதி சிந்து மாகாணத்தில் உள்ள கராச்சி நகரில் பிறந்த அவர் தனது பள்ளிப் படிப்பை கராச்சி மற்றும் ராவல் பிண்டியில் பயின் றார். 1969, 1973 வரை தனது உயர் படிப்பை பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட், மற்றும் ஹார்வார்ட் பல் கலைக்கழகங்களில் மேற் கொண்டார்.

பெனாஸிரின் தந்தை சுல்பிகார் அலி பூட்டோ பாகிஸ்தானின் தந்தை என வர்ணிக்கப்பட்ட முகமது அலி ஜின்னாவுக்

(25 ஆம் பக்கம் பார்க்க)

‘சர்வதேச சமூகமும் அரசியல் எதிரிகளும் தமிழ் அரசியல் வாதிகளும் கூறுவது போல் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படவில்லை. அரசியல்வாதிகள் உட்பட அனைத்து இன மக்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்காணிப்பகம் ஒன்றை இலங்கையில் அமைக்கவேண்டிய



அவசியம் இல்லை. அதற்கு ஒருபோதும் இடம் கொடுக்க முடியாது’ என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசு தரப்பினரும் அடம் பிடிக்கின்றனர்.

ஆனால் தமிழ்த் தலைவர்கள் அடுக்கடுக்காகப் படுகொலை செய்யப்படுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், சந்திரநேரு, நடராஜா ரவிராஜ் ஆகியோரைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான தியாகராஜா மகேஸ்வரன் இக் கொலைப் பட்டியலில் இடம்பெற்றுவிட்டார். சங்கிலித் தொடராக இடம்பெற்றுவரும் தமிழ்த் தலைவர்களின் மனித படுகொலைகளின் பின்னணியில் இருப்பது யார்? என்பது இன்னும் புரியாத புதிராகவே இருக்கின்றது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு வழங்க முடியாத அரசாங்கம் பொதுமக்களை எப்படிப் பாதுகாக்கப்போகின்றது என்ற பீதியும் பயமும் மக்கள் மனதில் ஏற்பட்டுவிட்டன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கிறிஸ்மஸ் தினத்தன்று தேவாலயத்துக்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதேபாணியில் மகேஸ்வரன் எம்.பி. புத்தாண்டு தினத்தில் தலைநகரில் பிரசித்திபெற்ற இந்துக் கோயிலான ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வைத்தே கொலை செய்யப்பட்டுள்ளார்.

அகில உலகுமே ஜாதி, மத, இன, மொழி பேதமின்றி புத்தாண்டை கொண்டாடும் வேளையில் இலங்கையில் தமிழ்மக்களின் தலையில் இடி விழுந்தது போல் மகேஸ்வரனின் அகால மரணம் அமைந்துவிட்டது.

பிறந்த புத்த்ாண்டு சகல இன மக்கள் மத்தியிலும் சாந்தியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தவேண்டும். பரஸ்பர புரிந்துணர்வும் அமைதியும் நிலவவேண்டும். வன்முறைகள் ஒழியவேண்டும் என்றுதான் எல்லா மக்களும் தத்தமது இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொண்டனர்.

ஆனால் புத்தாண்டில் அடியெடுத்து வைத்து சில மணிநேரங்களிலேயே அதிகாலை வேளையில் தமிழ் மக்களின் மத்தியில் பெரும் சஞ்சலமும் அழியாத சோகமும் ஏற்படுத்திவிட்டன. ஏன் நாம் தமிழர்களாகப் பிறந்துவிட்ட ஒரே பாவத்தினாலா எமக்கு இந்த சோதனைகள் என வெம்பி வெடிக்கின்றனர்.

புத்தாண்டு தினத்தில் இடம்பெற்ற இப் படுகொலை இந்நாட்டின் எதிர்காலப் பயணத்துக்கு ஒரு அபசகுனமாகிவிட்டது.

புத்தாண்டின் பயணத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டதுபோல் அமைந்துவிட்டது நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரனின் படுகொலை. இது நாட்டிற்கும் நமக்கும் நல்லதாக தெரியவில்லை.

# சங்கிலித்தொடராகும் தமிழ் தலைவர்களின் படுகொலைகள்

# அடுத்து யார்....?

கொலை செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுள் முன்னாள் எம்.பி. சந்திரநேரு, கௌசல்யன் கொல்லப்பட்டபோது கொலையுண்டார். அதுவும் இராணுவப் படை முகாம்களுக்கு மத்தியில் மாற்றுக் குழுவினரால் கொல்லப்பட்டார்.

ஏனையவர்களான ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ், மகேஸ்வரன் ஆகிய மூவரும் அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் வைத்தே பலியாகி உள்ளனர். இராணுவம், பொலிஸ், கடற்படை என அனைத்துப் பாதுகாப்புப் பிரிவினரும் நிலை கொண்டுள்ள கேந்திர நிலையங்களிலேயே இக்கொலைகள் இடம்பெற்றுள்ளன.

இவ்வளவு பாதுகாப்புக்களுக்கும் மத்தியில் கொலைஞர்கள் தமது கைவரிசையைக் காட்டிவிட்டனர்.

அப்படியானால்!

இந்தப் பாதுகாப்புப் படையினர் யாருக்குப் பாதுகாப்பாக இருக்கின்றனர்? கொலைஞர்கள் தப்பி ஓடுவதற்கு அவர்களுக்கா பாதுகாப்பு வழங்குகின்றனர் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதில் ஓர் ஒற்றுமை என்னவென்றால் கொலையுண்ட



அனைவருமே எதிரணி உறுப்பினர்கள். அரசின் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டித்து வந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக் கொலைகளுடன் தொடர்புடைய எவருமே இதுவரை கைது செய்யப்படவில்லை. ரவிராஜின் கொலை தொடர்பாக சர்வதேச பொலிஸார் அழைக்கப்பட்டனர். அவர்கள் சுதந்திரமாக விசாரணைகளை நடத்த அனுமதிக்கப்படவில்லை. அரச புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கையின் அடிப்படையிலேயே சர்வதேச பொலிஸாரும் விசாரணைகளை நடத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சர்வதேச பொலிஸாரின் அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் இன்றுவரை சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இது ஒரு கண் துடைப்பாகவே அமைந்துள்ளது. இப்படியான சூழலில் அண்மையில் இடம்பெற்றுவரும் சம்பவங்களை திரும்பிப் பார்க்கவேண்டியது அவசியம்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள் கடத்தப்பட்டனர். உறவினர்களைப் பணயக் கைதிகளாக வைத்துக்கொண்டு வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கக்கூடாது என நிபந்தனை



விதித்து அதில் வெற்றி கண்டனர்.

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னரே பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

கடத்தல்காரர்கள் பணயக் கைதிகளைப் பொலிஸாரிடமே ஒப்படைத்தனர். கடத்தியவர்கள் யார்? கடத்தப்பட்டவர்கள் எங்கே வைக்கப்பட்டிருந்தனர் என்பதும் அரசுக்கும் அரச படையினருக்கும் நன்கு தெரியும். அப்படி இருந்தும் கடத்தல் காரர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. இது ஏன்?

அதேபோன்று நாடாளுமன்றத்தில் அரசின் செயற்பாடுகளை அப்பட்டமாக கண்டித்து விமர்சனம் செய்பவர்களும், வரவு- செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தவர்களுமான மகேஸ்வரன், மனோகணேசன் ஆகியோருக்கும் பல வருடங்களாக வழங்கப்பட்ட விசேட பாதுகாப்புகள் இவ்விருவரும் நாடாளுமன்றத்தில் இருந்து வீடு திரும்பும் முன் அரசினால் நீக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மகேஸ்வரனுக்கும் மனோகணேசனுக்கும் பலத்த அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. எந்நேரத்திலும் இவர்களுக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே, இவர்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்படவேண்டியது அவசியம் என பொலிஸ்மா அதிபர் அரச தலைமைகளுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். அப்படி இருந்தும் அரசாங்கம் பொலிஸ்மா அதிபரின் சிபார்சுக்களை உதாசீனப்படுத்திவிட்டு இவ்விருவரின் விசேட பாதுகாப்புகளையும் நீக்கிவிட்டது. தமக்குக் கிடைத்த தகவலின்படி இவர்களுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. எனவே வழமையாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இரண்டு சாதாரண பொலிஸார் போதும் என்றும் அரசு காரணம் காட்டியது.

இவ்விரு உறுப்பினர்களும், ஆட்கடத்தல், கப்பம் பெறுதல், மனித உரிமை மீறல்கள், விலைவாசி உயர்வு, அரசியல் அடக்குமுறை, அரச ஆதரவுடன் இயங்கும் துணைப்படைகள், பாதாள உலகத்தினரின் சட்டவிரோத செயல்கள் தொடர்பாக வெளிப்படையாகவே விமர்சனம் செய்தவர்கள்.

துணிச்சலுடன் குற்றவாளிகளை விரல்நீட்டி அடையாளம் காட்டியவர்கள். இதனால் அரச அனுசரணையுடன் இயங்கும் துணைப்படைகள் மற்றும் சட்டவிரோதக் கும்பல்களால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது, எனவே எமது பாதுகாப்பு நீக்கப்படக்கூடாது. எமக்கு எம்.பிக்களுக்கான எந்தக் கொடுப்பனவும் வேண்டாம். பாதுகாப்பை மட்டும் வழங்குங்கள் எமக்கு ஏதாவது விபரீதம் ஏற்பட்டால் அதற்கு அரசாங்கமே பொறுப்பாகும் என்று நாடாளுமன்றத்தில் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால் அரசாங்கம் இவர்களின் வேண்டுகோளை உதாசீனப்படுத்திவிட்டது.

அதிஉயர் பீடமான நாடாளுமன்றத்தில் சபாநாயகர், பிரதமர் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையிலேயே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மனோகணேசனினதும், மகேஸ்வரனினதும் கோரிக்கைகள்

இரா.புத்திரசிகாமணி

நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ பதிவேடான ஹன்சாட்டில் அப்படியே பிரசுரிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல வீடியோ ஒளிப்பதிவு நாடாவிலும் ஒளிப்பதிவாகி உள்ளது. இதற்கு மேல் வேறு ஆதாரங்கள் எதுவும் தேவையில்லை. சாட்சிகளைத் தேடி அலையவேண்டிய அவசியம் இல்லை.

பாதுகாப்புக்கள் நீக்கப்பட்டு மூன்று வாரங்களில் மகேஸ்வரன்

(23ஆம் பக்கம் பார்க்க )

# சமஷ்டி 8

# யுத்தநிறுத்த உடன்பாடு ரத்துடன் இத்தீர்வுக்கான இணக்கமும் 'அவுட்'!

இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்கின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனுக்கும், விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கத்துக்கும் இடையில் தொடர்பாடல் மையமாக விளங்கிவந்தவர் யார் என்ற கேள்வியுடன் கடந்த வாரம் இக்கட்டுரைத்தொடரை நிறுத்தியிருந்தேன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பு. அத்தகைய அமைப்பின் மதியுரைஞர் ஒருவரோடு இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் என்ற அமைச்சரவை அந்தஸ்துடைய உயரதிகாரி நேரடியாகத் தொடர்பாடல் வைத்திருப்பாராயின் - அது அம்பலத்துக்கு வருமானால் - பெரிய சர்ச்சைக்குரிய விவகாரமாகிவிடும்.

எனவே, அத்தகைய தொடர்பாடல் இருந்ததா என்ற கேள்வியை இம்மட்டில் நிறுத்தி, அத்தொடர்பாடலுக்கும் ஓர் அனுசரணையாளர் தேவைப்பட்டார் என்ற நிலையுடன் மேலே செல்வோம்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும்

யில், பாலசிங்கத்துக்கு நோர்வேயின் ஒஸ்லோ வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட காலத்தை ஒட்டியே இவர்களுக்கு இடையே யான நட்பு

றவு இறுக்கமடைந்தது.

2000 ஆம் ஆண்டில் டிசம்பர் முதல் வாரத்தில் ஒருநாள். பாலா அண்ணன் உயிர் பிரிவதற்கு பத்துநாட்களுக்கு முன்னர் பாலசிங்கம் - சொல்ஹெய்ம் கடைசிச் சந்திப்பு நிகழ்ந்தது. லண்டன் நியூமோடனில் உள்ள பாலா அண்ணனின் வீட்டில் அந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இவ்வேளையில் நானும் லண்டனில் பாலா அண்ணனுடன் நெருக்க மாகக் கலந்

கொண்டோம்.

இலங்கை அமைதி முயற்சிகளில் உங்களிடம் பொய்யே உரைக்காத ஒருவர் பாலசிங்கம் என்பதைத் திருமதி பாலசிங்கம் அவர்களுக்கு சில

வாரங்களுக்கு முன்னர் நீங்கள் அனுப்பிய ஈ - மெயில் செய்தியில் குறிப்பிட் டிருந்தீர்கள் என்பதை நான் அறிவேன் என்பதையும், அதையே அன்றைய இரங்கலுரையில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்பதையும் சொல் ஹெய்முக்கு நான் சுட்டிக் காட்டினேன். அவர் புன்னகைத்தார்.

பாலாவுடன் இறுதிக் காலத்தில் சில வாரங்கள் நான் நெருக்கமாகக் கழித்துள்ளேன்

கோடி காட்டியதை கேட்டபோது. பாலா அண்ணன் - சொல்ஹெய்ம் இடையிலான இறுதிச் சந்திப்பின் போதோ அல்லது அவ்வேளையை ஒட்டிய ஈ-மெயில், தொலைபேசி தொடர்பாடல்களின் போதோ இருவரும் என்னைப் பற்றியும் எனது அப்போதைய லண்டன் பிரசன்னம் பற்றியும் ஏதேனும் கருத்துப் பரிமாறிக் கொண்டிருந்திருப்பார்கள் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது.

* * *

அமைதி முயற்சிகளுக்காக சொல்ஹெய்ம் ஒஸ்லோவிலிருந்து இலங்கை நோக்கிப் புறப்படும் சமயங்களில் எல்லாம் அவரது

(24ஆம் பக்கம் பார்க்க)



உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித்தீர்வு ஒன்று குறித்து ஆராயும் இணக்கப்பாட்டுக்கு விடுதலைப் புலிகளும், ரணிலின் அப்போதைய அரசும் உடன்பட்டமைக்கு பின்னணியில் - பின்புலத்தில் - நின்றுசெயற்பட்டவர்களில் முக்கியமானவர் எரிக்சொல்ஹெய்ம்.

அச்சமயத்தில் சொல்ஹெய்ம் இலங்கை இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகளைக் கையாளும் நோர்வே அனுசரணைத் தரப்பின் விசேட தூதுவராக மட்டுமே இருந்தார். அனுசரணைப் பணிக்கான முழுத் தலைமைப் பொறுப்பையும் கையாளும் அதிகாரம் அப்போதைய நோர்வேப் பிரதமரால் அச்சமயம் பிரதி வெளிவிவகார அமைச்சராக இருந்த விடார்ஹெல்கிஸனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனாலும், அமைதி முயற்சி விடயங்களை முன்நகர்த்துவதில் சொல்ஹெய்மின் பங்கும் பணியும் செல்வாக்குமே தீவிரமாகவும் செயற்றிறன் மிக்கனவாகவும் அமைந்தன.

யுத்தநிறுத்தம் மற்றும் தமிழ்மக்களின் அன்றாட - அத்தியாவசிய - பிரச்சினைகளுக்கான தீர்வு, இடைக் கால ஏற்பாடுகள் ஆகியவை குறித்தெல்லாம் மேற்படி அமைதிப்பேச்சுகளில் ஆராயப்படும் அதேசமயம், இறுதித் தீர்வை நோக்கிய திசையில் பேச்சுகள் முன்நகரவேண்டும் என்பதை விடாது வலியுறுத்தி நின்ற வர் சொல்ஹெய்ம். இது தொடர்பான சர்வதேச கருத்து நிலைப்பாட்டை பேச்சுமேசையில் இருதரப்புக்கும் அவ்வப்போது நினைவுபடுத்தி, உணர்த்தி, பேச்சுத்தரப்புகளை அத்திசையில் செயற்படத் தூண்டியவரும் - ஒருவகையில் கூறுவதானால் அத்திசையில் நெட்டித்தள்ளியவரும் - அவரே. ஒவ்வொரு சுற்றுப்பேச்சிலும் இவ்விடயம் குறித்து ஆராய்வதற்காக நேரம் ஒதுக்கி நிகழ்ச்சி நிரலில் அவ்விவகாரத்தையும் சேர்த்து, ஒரு Break through ஏற்படுத்தக் காரணமாக அவர் அமைந்தார்.

ஆனாலும், சமஷ்டித்தீர்வுக்கான வாய்ப்புக் குறித்து ஆராய்வதற்கான இணக்கத்துக்கு அப்பால் இம்முயற்சி முன்நகராமல் கிணற்றில் போட்ட கல்லாகத் தடைப்பட்டு, அமுங்கி, அப்படியே அடிபட்டு அடங்கிப் போனமை துரதிர்ஷ்டமே.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச்செய்ய அரசு இப்போது முடிவுகட்டியுள்ள நிலையில் 2002 டிசம்பர் முதல் வாரத்தில் - ஒஸ்லோ பேச்சில் - எட்டப்பட்ட, சமஷ்டித் தீர்வை ஆராய்வதற்கான இணக்கமும் அப்படியே அடிபட்டுப்போவது உறுதியாகிவிட்டது. அதுமட்டுமல்ல, இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வுகாண்பதற்கான நோர்வேயின் அனுசரணைப் பணிக்கும் சங்கு ஊதியாகிவிட்டது என்றுதான் அர்த்தம். இனியென்ன? போரழிவும் பேரழிவும்தான் மிஞ்சப்போகின்றன.

இடையிலான சமாதான முயற்சிகளில் உத்தியோகபூர்வமாக அனுசரணைப் பணி வகித்த ஒருவரே இந்த விடயத்திலும் உத்தியோகப் பற்றற்ற அனுசரணைப் பணி வகித்தார் என்பது கவனிக்கத்தக்க விடயம்.

அவர் வேறு யாருமல்லர். இலங்கை சமாதான முயற்சிகளுக்கான அனுசரணைப் பணிகளை நோர்வே சார்பில் மேற்பார்வை செய்துவரும் அந்நாட்டு அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தான் அவர். ('எரிக் சொல்ஹெய்ம்' என நாம் அவரது பெயரைக் குறிப்பிடுவது தவறு. 'எரிக் சூல்ஹெய்ம்' என்பதே சரியானது என பாலா அண்ணன் அடிக்கடி சுட்டிக்காட்டுவார்)

மதியுரைஞர் பாலாவின் மரணத்தை அடுத்து லண்டனில் இடம்பெற்ற இறுதி நிகழ்வில் சொல்ஹெய்ம் ஆற்றிய - இரத்தினச் சுருக்கமான - இரங்கலுரை மிக முக்கியமானது.

"இலங்கை அமைதி முயற்சிகள் தொடர்பான விவகாரத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளில் எனக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் பொய்யுரைக்காத ஒரு சிலரில் பாலாவும் ஒருவர்" - என்று உணர்ச்சி மேலிட சொல்ஹெய்ம் தனது இரங்கலுரையில் குறிப்பிட்ட கருத்து, அந்த இறுதி நிகழ்வு மண்டபத்தில் கூடியிருந்த அனைவரது மனதையும் தொடத் தவறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாலசிங்கம் தம்பதியர் - சொல்ஹெய்ம் இடையேயான நட்புறவு ஆழமானது. ஆத்மார்த்தமானது.

1999 - 2000 ஆம் ஆண்டு காலப்பகுதி

துரையாடி வந்தேனாகிலும் அன்றைய தினம் காலையில் பாலா அண்ணனைச் சந்திக்க சொல்ஹெய்ம் வருவதால் அந்தச் சந்திப்புக்குஇடையே குறுக்கே நிற்க விரும்பாததாலும், எனக்கு லண்டனில் வேறு வேலைகள் இருந்ததாலும் பாலா அண்ணனுடன் நிற்காமல் புறப்பட்டு வேறு அலுவல்களைக் கவனிக்கச் சென்றுவிட்டேன்.

அடுத்த நாள் காலையில் பாலசிங்கம் தம்பதியரை மீண்டும் சந்தித்தபோதுதான் முதல்நாள் சொல்ஹெய்முடனான உரையா

**- வித்தி -**

டல் விடயங்களை அறியமுடிந்தது.

அது ஓர் உணர்ச்சிகரமான சந்திப்பாக அமைந்தது. அடுத்த ஓரிரு வாரத்தில் பால

## ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுத் தொடர் - XV

சிங்கம் இவ்வுலகை விட்டு நிச்சயம் பிரியப் போகின்றார் என்ற உண்மையை பாலாவும் அவரது நண்பர் சொல்ஹெய்மும் பரிபூரணமாக உணர்ந்த நிலையில்- மீண்டும் ஒரு தடவை இருவருக்கும் இடையில் சந்திப்பு நிகழாது என்று உறுதியான கட்டத்தில் - நீண்ட பல மணி நேரம் இருவரும் உரையாடி, உறவாடிப் பிரிந்தனர். கண்ணீர் மல்க, விக்கித் தடுமாறி, பாலாவுக்கு விடை கொடுத்து வீட்டிலிருந்து புறப்பட்டார் சொல்ஹெய்ம் என நான் அறிந்து கொண்டேன்.

* * *

பாலா அண்ணனின் இறுதி நிகழ்வின் போது, அவரது உடல் தாங்கிய பேழையை இறுதி ஊர்வலத்துக்காக வாகனத்தில் ஏற்றிய பின்னர் ஓரிரு நிமிடங்கள் என்னுடன் தனித்து உரையாடினார் சொல்ஹெய்ம். இருவரும் நேசத்துடன் அரவணைத்து பாலா அண்ணனின் பிரிவை ஒட்டிய எமது துயரைப் பகிர்ந்து

என்பதை பாலசிங்கமே தன்னிடம் குறிப்பிட்டார் எனக் கூறிய சொல்ஹெய்ம், ஆகவே என்னிடம் இருந்து பாலா பற்றிய கட்டுரைகள் ஏதும் வெளிவருமா என்றும் கேட்டார்.

*"கட்டுரைகள் அல்ல. முடியுமானால் கட்டுரைத் தொடரே வரைவேன்"* - என்றேன்.

அச்சமயம் எனக்கு ஆழமான ஓர் ஆலோசனையை, சற்று அழுத்தமான குரலில் அவர் குறிப்பிட்டார்.

*"நீர் கட்டுரையோ, தொடரோ எழுதுவதற்குப் பொருத்தமான காலம் இதுவல்ல. வேளை வரும். அதுவரையிலும் பொறுத்திரும். அவசரப்படாதீர். எழுதும் கட்டுரையோ, தொடரோ, புத்தகமோ ஆங்கிலத்திலும் பிரசுரமானால் நாங்களும் வாசித்தறிய முடியும்."* - என்றார் சொல்ஹெய்ம்.

நான் என்ன எழுதப் போகிறேன், அல்லது எழுத வேண்டும் என்பது குறித்து நான் ஏதும் சொல்ஹெய்மிடம் பிரஸ்தாபிக்கவில்லை. பிறிதொருவேளையில் நான் எழுதக் கூடியவை - எமது மக்களுக்கு வெளியிட வேண்டியவை - என்று நானும் பாலா அண்ணனும் எங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்ட விவகாரத்தை, பாலா அண்ணனின் இறுதிக் கிரியை சமயத்தில் சொல்ஹெய்ம் என்னிடம்


### நிரூபித்துக் காட்டும் என் மலையான மாந்திர சக்தி

அதிசயம் ஆனால் உண்மை



46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திரிகையில் அறிமுகப்படுத்துவது, எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் மேலும் எனது மாந்திரிக ஜோதிடம் கலந்த நானாந்த சேவையைக் கண்டறிய இதோ எனது வெப் தளம். www.drpksamy.com. குறிப்பாக மாந்திரிக துறையில் வாங்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே.

வெளிநாட்டவர்களுக்கு விசேட 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு. 0094 112470615

**Prof. P.K.SAMY (J.D.G.A.N.) JP** ஐயா

**SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.**

NO- 162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO-13.

0112470615, 0112 342463, 0012342464 Fax: 0094 11 2344831

நுவரெலியாவில் என் நிறுவனம் - துர்க்காதேவி ஆலயம்- இல.83, கண்டி வீதி நுவரெலியா. Tel: 052 2222508

சுடர் ஒளி
ஜன.06.-ஜன.12 2008
85, ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0114734401—6
பாக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்

2008ஆம் ஆண்டும் பிறந்துவிட்டது. கடந்த ஆண்டு யுத்தம், ஆள்கடத்தல்கள், படுகொலைகள், சித்திரவதைகளுடன் கடந்துபோனது. முற்றிலும் சமாதானம் இல்லாத ஆண்டு அது. அடுத்த ஆண்டு எப்படி இருக்கப்போகிறதோ என்ற பீதி சகலரிடமும் காணப்பட்டது. 31ஆம் திகதி இரவும் அப்படித்தான் கழிந்தது. அடுத்தநாள் காலை இடம்பெற்ற சம்பவம் சகலரையும் அதிர்ச்சியில் உறைய வைத்து விட்டது. ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சந்திர நேரு, ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் வரிசையில் தமிழ்மக்களுக்காகக் குரல் கொடுத்து வந்த மற்றும் ஒரு தலைவரை தமிழ்தேசம் இழந்து நிற்கிறது.

மகேஸ்வரன் இளம் அரசியல்வாதி. துணிச்சலோடு கருத்துத் தெரிவித்து வந்தவர். ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்தவாறே தமிழ்மக்களுக்காக குரல் கொடுத்து வந்தவர்.

தமிழ்மக்களுக்காக தனது கட்சியின் கொள்கைகளையும் மீறி இவர் செயற்பட்டதை எவரும் மறக்கமுடியாது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதை நோக்கமாகக் கொண்டு கொண்டுவரப்பட்ட அவசர காலச் சட்டம்நீடிப்புப் பிரேரணைக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக்கட்சி வாக்களித்து வந்த போதிலும் மகேஸ்வரன் எதிராகவே வாக்களித்துவந்தார். தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களுக்கு மரணம்தான் பரிசு என்பதை குமார் பொன்னம்பலம் முதல் தொடராக இடம்பெறும் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

மகேஸ்வரன் படுகொலையை ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கண்டிக்கிறது. ஐக்கிய தேசியக்கட்சி கண்டிக்கிறது. ஈ.பி.டி.பி. கண்டிக்கிறது. பெரும்பாலும் சகல தரப்பினருமே கண்டிக்கிறார்கள். அப்படியானால் யார் செய்தார்கள்? அவரது கருத்துக்களை - நடவடிக்கைகளை ஜீரணிக்க முடியாதவர்கள் சட்டத்தைத் தமது கையில் எடுத்துக் கொண்டு அராஜகம் புரிந்துள்ளனர்.

தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கவேண்டும் என்றும் மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகவே கூறியிருந்தார். தமது பாதுகாப்புக் குறைக்கப்பட்டிருப்பது குறித்தும் அவர் அச்சம் வெளியிட்டிருந்தார். இப்படியான நிலைமையிலேயே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது. இதற்கான பொறுப்பை அரசாங்கம்தான் ஏற்கவேண்டும். அரசாங்கம் யதார்த்த நிலையை புரிந்துகொண்டு செயற்படத் தவறிவிட்டது.

ஏற்கனவே ஒருதடவை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயங்களுடன் தப்பிய மகேஸ்வரனின் உயிருக்கு பெரும் அச்சுறுத்தல் இருந்த போதும்- தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அண்மையில் நாடாளுமன்றத்தில் மகேஸ்வரன் சுட்டிக் காட்டிய நிலையிலும்- அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு விலக்கப்பட்டது ஒரு பழி வாங்கும் நடவடிக்கை ஆகும். மகேஸ்வரனை ஒழித்துக் கட்டுவதற்கு இந்த நடவடிக்கை நன்கு பயன்படுத்தப்பட்டுவிட்டது.

இலங்கையில் இடம் பெற்று வரும் இந்த படுகொலைகள் குறித்து சர்வதேசம் என்ன செய்யப் போகிறது என்பதே இன்றைய கேள்வி.

தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்காக- அவர்களுக்கு எதிராக பேரினவாத அரசுகளால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக - குரல் எழுப்பி வந்தவர்களில் மனோ கணேசன் நாட்டை விட்டே வெளியேறும் நிலைமை ஏற்பட்டது. மகேஸ்வரன் இந்த உலகை விட்டே வெளியேற்றப்பட்டுவிட்டார். தற் போது அரசு ஆரம்பித்திருப்பது புலிகளுக்கு எதிரான யுத்தம் அல்ல. முழு தமிழ் தேசியத்துக்கும் எதிரான யுத்தமே! இதன் விளைவுகள் தான் தற்போதைய படுகொலைகள்.

# சோகத்தில் வாழும் குடாநாடும் சோம்பேறிகளாகும் அலுவலர்களும்!

பாடசாலைக்குச் செல்வதற்கு பிள்ளைகள் தான் பின்னடிக்கிறார்கள் என்றில்லை. யாழ். குடாநாட்டில் பெரியவர்களும் இன்று அலுவலகம் செல்ல விருப்பப்படுவதில்லை. வேலைக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்பது வாழ்க்கை முறையில் கட்டாயமாகிறது. குடாநாட்டில் கூடுதலான பெரியவர்கள் நிர்ப்பந்தத்தின் மத்தியில் அலுவலகத்திற்குச் செல்கின்றனர். பலர் வேலைக்குப் போக விருப்பப்படுவதில்லை. இன்றைய காலகட்டத்தில் குடாநாட்டில் வேலை கிடைப்பது என்பது குதிரைக் கொம்பாக உள்ளது. அவற்றுக்கும் போட்டிகள் ஏராளம்.

நாம் வேலை செய்கின்ற சூழலும், நம்முடன் பணிபுரியும் சக ஊழியர்களும் நமக்குப்பிடிக்காமல் போவதுதான் வேலை பிடிக்காமல் போவதற்கு முதற்காரணம்.

அதிகாரிகளின் அச்சுறுத்தல்கள், உத்தியோகஸ்தர்களின் காட்டிக்கொடுப்பு, கீழ் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்களின் ஒத்துழையாமை போன்றன உட்பட பல்வேறு காரணங்கள் எமது மனோநிலையைப் பாதிப்பதால் எமது பணிக்குச் செல்ல தயக்கம் காட்டுகிறோம்.

இன்று குடாநாட்டில் உள்ள நிறுவனங்களின் அலுவலக நண்பர்களிடையே ஆத்மார்த்தம் இல்லை. அனைவரும் ஏனோதானோ என்று பழகுகிறார்கள். ஊழியர்களிடையே நெருக்கம்



இல்லை. பக்கத்து இருக்கைக்காரருடன் உறவு இல்லை. இதனால் அலுவலக நேரம் முழுவதும் தேவையற்ற 'மன அழுத்தம்'.

தான் வேலை செய்யும் நிறுவனம் பிடிக்கவில்லை என்றோ, தன் வேலை பிடிக்கவில்லை என்றோ, தன் அதிகாரியைப் பிடிக்கவில்லை என்றோ 75 சத வீதமான உத்தியோகஸ்தர்கள் புலம்புவது சகஜமாகி வருகிறது. இவர்களின் சலிப்பு மற்றவர்களையும் தொற்றிக் கொள்கிறது.

### நூலகமாகும் அலுவலகம்

குடாநாட்டில் உள்ள அரச அலுவலகமும் சரி, தனியார் அலுவலகமும் சரி எந்த ஓர் அலுவலகத்திலும் எல்லோருமே திறமையாகப் பணியாற்றுவதில்லை. ஒரு சிலரே ஒழுங்காக வேலை செய்கிறார்கள். பலர் வேலை செய்வதாகக் காட்டிக் கொண்டு வீண்பொழுது கழிக்கிறார்கள். வேலையே செய்யாமல் சம்பளம் பெறுபவர்களும் இருக்கிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால் வேலை செய்யாதவர்களின் பணிச்சுமையும் திறமையாக வேலை செய்யும் அந்த ஒருசிலரின் தலையில் விழுத்துவது தான். அதனால்தான் எப்போதும் வெறுப்பும் வேதனையும்



உத்தியோகஸ்தர்களைத் தாக்குகின்றன. வேலைக்கு வருபவர்கள் எல்லோரும் ஒரே மன நிலையில் வருவதில்லை. வீட்டுப் பிரச்சினைகள், பயணங்களில் தோன்றும் பிரச்சினைகள் போன்ற பல்வேறு மனோநிலையில் அலுவலகத்திற்கு வருவதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவ்வாறான நிலையில் வரும்போது அலுவலகத்திலும் வேலைப்பளு அதிகரிப்பின் மறுநாள் வேலைக்கு வரத் தயக்கம் காட்டுவதில் காரணமில்லாமல்

## புரிந்துணர்வு இன்றேல் புதுயுகம் இல்லை

இல்லை. அதிக அளவு அலுவலர்கள், ஊழியர்களைக் கொண்ட அலுவலகங்களில் இவ்வாறு செயற்பாடுகள் உள்ளதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். ஒரே அலுவலகத்தில் ஒருசிலர் வேலையைச் செய்து முடிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் போராடிக் கொண்டிருக்கும் போது வேறு சிலர் அரட்டை அடிப்பதிலும் புதினப் பத்திரிகைகள், தொடர் கதைப் புத்தகங்கள் படிப்பதிலும் அக்கறை கொண்டிருக்கின்றனர். தனது கடமையுடன் போராடிக் கொண்டிருப்பவருக்கு உதவி செய்து கரை சேர்க்கும் எண்ணம் ஏனைய அலுவலர்களுக்கு இல்லாமல் போகிறது.

### அலுவலக உறவு

என்னுடைய வேலையை மட்டும்தான் செய்ய வேண்டும் மற்றவரின் வேலையை நான் ஏன் செய்ய வேண்டும் என்ற சுயநல குணம் ஒருசிலர் மத்தியில் இன்றும் உள்ளது. தன்னுடைய வேலையை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்காமல் தானே அனைத்து வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்பவர்களும் உள்ளனர்.

எனக்கு அவ் வேலை இல்லை என தட்டிக்கழிப்பவர்களும் அலுவலகங்களில் உள்ளனர்.

நம்மிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றலாம். சிறுசிறு சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். ஆனால் அவற்றையெல்லாம் அப்போதே மறந்து விட வேண்டும். அதை விட்டு நடந்ததையே நினைத்து நினைத்து பழி வாங்கும் எண்ணத்துடன் நடக்கக் கூடாது.

காலை 8.00 மணிக்கு ஒன்று கூடி மாலை 4.00 மணிக்குப் பிரியும் உறவுதான் அலுவலக உறவாகும். இரு அலுவலர்களிடையே சச்சரவு ஏற்பட்டால் அனைத்து அலுவலர்களும் வேடிக்கை பார்ப்பதுடன் அதனைப் பெரிதுபடுத்தியும் பேசுவார்கள். அந்த இருவருக்கும் ஏற்படும் சச்சரவினைத் தீர்த்து சுமுக நிலைக்குக் கொண்டுவர ஏனையோர் முயல்வதில்லை.

இன்றைய நடைமுறை வாழ்க்கையில் சுபீட்சமும் மகிழ்ச்சியும் மிக மிகக் குறைவு. வாழ்க்கை முழுவதும் கவலைகள், சலனங்கள், பிரச்சினைகள், போராட்டங்கள், எதிர்நீச்சல்கள் தான். எமது ஐந்து விரல்களும் ஒரே அளவாக இல்லை. எமக்குப் பிடித்த மாதிரி எல்லோரும் நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் விரும்புவது எவ்வளவு முட்டாள்தனம்.

வேலைக்குச் செல்லும் பெண்களின் நிலை பெரிதும் பரிதாபத்திற்குரியது. விரும்பியோ, விரும்பாமலோ இரட்டைச் சுமையைச் சுமக்கிறார்கள். சுமக்கவும் முடியாமல் இறக்கி வைக்கவும் வசதியில்லாமல் தவிக்கிறார்கள். வீட்டுப்பிரச்சினைகளை தீர்த்து விட்டு அலுவலகம் செல்லும் வழியில் பஸ் பிரச்சினை. அதனையும் முடித்து அலுவலகம் சென்றால் அலுவலகத்தில் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

### புரிந்துணர்வு வேண்டும்

பெண்கள் தான் கர்ம சிரத்தையுடன் பணி புரிவார்கள், ஆண்கள் ஒழுங்காக வேலை செய்ய மாட்டார்கள் என்ற பொதுக் கருத்து அலுவலகங்களில் இருந்தது. ஆனால் இன்று அது தலை கீழாக மாறி விட்டது. இன்று குடாநாட்டில் அலுவலகத்திற்குள் வந்ததும் எத்தனை எத்தனை பேர் தலையில் விக்ஸ் பூசுவதைக் காண்கிறோம்.

**தென்னவன்**

அவ்வாறு விக்ஸ் பூசுபவர்களில் எத்தனை பேருக்கு உண்மையில் தலைவலி என்று யார் கண்டது. குறித்த நேரம் வரை அடிக்கடி விக்ஸ் தலையில் பூசுபவர்கள் பின்னர் அரட்டை அடிப்பதும் வாசிப்பில் ஈடுபடுவதும் சகஜமான நிகழ்வாகி விட்டது. அடுத்தவரை ஏமாற்றுவதில் ஆண் என்ன, பெண் என்ன? யாராக இருந்தாலும் ஒரே நிலைதான். நமக்கெனத் தார்மீகப் பொறுப்புள்ளது என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். நாம் செய்யும் பணியை மனம் விரும்பி ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். எரிச்சலுக்கோ, பொறாமைக்கோ, பகைக்கோ இடம்கொடுக்கக் கூடாது. பரஸ்பரம் புரிந்து கொள்தலும் விட்டுக் கொடுத்தலும் வேண்டும். வீட்டில் ஆதரவாகவும் ஆறுதலாகவும் அனுசரணையாகவும் இருந்து பரிவுடன் அன்புடன் பழகினால் வேதனைகள் சாதனைகளாக மாறும். வேலையே ஒரு வெற்றியாக மாறும்.




# பெண்கள் ஜீன்ஸ் அணிவதால் பிரச்சினை ஏற்படுமா?

கேள்வி: ஆண்கள் ஜீன்ஸ் (Jeans) உடை அணிவதால் மலட்டுத்தன்மை உண்டாகும் என்று சமீபத்தில் படித்தேன். அது உண்மையா - அப்படியானால் பெண்கள் ஜீன்ஸ் அணிவதால் ஏதும் பிரச்சினை ஏற்படுமா? விளக்கம் தருக?

பதில் : மேலை நாட்டில் குறிப்பாக அமெரிக்காவின் தென்பகுதியில் குதிரைகளிலிருந்து மாடுகளை மேய்க்கும் பண்ணைத் தொழிலாளர் - குதிரைகளில் ஏறி இறங்க வசதியாக - தடித்த துணிகளில் இறுக்கமான காற்சட்டைகளைத் தைத்து உபயோகித்தார்கள். இவற்றில் முழங்கால் பகுதிக்கு - பிட்டத்துக்கு பின்புறத்திற்கு - பாதுகாப்பாக தோல் (Leather) வைத்து தைத்தார்கள். தங்களது சாவிக்கொத்து, சிறுகத்தி மற்றும் நீர் போத்தல்களை காற்சட்டையில் கொழுவி வைத்துக் கொள்ள, கைத் துப்பாக்கிகளை செருகிக்கொள்ள இரும்பாலான வளையங்கள், பட்டிகளை காற்சட்டையில் பொருத்திக் கொண்டார்கள். பலமணிநேரம் பகலில் குதிரை மேல் இருந்து பணிபுரிய இந்த காற்சட்டைகள் உதவின. இந்த மாட்டுப் பையன்கள் (Cow Boys) தங்கள் தொழிலுக்காக உருவாக்கிய இந்தக் காற்சட்டைகள்புதிய மோஸ்தர் வடிவெடுத்து Jeans என்ற பெயரில் தற்போது உலகெங்கும் பரவி வந்துள்ளன. இந்த பண்ணையாட்கள் தொடர்ந்து போட்ட காற்சட்டைகள் உபயோகத்தினால் வெளிறி நிறம் மாறியதை தற்போது ஜீன்ஸ்களில் சாயக் கலவைகளால் அதே தோற்றமளிக்கச் செய்துள்ளோம்.

ஜீன்ஸ் எமது பணிகளுக்கு மிகவும் உதவியாய் இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆணும் பெண்ணும் பஸ்களில் ஏற இறங்க என பல வேலைகளுக்கு என்கின்ற பலதரப்பட்ட விஷயங்களுக்கு ஏற்ற உடையாக இது கருதப்படுகின்றது .

சமீபத்தில் நடைபெற்ற ஆய்வுகளில் ஜீன்ஸ் காற்சட்டைகள் அரைப்பகுதியில் இறுக்கமாக இருப்பதால் அப்பகுதியில் உடல் வெப்பம் ஓரிரு டிகிரி வெப்பம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆண்களின் ஜீவ அணுக்களாக விந்தணுக்கள் (Sperms) விதை (Testis)யில்தான் உருவாகின்றன. இவைகள் உருவாக ஏதுவாக உடல் வெப்பத்திலும் குறைந்த வெப்ப சூழ்நிலை தேவை என்பதால் கருவில் வயிற்றில் உருவாகிய விதைகள் மெல்ல மெல்ல கீழே இறங்கி வருகின்றன. உடலுக்கு வெளியே வருகின்றன. இந்த இயற்கை நியதியை மீறும் வகையில் இறுக்கமாக ஜீன்ஸ் அணிபவர்கள் விதைப்பைகளை உடலோடு சேர்த்து இறுக்கமாக வைத்துக்கொள்வதால் விந்தணுக்கள் உற்பத்தியாக வேண்டப்படும் வெப்பநிலையைவிட அதிகமான வெப்பநிலைச் சூழலில் விதைகள் இருக்கின்றன. இதனால் விந்தணுக்களின் எண்ணிக்கை குறைவதாக அறியப்பட்டது. இதனால் ஆண் மலட்டுத்தன்மை உருவாகும் என அஞ்சப்பட்டது. பெண்களுக்கு இத்தகைய உடலமைப்பு இல்லாததாலும் வெப்ப மாற்றம் கேடு இல்லாததாலும் ஜீன்ஸ் அணிவதால் மலட்டுத்தன்மை ஏற்படாது.

ஆனால், இந்த மாதிரியான இறுக்கமான உடை அணிபவர்கள் ஆணோ, பெண்ணோ யாராக இருந்தா லும் இடைப்பகுதி காற்றோட்டமில்லாமல் இருப்பதாலும் வியர்வை தேங்குவதாலும் சருமநோய்கள் - முக்கியமாக பங்கசுத் தொற்றுகள் - ஏற்பட வாய்ப்புகள் அதிகம் என்பதை கவனத்தில் கொள்க.

சமீபத்தில் இதயநோய் பற்றிய விழிப்புணர்வை இளைஞர் மத்தியில் வளர்க்க, பரப்ப ஜீன்ஸ் காற்சட்டை அளவுகளை பிரித்தானிய இதய நிபுணர் சங்கம் உபயோகப்படுத்தியது ஒரு சுவையான செய்தி.

'உங்கள் ஜீன்ஸ் அளவை அவதானியுங்கள். ஆண்களே உங்கள் இடுப்பளவு 38 அங்குலத்திற்கு அதிகமா? பெண்களே உங் கள் ஜீன்ஸ் இடுப்பளவு 35 அங்குலத்திற்கு அதிகமா? உங்களுக்கு இதய நோயும் நீரிழிவும் ஏற்படும் சாத்தியமும் ஒவ்வொரு அங்குல அதிகரிப்போடு பத்துவீதம் அதிகரித்துக் கொண்டே போகின்றது ஜாக்கிரதை. இப்படி ஓர் அட்டை (Tag) ஒவ்வொரு ஜீன்ஸ் காற்சட்டையிலும் கட்டித் தொங்க விடப்பட்டுள்ளது. இதனால் தமது உடல் பற்றிய விழிப்புணர்வு இளைஞரிடையே வளரலாம் என்று மருத்துவ நிபுணர் சங்கம் நம்பியுள்ளதாகத் தெரிகிறது.

கேள்வி: எனது மகன் 6 மாதம். அடிக்கடி வயிற்றோட்டம் ஏற்படுகின்றது. மருந்து எடுத்தால் குணமாகின்றது. வீட்டில் உள்ள பெரியோர்கள் -இப்படி அடிக்கடி வயிற்றோட்டம் ஏற்பட பல் முளைப்பதுதான் காரணம், மருந்து செய்யத் தேவையில்லை என்கின்றார்கள். உங்கள் ஆலோசனை தேவை.

பதில்: உங்கள் மகனுக்கு தாய்ப்பாலா, புட்டிப்பாலா ஊட்டுகின்றீர்கள்? தாய்ப்பால் ஊட்டப்படும் குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் போன்ற சமிபாட்டு உறுப்பு சம்பந்தமான நோய்கள் இலகுவில் ஏற்படுவதில்லை. புட்டிப்பால் ஊட்டும் குழந்தைகளுக்கு இப்படி வயிற்றோட்டம் ஏற்பட சரியாக சுத்திகரிக்கப்படாத பால்போத்தல், கொதிக்கவைக்கப்படாத நீர், சீனி மற்றும் பாலைக் கலப்பவர்கள் சுகாதாரம் பேணாமை ஆகியவை காரணங்கள் ஆகின்றன. ஏனவே, புட்டிப்பால் ஊட்டுபவர்கள் மேற்கூறிய விஷயங்களில் கவனம் எடுக்கவேண்டும். அடுத்ததாக, சில குழந்தைகளுக்கு பாலில் உள்ள Lactose எனப்படும் சீனிச்சத்து அவர்களின் குடலில் ஒவ்வாமையை ஏற்படுத்தி விடுவதால், இந்த லக்ரோஸ் இலகுவில் குடலிலிருந்து உறிஞ்சப்படாத நிலையில் வயிற்றோட்டம் ஏற்படலாம். இதனை Lactose Intolerance என்று கூறுவார்கள். இதற்கு சில பரிசோதனைகள் செய்தே அறிந்துகொள்ளலாம். இந்தக் கோளாறுதான் வயிற்றோட்டத்திற்கு காரணம் என்று அறியப்பட்டால் லக்ரோஸ் உள்ள பால்மா வகைகளை தவிர்த்து சோயா புரத பால்வகையை உபயோகிக்க வேண்டும்.

இப்பொழுது உங்கள் குழந்தைக்கு ஆறுமாதம் ஆகின்றபடியால் படிப்படியாக கடின உணவுப் பதார்த்தங்களை ஆரம்பிக்கும் காலம் வந்துவிட்டது. இந்தக் காலத்தை Weaning Period அதாவது மெல்ல மெல்ல முழுக்க முழுக்க பாலையே உணவாகக் கொள்ளும் குழந்தைக்கு கடின உணவுப் பதார்த்தங்களை அறிமுகப்படுத்தி - ஆரம்பிக்கும் பருவம் இது. இதனால், பால் உணவு ஊட்டப்படும் சந்தர்ப்பம் தினம் இரண்டாக அல்லது மூன்றாக குறைக்கப்படுகின்றது. கடின உணவுக்கு பழக்கப்படுத்தப்பட்ட குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் போன்ற கோளாறுகள் ஏற்படுவது குறைவு. எனவே, நீங்களும் உங்கள் குழந்தைக்கு கடின உணவுகளை மெதுவாக பழக்கத் தொடங்கலாம்.

அடுத்ததாக - பல்முளைக்கும் பருவத்தில் வயிற்றோட்டம் ஏற்படுவது சாதாரணமானது என்று ஓர் அபிப்பிராயம் நம் முதாதையரிடையே உள்ளது. இதற்குக் காரணங்கள் பல்முளைப்பதால் அல்ல. பல்முளைக்கும்போது முரசில் ஏற்படும் தினவு அல்லது வலி குழந்தையை கையில் கிடைக்கும் எந்தப் பொருளையும் வாயில்வைத்து கடிக்கச் சொல்லும். இப்படி கடிக்கப்படுகின்ற

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாாவச்சி
> மாவத்தை,கொழும்பு-14.

பொருட்களில் உள்ள தொற்றுகள் வயிற்றோட்டத்தை நிச்சயம் உண்டாக்கும். எனவே, உங்கள் குழந்தைக்கு இந்தப் பழக்கம் உண்டானால் அவற்றிற்கு Soothing Ring போன்ற பிளாஸ்ரிக் வளையங்கள், மெல்லுவதற்கு உகந்த பிஸ்கட் வகைகளைக் கொடுங்கள். வளையங்கள் நன்றாகக் கழுவப்பட்டு சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியம்.

கேள்வி: வயது 25. எனக்கு சிறிது காலமாக மாமிச உணவுகளில் விருப்பமில்லை. காய்கறி, கீரை வகைகளையே உண்ணுகின்றேன். தனியே காய்கறி வகைகளை மாத்திரம் உண்பதால் புரதச்சத்து கிடைக்காது. எனவே, மாமிச உணவை தவிர்க்கவேண்டாம் என்று சொல்கின்றார்கள். இது உண்மையா? மேலும் காய்கறி வகைகளில் புரதச்சத்து உள்ளவற்றை அறியத் தரவும்.

பதில்: புரதச்சத்து நமக்குப் பலம், எதிர்ப்புச்சக்தி என்பவற்றை தருவதோடு உடலில் உள்ள கலங்களின் தேய்மானங்களைப் புதுப்பிக்கவும் உதவுகின்றது. எனவே, எமது உடல், உள வளர்ச்சிக்கு புரதச்சத்து மிக அவசியம். நாம் சாப்பிடும் உணவில் உள்ள புரதச்சத்து உடலில் அமினோ அமிலங்களாக மாற்றப்பட்டு இந்த அமினோ அமிலங்கள் திரும்பவும் ஒன்றாக்கப்பட்டு உடலுக்கு தேவையான புதுப்புரதங்களாக மாற்றப்படுகின்றன.

புரதங்கள் என்று பொதுவாக கூறினாலும் புரதங்கள் அமிலங்களின் கூட்டுக்கலவை. அதில் ஒன்பது அமினோ அமிலங்கள் முக்கியமானவை. இவை எமது உடலின் தேவை. இவை உணவிலிருந்து கட்டாயம் பெறப்படவேண்டும்.இவற்றின் முக்கியவேலை உடல்வளர்ச்சி, திசுக்களை புதுப்பித்தல். மற்ற அமினோ அமிலங்கள் நமது உடலிலேயே உற்பத்தியாக்கப்படுகின்றன. மிகச்சிறந்த புரதம் உள்ள உணவு என்பது உடலில் முழுவதும் உறிஞ்சப்பட்டு மிகவும் குறைவான அளவே தேவையற்றவை என வெளித்தள்ளப்படுபவை. இவற்றை High Biological Value First Quality Protein என்பார்கள். இந்த ஒன்பது அமினோ அமிலங்களும் இருப்பதால் சிறந்த புரதச்சத்து உள்ளவை எனக் கூறப்படுபவை முட்டை, பால், மீன், மாமிசம், கோழி போன்ற உணவுகளே. சைவ உணவில் இந்த உணவுகளுக்கு மிக அருகில் வருவது சோயா புரதம் மட்டுமே. மற்றப்படி சைவ உணவுகளில் புரதச்சத்தானது தானியங்களில் அரிசி கோதுமை, பயறு வகைகள், பருப்பு வகைகள், வேர்க்கடலை எனப்படும் கச்சான் கடலை போன்றவற்றிலிருந்து கிடைக்கும். ஆனால், இவைகளில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு முக்கிய அமினோ அமிலங்கள் குறைவாக இருக்கும்.

இந்த விஞ்ஞானபூர்வமான உண்மைகள் தெரியாமலே எமது முன்னோர் பல உணவுகளை சரியான விகிதத்தில் கலந்து உணவு தயாரிக்கப் பழகிக்கொண்டார்கள். ஒரு தானியத்தோடு பருப்பு வகையைச் சேர்த்துத் தயாரிக்கும்போது - உதாரணமாக இட்லி, பொங்கல், தோசை என்று செய்யும்போது - ஒன்றில் இல்லாத அமினோ அமிலச் சத்து மற்றொன்றில் இருப்பதால் ஒரே உணவில் எமக்குத் தேவையான புரதம் முழுமையாகக் கிடைக்கின்றது. இது இன்று விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டும் உள்ளது. எனவே, நீங்கள் காய்கறி உணவு சாப்பிடுவதால் புரதக்குறைபாடு ஏற்படும் என்று அஞ்சத் தேவையில்லை. நான்கூறிய கருத்துக்களை மனதில்வைத்து உணவு உட்கொள்வதால் உங்களுக்கு போதிய புரதம் கிட்டும்.

# சிறு எம்பரங்கள்

## திருமண சேவை

**Vani International Marriage Bureau (VIMB) Govt.Regd. (International)** ✣உங்கள் பிள்ளைகளுக்காக பெருந்தொகையான பணத்தை செலவு செய்தும் நிரந்தர குடியுரிமை (PR) உடன் மேற்குலக நாடொன்றில் வாழ வழி செய்ய முடியவில்லையா? நீங்கள் அதை நிறைவேற்று முகமாக இலவச ஆலோசனைகளைப் பெறவும்.. ✣எல்லாச் சமூக மத குடியுரிமை (PR) உள்ள குடியுரிமை (PR) இல்லாத மற்றும் உள்நாட்டு. வெளிநாட்டு மணமக்களின் விபரங்களைப் பெறவும். பல கிளைகளைக் கொண்ட ஒரே ஒரு சர்வதேச திருமண ஸ்தாபனமாகும். தலைமை அலுவலகம்: லண்டன், பிரதான அலுவலகம்: வங்களாவடி, வேலணை. கொழும்புக்கிளை: PSJ. சிந்துஜன் - ☎ : 077 4047531 வவுனியா கிளை: S.சிந்து - ☎: 077 9776384 யாழ். கிளை: E. T. ராஜன் - ☎: 077 934 9988 இந்தியா(தமிழ்நாடு) S.K.ரூபன் -☎:0091-9941035512 மேலும் பல விபரங்களை அறிய எமது (VIMB) மணப்பந்தல் என்கின்ற வார வெளியீட்டை புத்தகக் கடையில் கேட்டு வாங்கிப்படியுங்கள். விலை ரூ.10

---

**வீடுகள் தோறு திருமணங்கள்.** நீங்கள் விரும்பும் மணமக்களைத் தேடித் தேடி அலுத்து விட்டீர்களா? திருமண உலகில் 45 வருட சேவையில் இரண்டாந் தலைமுறை கண்ட நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் எதிர்பார்ப்பின்படி, சாதி, சமய, தராதரத்திற்கு ஏற்றபடி. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மணமக்களைத் தேர்ந்தெடுத்து திருமணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். இந்திய வம்சாவழியினரின் திருமணத்திற்காக தனிப்பிரிவு தொடங்கியிருக்கிறது. வாருங்கள் திருமணத்தை நிறைவேற்றுங்கள். இயக்குனர்: புலவர், 15A, 32 ஆவது லேன். வெள்ளவத்தை கொழும்பு - 06. ☎ : 2500380 0713352215

---

SANNITHIYAN MARRIAGE SERVICE. எமது புதிய முகவரியில் இந்து, கிறிஸ்தவர்கள், Specially குருகுலம், வேளாளர், மற்றும் சகல சமூக பிரிவினர்க்குமான துரித விவாக சேவைக்கு (உள்நாட்டு, வெளிநாட்டு) தேவையான ஆவணங்களுடன் பதிவு செய்து சந்நிதியானோடு இணைந்து வெற்றி பெறுவர்கள். செல்வசந்நிதி வேலவன் சித்திரபெருந்தேர் வெள்ளோட்டம் (1984) திருவிழா காட்சிகள் (2003) D.V.D. இலவச பதிவு செய்ய காரியாலயம் வரவும். அலுவலக நேரம்: காலை 9-1 மணி 4 - 8 மணி மாலை. T.P: 0773573055. T.GUNARATNARAJAN, Sannithiyan Marriage Service, 285-1/1, Galle Road, Wellawatte. (பொலீஸ் நிலைய வாயில் எதிரே)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து உயர் கௌர குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் குடியுரிமை உள்ள வயது 26, கிரகபாவம் 46, புனர்பூசம், 8 இல் செவ்வாய், BA பட்டதாரி மணமகளுக்கு Doctor, Engineer, Accountant, BSc மணமகன் தேவை. வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். (மணமகளின் தந்தை லண்டனில் பிரபல தொழிலதிபர்) மணமகள் விரைவில் கொழும்பு வரவுள்ளார். யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் குடியுரிமை உள்ள, வயது 37, கிரகபாவம் 35, B.Sc (M.Eng) சித்திரை மணமகனுக்கு அழகிய, சிவந்த, மெல்லிய மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: (கொழும்பு) PSaJ. சிந்துஜன் (VIMB) (வங்களாவடி வேலணை), **Vani International Marriage Bureau Govt.Regd. (International)** ☎: **077 6184434, 0774047531** தலைமை அலுவலகம் **S.Ponnampalam. 211 #, Livorpool Road, London (UK)**, யாழ் கிளை. E.T. ராஜன். ☎ : 077 9349988 வவுனியா கிளை: S.சிந்து. ☎:077 977 6384 இந்தியா (தமிழ்நாடு) S.K.ரூபன் ☎:0094-9941035512 பதிவுக் கட்டணம் செலுத்திய பின்னரே எமது சேவைக்கு உட்படுத்தப்படுவீர்கள்.

---

யாழ்.இந்து குடும்பம் (சமூகத்தின் விபரம் தொலைபேசி ஊடாக) கனடாவில் குடியுரிமையுடைய 78 ஆம் ஆண்டு பிறந்த, பரணி, கிரகபாவம் 28, Accountant க்கு மணமகன் தேவை. (குடும்பத்துடன் கனடாவில்) மிக விரைவில் கொழும்பு வரவுள்ளார். யாழ்.இந்து குடும்பம் (சமூகத்தின் விபரம் தொலைபேசி ஊடாக) லண்டனில் குடியுரிமையுடைய, 39 வயது, 8 இல் செய்வாய், கிரகபாவம் 40, சித்திரை 2 ஆம் பாதம், மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: (கொழும்பு) **PSJ.**சிந்துஜன் (**VIMB**) (வங்களாவடி வேலணை) **Vani International Marriage Bureau Govt. Regd. (International)** ☎:077 6184434, 077 4047531 தலைமை அலுவலகம் **S.Ponnampalam. 211 #, Livorpool Road, London(UK)** யாழ் கிளை E.T. ராஜன். ☎:077 9349988 வவுனியா கிளை: S. சிந்து ☎:077 977 6348 இந்தியா (தமிழ்நாடு) S.K.ரூபன் ☎:0091-9941035512 நிர்வாகி (வேலணையூரான்) M.S. பொன்னம்பலம், M.S.சிற்றம்பலம் (முருகர்), சகோதரர்களின் சந்ததியினரின் ஒருவர் பதிவுக் கட்டணம் செலுத்திய பின்னரே எமது சேவைக்கு உட்படுத்தப்படுவீர்கள்.

---

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் குடியுரிமையுடைய, 77 ஆம் ஆண்டு, உத்தராட்டம், 8 இல் செவ்வாய், கிரகபாவம் 57, Computer Engineer மணமகளுக்கு பட்டதாரி/ஆங்கில அறிவுள்ள மணமகன் தேவை. யாழ்.இந்து, உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 39, உயரம் 5'9", விசாகம், 4 ஆம் பாதம், கிரகபாவம் 22-1/2, அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: PSJ. சிந்துஜன் (VIMB) (வங்களாவடி வேலணை) Vani International Marriage Bureau Govt. Regd.(International) ☎:077 6184434, 077 4047531 தலைமை அலுவலகம் **S.Ponnampalam. 211 #, Livorpool Road, London(UK)** யாழ் வவுனியா கிளை:S. சிந்து ☎:077 977 6348 இந்தியா(தமிழ்நாடு) S.K.ரூபன் ☎:0091-9941035512 பதிவுக்கட்டணம் செலுத்திய பின்னரே எமது சேவைக்கு உட்படுத்தப்படுவீர்கள்.

---

இந்து வேளாளர் 77ம் ஆண்டு பிறந்த வயது 30 நட்சத்திரம் சதயம் 3ம் பாதம் லக்கினத்தில் துலாம் உயரம் 5'7" மணமகன் U.K யில் இருக்கிறார். (P.R உள்ள ஐரோப்பிய நாட்டில் விரும்பத்தக்கது) T.P: 072 2994795

---

திருகோணமலை R.C 1979இல் பிறந்த M.Sc Structural Engineer, London இல் Work Permit உடைய மணமகனிற்கு B.Com, BBA Engineer மணமகளை எதிர்பார்க்கின்றனர். இந்து மதத்தவரும் விரும்பத்தக்கது. தொடர்பு: 0777 042707

---

முக்குலத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவில் பிரஜாவுரிமையுடைய 33 வயதான மணமகனுக்கு சகோதரி மணமகளைத் தேடுகிறார். மணமகள் விடுமுறைக்காக இலங்கை வந்துள்ளார். தொடர்பு - தேவி : 078 6036033

## மணமகள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் குடியுரிமையுடைய, 1970 ஆம் ஆண்டில் பிறந்த, 8 இல் செவ்வாய், கிரகபாவம் 60, உத்தராடம் 2 ஆம் பாதம், உயரம் 5'8", கனடாவில் கணக்காளரான மணமகனுக்கு அழகிய, சிவந்த, மெல்லிய, படித்த, மணமகள் தேவை. மணமகன் தற்போது கொழும்பு வந்துள்ளார். இன்னும் 15 நாட்கள் மட்டுமே இங்கு தங்கியிருப்பார். தீவகத்தைச் சேர்ந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு:(கொழும்பு) **PSJ.**சிந்துஜன் (VIMB) (வங்களாவடி வேலணை) **Vani International Marriage Bureau Govt.Regd.(International)** ☎ :077 6184434, 077 4047531 தலைமை அலுவலகம் **S.Ponnampalam. 211 #, Livorpool Road, London(UK)** யாழ் கிளை E.T. ராஜன். ☎:077 9349988 வவுனியா கிளை:S. சிந்து ☎:077 977 6348 இந்தியா(தமிழ்நாடு) S.K.ரூபன் ☎:0091-9941035512

## பெண்களுக்கு அதிர்ஷ்டம்

பெண்களே! நீங்களும் வாழ்க்கையில் வெற்றி பெற்று வாழ முடியும். பெண்களுக்கு கணவன்தான் நல்ல துணைவன். ஆனால் எல்லோருக்கும் நல்ல கணவன் அமைவதில்லை. வரதட்சணை, மாமியார், நாத்தனார் கொடுமை, குழந்தையில்லாமை, கணவனின் திடீர் மரணம், கைவிடப்படும் அவலம், விவாகரத்து இப்படி எத்தனை எத்தனை துன்பங்கள், துயரங்கள். அழகு, கல்வி, தொழில், காதல், திருமணத்தடை, மற்றும் வேறு எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் தொலைபேசி, நேரில், தபால் மூலமும் தொடர்பு கொள்ளலாம். இரகசியம் பேணப்படும். 49 வருட ஆராய்ச்சியும், அனுபவமும் பெற்ற அதிநவீன மனோதத்துவ நியூமராலஜி நிபுணர் பேராசிரியர் டாக்டர். ரசூல்மன்சூர் **Prof. Dr.RAZUL MANZURR (MOD MANZURR) No.198/2/A, Hill street, Dehiwala. ☎: 071-4136254, 078 - 5118019, 071- 4182713, (060) 2172645. E-mail: razulmanzurr@yahoo.com**

## வாடகை

கல்கிசையில் அறை வாடகைக்குண்டு. ஆண், பெண் இருபாலாருக்கும் பகிர்ந்தும் தங்க வசதியுண்டு. (3 பேர்) பெண்களுக்கு பாதுகாப்பான இடம். ஒருவருக்கு மாத்திரம் ரூ.6,000/-, இருவர் ரூ.8,000/-, ரூ.9,000/- 3 பேருக்கு, 4 - 6 மாதம் முற்பணம் அறவிடப்படும். தொடர்புக்கு: 077 3712040, 4210646

---

வெள்ளவத்தையில் தனியான பகுதி தொழில் பார்க்கும் ஆண்கள் மாணவர்கள் தங்கக்கூடிய வகையில் உண்டு முற்பணம் தேவையில்லை. இல.10, 46வது ஒழுங்கை வெள்ளவத்தை பெற்றோல் நிலையம் அருகே.

---

இரண்டு மாடி வீடு தமிழ் குடும்பத்திற்கு வாடகைக்கு விடப்படும். 76/3, சென் ஜேம்ஸ் வீதி, முகத்துவரம். தொடர்பு:2520865

---

காலி வீதிக்கு இணைந்தாற் போல் வியாபாரமொன்றுக்கு அல்லது வீடொன்றுக்கு பொருத்தமானது. ரூ.7500/- இல.6, சிறி குணரத்ன, வீதி கல்கிசை. T.P:2567853

---

வெள்ளவத்தை 36வது ஒழுங்கையில் அனெக்ஸில் தங்கியிருக்கும் ஆசிரியை ஒருவருடன் தங்குவதற்கு ஆசிரியை அல்லது தொழில் புரியும் பெண் ஒருவருக்கு இடமுண்டு. தொடர்பு:2363851

---

பம்பலப்பிட்டியில் 2 படுக்கையறைகள், 2 குளியலறைகள் உள்ள அப்பார்ட்மென்ட் (900sq,ft) வாடகைக்குண்டு. தொடர்பு: 071 4474426.

## தேவை

Date Entry Operator with Knowledge of Accounting Accomadation can be provided. Please forwaed you C.V. with opens of certificals within one week of this advertisement. 18/1B, Hampden Lane, Wellawatte. From. 9.30A.M. Tel: 2365829

---

Assistant Accountant / should have recogrized Qualification in Accountiy & Computer literate Age immaterial. Please forward your C.V. with two now related refereas with in 7 days of this advertisement. The Manager Human Resources, 18/1B, Hampden Lane, Wellawatte.

---

உடன் தேவை. தெகிவளையில் அமைந்துள்ள Cargo Lanka (Pvt) Ltd. இல் Reception Clerk (பெண்) தேவை. (Near. Concord. Cinema) தொடர்பு: 4203876

---

தனியார் நிறுவனமொன்றுக்கு ஆட்டோ ஓடுவதற்கு சாரதிகள் தேவை. விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி முகாமையாளர், 18/1B ஹம்டன் ஒழுங்கை, கொழும்பு-06.

---

Printing Press இற்கு வேலை தெரிந்த பழக ஆர்வமுள்ள கண்ணியமான பிள்ளைகள் தேவை. சாப்பாடும், தங்குமிடமும் கொடுக்கப்படும். Dias Place, Colombo-12. Tel: 071 4114253

## பயிற்சி வகுப்பு

அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் செயன்முறை விளக்கத்துடன் கற்பிக்கப்படும். வெளிநாடு செல்வோருக்கான குறுகியகால பயிற்சி வகுப்புக்கள், பொருட்கள் இலவசம். சான்றிதழ் வழங்கப்படும். தனிப்பட்ட முறையிலான வகுப்புக்களும் நடைபெறுகின்றன. AKSHANA BEAUTY PARLOUR. Tel: 077 6043376, 0774427153

---

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 6 வகையான Saree Blouse, 6 வகையான SHALWAR. No 36, Station Road, Wellawatte. Rennshiy. Tel: 077 9360781 (ஒவ்வொரு புதன்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வகுப்புக்கள்)

## ஜோதிடம்

அதிர்ஷ்ட விஞ்ஞானம் அதிர்ஷ்டம் தரும் அதி நவீன அதிர்ஷ்ட நியூமராலஜி எண் கணிதத்தில் 49 வருட ஆராய்ச்சியும் அனுபவமுடையவர். இலங்கை, இந்தியா, அரசியல்வாதிகள், தொழில் அதிபர்கள், சினிமா நட்சத்திரங்கள், வியாபாரிகள், இன்னும் ஆயிரக் கணக்கானவர்களுக்கும் அதிர்ஷ்டக் குறிப்புகள் அமைத்தவர். எந்த வயதிலும் செல்வம், கல்வி, தொழில், காதல், திரு மணப் பொருத்தம், திருமணமானவர்களின் வேறு பல பிரச்சினைகளுக்கும், முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். தபால் மூல சேவையும் உண்டு. இரகசியம் பேணப்படும். அதிநவீன மனோதத்துவ நியூமரோலஜி நிபுணர், பேராசிரியர் டாக்டர். ரசூல் மன்சூர் **Prof. Dr. RAZUL MANZURR, (MOD MANZURR) No.198/2/A, 1st Floor, Hill street Dehiwala. Sri Lanka. ☎: 071-4136254, 078-5118019, 071-4182713, (060) 2172645. E-mail: razulmanzurr @yahoo.com**

---

ஜெனன ஜாதகக் குறிப்புக்கள் ரேகை சாஸ்திரம் எண் சோதிடம் பார்க்கவும். உள்நாட்டு, வெளிநாட்டு குறிப்புகள் கணிக்கவும். நேரில் சந்திக்கலாம். Prof. சத்தியநாதன். 26/17-1/1, Fernando Road, Wellawatte, Colombo - 06. Tel: 2719778

---

ஸ்ரீ விஷாலினி ஜோதிடம். நம்பிக்கையுடன் வாருங்கள். சந்தோஷமாக வாழுங்கள். இந்தியாவிலும் இலங்கையிலுமாக 25 வருட காலத்திற்கும் மேலான அனுவமிக்க திருமதி டாக்டர் ராஜேஸ்வரன் கௌரி லட்சுமி (அம்மா) அவர்கள் நேரடியாகவும், மின்னஞ்சல் மூலமாகவும். உங்களது சகல பிரச்சினைகளுக்கும். தீர்வை பெற்றுத் தருகிறார். ஜாதகம் பார்த்தல், ஜாதகம் கணித்தல், மாணவர் கல்வி, திருமணத் தடைகள், குழந்தைப் பேறு இல்லாமை, தொழிற் பிரச்சினைகள், பெயர் மாற்றம், அதிஷ்டக்கற்கள், சகல தோஷங்களுக்குமான பரிகாரங்கள். தொடர்பு: Mrs. Dr R. Gowri Luxmi.78/1, New Chetty Street, Colombo 13. Tel: 011 2394899, Mobile: 077 4746344. E-mail:Srikalaivaanigowri@gmail.com

## இந்திய யாத்திரை

சென்னை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, திருப்பதி, சிதம்பரம், பிள்ளையார்பட்டி, காஞ்சிபுரம், சாயிபாபா, இராமேஸ்வரம், சுசீந்திரம், ஸ்ரீவில்லபுதூர், பஞ்சவடி, மோகனூர், திருக்கடையூர்,9 நவக்கிரக ஆலயங்கள், திருவெண்ணாமலை, ஆறுபடைவீடுகள், கைலாசலிங்கபாவதவாதினி, தோணியப்பர், சரஸ்வதி, ஆலயம் பொற்கோவில் உட்பட 35 இற்கு குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மைசூர், ஊட்டி, பும்புகார், கன்னியா குமரியும் காணலாம். 10, பேர் 12 + 1 நாட்கள். ஆரம்பம் 16.01.2008 (அனைத்து செலவுகளும் உட்பட) இல் விபரங்களுக்கு: கலாநிதி, T.ஸ்ரீரெங்கநாதன் T.P:077 7680102, 0724 222989. **(யாத்திரைகள் காலஞ்சென்ற என் மனைவியின் ஞாபகார்த்தமாக குறைந்த செலவில் சிறந்த சேவையை வழங்குகின்றோம்.)**

## வைத்தியம்

மூக்கடைப்பு தும்மல் நெஞ்சுச்சளி இருமல் சுவாசிக்கும் போது கீ கீ என்று சத்தம் ஆஸ்துமா இழுப்பு அதனால் நித்திரையில்லை ஆஸ்துமாவும் எக்சிமாவும் மாறி மாறி வரும் இதனால் உடலில் துர்நாற்றம் வேலை செய்யமுடியாது நடக்க முடியாது உடனே களைப்பு மூச்சிழுப்பு அலர்ஜி. இவை அனைத்துக்கும் சிறப்பான மூலிகை மருந்து சிகிச்சை பக்க விளைவு எதுவும் இல்லை குறைந்த பத்தியம். சித்த வைத்தியர். Dr.R.Sivagurunathan, 0777301669. வெள்ளவத்தை. vaithiyar@hotmail.com

---

உடல் கொழுக்க மெலிய மார்பு பெரிதாக்க சிறிதாக்க ஆண் உடம்பு பெரிதாக்கல் பாலியல் குறைபாடு பெண் ஆண் முடி வளர்ச்சி முகப்பரு நீக்கம் கண் கருவளையம். ஹனனி Hello Dr. , Dr.N.L.Ratnajothy. 077 4421157, 071 4847629, 077 4421153, 011 4994042.

## சேவை

வீடு மாற்றமா? அலுவலக மாற்றமா? உங்கள் வீட்டு உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், பாவனைப் பொருட்கள் அதி விரைவாகவும், கவனமாகவும், நம்பிக்கையாகவும். ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றிக் கொடுப்பதற்கும். மற்றும் திருமண வைபவங்களுக்கான கார்களுக்கு நாடுங்கள். நவரட்ணம் மூவர்ஸ். 185/2. Perera Lane, Colombo - 06. Tel: 0777356706.

---

எந்தநாட்டு எவ்வகையான VISA க்களுக்கு விண்ணப்பிக்கும் போதும் உங்களுடைய / SPONSORருடைய ஆவணங்களை முறையாக சமர்ப்பிக்க வேண்டும். இல்லாவிடின் VISA க்கள் நிராகரிக்கப்பட்டோ/ கால தாமதமாகியோவிடும். எனவே பலவருட அனுபவமுள்ள எங்களிடம் ஆலோசனைகளைப் பெற்று பலனடையுங்கள். LOTUS 10 RUDRA MAWATHA, WELLAWATTE TP 2362096.

## கல்வி

London A/L (Edexcel, IBO, Cambridge) Mathmatics (C1-C4, M1-M5, FP1-FP3, S1-S2) tuition தனிப்பட்ட (Individual) அல்லது 2-4 மாணவ (சிறு) குழுக்களாக கற்பிக்கப்படும். விபரங்களுக்கு, 2589018

---

London O/L (Edexcel, Cambridge) Maths tuition, தனிப்பட்ட (Individual) அல்லது 2 - 4 மாணவ (சிறு) குழுக்களாக கற்பிக்கப்படும். விபரங்களுக்கு 2589018

---

தரம் 6 முதல் 11 வரையானமாணவர்களுக்கு கணித பாட வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. வீடு வந்தும் கற்பிக்கப்படும். D 8 Marigold flats 93 Peterson lane, Colombo-06. (ஆசிரியர் எ. முருகமூர்த்தி B.Sc) Tel: 2365195

---

திறமைமிக்க பல்கலைக்கழக மாணவர்களால் கொழும்பில் தரம் 10, 11 மாணவர்களுக்கு எதிர்பார்க்கை மாதிரி வினாக்களுடன் கணித வகுப்புக்கள் தனிப்பட்ட / குழு முறையில் "A" சித்திக்கு உத்தரவாதத்துடன் மேற்கொள்ளப்படும். தொடர்பு: 0776150337.

---

IELTS, SPOKEN ENGLISH குழு / தனி வகுப்புகள் பாடசாலை மாணவர்கள், வெளிநாடு செல்பவர்கள் போன்றவர்களுக்கு இளைப்பாறிய பல்கலைக்கழக விரிவுரையாளரினால் (M.Sc) நடாத்தப்படுகிறது. உடனே தொடர்பு கொள்ளவும். 077 7115537

---

Chemistry, Biology London / Local home visited University Academic Staff member. Tel: 078 5225464

---

English Literature Gr. 9, 10, 11 (New Sylabus) experienced teacher marking examiner with overseas teaching experience, conducts classes. Starts in January, for limited numbers. Contant: 077 7477218

---

A/L Chemistry வகுப்புக்கள் யாழ பட்டதாரி ஆசிரியரினால் தற்போது தனியாகவோ / குழுவாகவோ கற்பிக்கப்படுகிறது. தொடர்புகளுக்கு: 077 7439475


**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

இளம் வயதில் வாலிபத் தூண்டுதலால் புரியாமல் செய்யும் தவறுகளால் ஆளுமைக் குறைவு, சக்தி குறைவு, ஞாபகமறதி ஏற்படுதல் மற்றும் பயம், நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மை போன்ற நோய்களுக்கும்

- ஆரம்ப மன நோய்களை உடனே குணமாக்கலாம்.
- ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைபேறு இன்மைக்கும் பெண்களுக்கும், வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல்,பல்லீறு கரைதல போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோ தத்துவ நிபுணர் **Dr.P.ஆறுமுகம்**

**SEXUAL DISORDERS** (ஆண்மைச் சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. இதற்காக வெட்கப்படவோ வேதனைப்படவோ தேவையில்லை. (பிறவியிலேயே ஆண்மையற்றவர்கள் தவிர) இதற்குப் பல காரணங்கள் உண்டு.

- அளவுக்கதிகமாக விந்தை விரயாக்கியது.
- கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது.
- உடல்பலவீனம், நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்து விடுவது.
- உறவின் போது விந்து விரைந்து வெளியேறுதல்
- முதல் தடவையாக உறவுகொள்ளும் போது ஏற்படும் பயத்தினால் உறவில் திருப்தியின்மை.

இக்குறைகளாலும், தோல்வி அவமானத்தாலும் இனி நமக்கு வாழ்வே இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை வளர்ந்து முற்றாக ஆண்மை குன்றலாம். பயப்படாதீர்கள் எமது மனோதத்துவ வைத்திய முறையிலும், திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**டாக்டர் ஆறுமுகம்**
அவர்களை சந்திக்கும் இடங்கள்

**வவுனியாவில்...**
2008 ஜனவரி 05, 06, 07 வரை
Vanni Inn,
2ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா,
Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**கொழும்பில்...**
2008 ஜனவரி 16 முதல் 23 வரை
New Ahmed Tourist Inn,
BangBang Building
2-2/2, Bankshall Street,
Colombo - 11.
Tel No. 5368426, 5368427
**Hot Line: 0777 569205**

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்திய முறை செய்யப்படும்**

வெளிநாட்டில் உள்ளவர்கள் தபால் மூலம் (தயவு செய்து முத்திரை ஒட்டிய கடித உறையுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய முறையில் ஓடியோ கசட் பெற்று அத்துடன் திறமான மூலிகை மருந்தும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

கடிதத் தொடர்புகளுக்கும்
ஏனைய நாட்களில் சந்திப்பதற்கும்

**Dr. P. Arumugam,**
51/5, Koolavady Road
Batticaloa, Srilanka.
Resident Tel No. 065 2224019,
Hot Line: 0777 569205.

**தயவு செய்து ரூபா.250/= செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.**





## நல்ல தூக்கத்துக்கு...


''நல்ல தூக்கத்தையும், உடலுக்கு குளிர்ச்சியையும் தரக்கூடியது கோரைப்பாயில் உறக்கமே.'' என்கிறது 'பதார்த்த குணபாட களஞ்சியம்' ஏடு. இலவம் பஞ்சு தலையணையில் தலை வைத்துப் படுத்தால், தலை நோய்கள் நீங்கும். கழுத்து நரம்புகள் பிசகாமல் இருக்கவும் உதவும் என்கிறது அந்த ஏடு.

▶ பிரிட்ஜில் இருந்து தக்காளியை எடுத்து சமையலுக்காக வதக்கும்போது, சிறிது கல் உப்பு சேர்த்தால் சீக்கிரம் வதங்கும்.

▶ தோசை மெல்லியதாகவும், மொறு மொறுவென்றும் வரவேண்டும் என்றால், மாவை அரைக்கும் போது மூன்று மேசைக் கரண்டி அவல் போட்டு அரைக்க வேண்டும்.



## இது கதையல்ல!




மூன்றாம் வகுப்பு படிக்கும் பேர்த்தி இலக்கியா வற்புறுத்திக் கேட்டதால், பார்வதி பாட்டி கதை சொல்லத் தொடங்கினாள்.

''ஒரு ஊரில, ஒரு நிலா...''

''ஐயோ பாட்டி! ஊருக்கு ஒரு நிலா எல்லாம் இல்லை. உலகத்துக்கே ஒரே ஒரு நிலாதான்....!'' கதையின் ஆரம்பத்திலேயே குறுக்கிட்டுத் திருத்தினாள் இலக்கியா.

''சரி... அந்த நிலாவில, ஒரு ஆயா வடை சுட்டுக்கொண்டிருந்தாளாம்...''

'ப்பர்ர்ர்...' என்று சிரித்தாள் இலக்கியா.

''நிலாவில ஒட்சிசனே கிடையாது பாட்டி. அப்புறம் எப்படி அங்கே அடுப்பு எரிக்க முடியும். வடை சுட முடியும்?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. எப்படியோ சுட்டாங்க. அப்போ அங்கே ஒரு காக்கா வந்து...'' பார்வதிப் பாட்டி முடிப்பதற்குள், ''தப்பு, தப்பு! காக்காவால நிலாவில உயிர்வாழவே முடியாது!'' என இலக்கியா இடைமறிக்க, கடுப்பானாள் பாட்டி.

''அப்போ நரியாலேயும் அங்கே போக முடியாது என்று தானே சொல்லுவாய். என்னாலே உனக்குக் கதை சொல்ல முடியாது!''

''போ பாட்டி... கதை என்றால் ஒரு லொஜிக் வேண்டாமா?'' என்று சிணுங்கியபடியே எழுந்து போனாள் இலக்கியா.






''மெகா சீரியல் டைரக்டரை காதலிச்சது தப்பா போச்சுடி.''
''ஏண்டி... என்னாச்சு...?''
''எதுக்கெடுத்தாலும் அழ வைச்சு ரசிக்கிறாரடி''



''எதுக்கு ஸோர் லைசென்ஸை கட் அவுட் மாதிரி இவ்வளவு பெரிசா செஞ்சு வச்சிருக்கிறீங்க''
''பின்னே.. சிக்னலுக்கு சிக்னல் காரை நிறுத்தி லைசென்ஸை காட்டச் சொல்கிறார்களே!



## லிவிங் டுகெதர்!

மேற்கிலிருந்து இறக்குமதியான பர்கர், பீட்ஸா, டிஸ்கோ, டேட்டிங் வரிசையில் சமீபமாக சேர்ந்திருக்கிறது லிவிங் டுகெதர்!

அதென்ன லிவிங் டுகெதர்? திருமணம் செய்துகொள்ளாமல் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது. இன்னும் நெருக்கமாக சொல்லப் போனால் நோ கல்யாணம்... நோ குழந்தை! விரிவாகச் சொன்னால்... ஒன்றாக உண்பார்கள், ஒன்றாக உறங்குவார்கள்... ஒருவரையொருவர் கேள்வி கேட்க முடியாது. ஒருவரையொருவர் அடிமைப்படுத்த முடியாது. போரடித்து விட்டால் கைகுலுக்கி விட்டு 'குட்பை' சொல்லிவிடலாம்!

## தரையில் நிற்கும் புதிய குடை!

தரையில் நிற்கும் குடை இது. ஜப்பான் விற்பனைக்கு அனுப்பியுள்ள இந்தக் குடையில் மூன்று கம்பிகள் அமைத்து, ஸ்டாண்ட் போல் குடையைப் பயன்படுத்த வசதி செய்துள்ளனர். வழக்கமான குடைத்துணியை விட இதில் தண்ணீர் உடனுக்குடன் ஓடிவிடும். அதற்கு ஏற்ற துணியைக் குடையில் பயன்படுத்தியுள்ளனர். மழைகாலங்களில் கடைக்கு குடையுடன் வருபவர்களால் பெரும் பிரச்சினை! மடித்துக் கையில் வைத்துக் கொண்டாலும் கடைபூராவும் தண்ணீர் சிந்தும். அதனால்தான் இந்த ஸ்டாண்ட் குடையை 320 கிராம் எடையில் தயாரித்தனர். எடை அதிகமாக இருந்தால் மக்கள் வாங்கமாட்டார்கள். கறுப்பு மற்றும் வெள்ளைத் துணியில் இந்தக் குடை கிடைக்கிறது. வீட்டுக்கு அல்லது கடைக்கு வெளியே இந்தக் குடையை எளிதில் நிற்க வைத்துவிட்டு நாம் உள்ளே உடனே செல்லலாம். இந்தப் புதிய குடை ஜப்பானில் நல்ல விற்பனையாகிறது.






## குழந்தை பெறுவதை தள்ளிப் போடுவது நல்லதா?



இன்றைய பரபரப்பான உலகில் பெரும்பாலான இளைஞர்களும் இளம் பெண்களும் புத்திசாலிகள். நன்றாகப் படித்து, நல்ல வேலை கிடைத்து, கைநிறைய சம்பளம் வாங்குகிறார்கள்.

தகவல் தொழில் நுட்பத் துறையின் அபரிமித வளர்ச்சி காரணமாக எப்போதும் திட்டமிட்டுக் கொண்டே இருக்கும் மனோபாவம் இவர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது.

சம்பாதிப்பதுடன் நின்று விடாமல் வாழ்க்கையை எவ்வித இடையூறும் இன்றி அனுபவிக்கவும் இன்றைய இளைஞர்களும், இளம் பெண்களும் விரும்புகின்றனர். இலங்கையில் அல்லது இந்தியாவில் பெண், அமெரிக்காவில் மாப்பிள்ளை என திருமணங்கள் நிச்சயிக்கப்படுவது சர்வசாதாரணமாகிவிட்டது.

திருமணமானவுடன் கணவன்-மனைவி இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள ஓராண்டு வரைகுழந்தை பேறைத் தள்ளிப் போடலாம். தவறில்லை.

பல்வேறு கருத்தடை முறைகளைப் பயன்படுத்தி குழந்தைப் பேறை தள்ளிப் போடுவது இயல்பானது. எனினும் குழந்தைப் பேறை எவ்வளவு காலம் தள்ளிப் போடலாம் என்ற விழிப்புணர்வு தம்பதியினருக்கு இருக்க வேண்டும்.

மணப்பெண்ணுக்கு திருமணத்தின் போதே 30 வயதாக இருந்தால் குழந்தைப் பேறை தள்ளிப் போடக்கூடாது. ஏனெனில் 30 வயதைக் கடந்த பெண்களுக்கு கர்ப்பம் அடையும் வாய்ப்பு குறையும். இதேபோன்று கருத்தடை முறைகளை நீக்கி, ஆறு மாதங்கள் ஆன பிறகும் குழந்தைப் பேறு இல்லாவிட்டால் உடனடியாக டாக்டரிடம் செல்ல வேண்டும்.

30 வயதைக் கடந்து திருமணம் செய்து கொள்ளும் பெண்கள், முறையான மாதவிலக்கு இல்லாத பெண்கள் ஆகியோர் ஆரம்ப நிலையிலேயே டாக்டரிடம் சென்ற ஆலோசனை செய்வது நல்லது. திருமணமானவுடன் எவ்வித தயக்கமுமின்றி மருத்துவ ஆலோசனை பெற்று குழந்தைப் பேறை தம்பதியினர் திட்டமிட்டுக் கொள்வது நல்லது.

''கொண்டெய்னர் லொரி மாதிரி இருக்கான். இவனுக்கு ஆறு கால்கள் இருந்திருக்கணும்....பாவம்!





# அறிவியல்

ரி.கே.ஆர்

## இறால்களின் தொட்டில்



உப்பு நீர் உள்ள பகுதிகளில் காணப்படும் சதுப்புநிலக் காடுகள், கடல் அரிப்பைத் தடுக்கவும் காற்றின் வேகத்தைக் குறைக்கவும் பயன்படுகின்றன. இதுதவிர மீன் உணவுகளில் சிறந்த உணவாகக் கருதப்படும் இறால் உற்பத்தி மையமாக சதுப்பு நிலக் காடுகளே உள்ளன. எனவேதான் இக்காடுகளை 'இறால் களின் தொட்டில்' என அழைக்கிறோம். மீனவர்களுக்கு அதிக அளவு வருவாய் கிடைப்பதற்கு இறால்களே முக்கிய காரணமாகும். இறால்களுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. சதுப்பு நிலக் காடுகளின் அழிவால் இயற்கையாக வளரும் இறால்கள் அழிகின்றன.


## ஐ லவ் யூ

வைரஸ்கள் பல வகைகளாக உபயோகத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தினாலும் இவற்றின் பொதுவான குணமானது ஒரு கம்ப்யூட்டரில் உள்ள .EXE எனப்படும் விரிவுகொண்ட புரோகிராம்களுடன் தானாகவே சென்று ஒட்டிக் கொள்வது தான். இதுபோன்று சேர்ந்து கொண்ட வைரஸ் புரோகிராமானது அந்த .EXE விரிவு கொண்ட புரோகிராமை உபயோகப்படுத்தும் போது நாம் எதிர்பாராத வகையில் அந்தப் புரோகிராமை இயக்கமுடியாத வகையில் பல பாதிப்புகளை ஏற்படுத்தும். சில வைரஸ்கள் நமது புரோகிராம்களில் உள்ள சில கேரக்டர் களை வேறு சில கேரக்டர்களாக (Character) மாற்றியோ, அல்லது நமது புரோகிராம் வரிகளை காணாமல் செய்தோ பாதிப்புகளை ஏற்படுத்தும். இதுவரை பல்லாயிரக்கணக் கான வைரஸ்கள் உலகில் உபயோகத்தில் இருந்து வந்தாலும் சில ஆண்டு களுக்கு முன் வெளிவந்த I LOVE YOU எனப்படும் வைரஸ் கம்ப்யூட்டரில் ஏற்படுத்திய பாதிப்பை எவரும் எளிதில் மறந்திருக்க முடியாது.




## பவள உயிர்கள்

புவி வெப்பமடைதலுக்கு எத்தனையோ காரணங்கள் கூறப்படுகின்றன. கடலில் உள்ள பவள உயிரிகளின் அழிவு, புவி வெப்பமடைதலுக்கு ஒரு காரணம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். புவி வெப்பமடைதலுக்கு அதிகரித்துவரும் கார்பன் டை ஒக்சைட்டின் அளவே முக்கிய, முதல் காரணமாகும். கடலில் உள்ள பவள உயிரிகள், முதுகெலும்பில்லாத உயிருள்ள பிராணிகள் ஆகும். நூற்றுக்கணக்கான பவள உயிரிகளின் வகைகள் உள்ளன. இந்தப் பவள உயிரிகள் பசுமை இல்லா வாயுவான கார்பன் டை ஒக்சைட்டை உறிஞ்சும் தன்மையைப் பெற்றுள்ளன. உறிஞ்சப்பட்ட கார்பன் டை ஒக்சைட்டை இந்தப் பவள உயிரிகள் சுண்ணாம்பாக மாற்றுகின்றன. இவையே பவளப் பாறைகள் ஆகும்.



## சிலுவை யுத்தங்கள்

ஐரோப்பிய கிறிஸ்தவர்களுக்கும் துருக்கி மற்றும் மத்திய கிழக்கு முஸ்லிம் உலகிற்கும் இடையில் நடைபெற்ற யுத்தங்கள் சிலுவை யுத்தங்கள் ஆகும். கிறிஸ்தவர்கள் தமது புனிதப் போர் என அடையாளம் காட்டுவதற்காக சிலுவை அடையாளங்களை கொடிகளிலும் உடைகளிலும் பொறித்துக்கொண்டு போர் புரிந்தமையால் இதற்கு சிலுவை யுத்தங்கள் எனும் பெயர் வந்தன. கி.பி.1097 இல் முதலாவதும் 1493 இல் இறுதியுமாக மொத்தம் ஒன்பது யுத்தங்கள் நடந்தன. 1493 இல் கொன்ஸ்தாந்தி நோபிளை இஸ்லாமியர் கைப்பற்றிய பின் வர்த்தகப் பாதை மூடப்பட்டது. இது ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது.



## கடிகாரத்தில் மொபைல் போன்

திரைப்படங்களில் மட்டுமே பார்த்து வந்த சில விஷயங்கள் இப்போது நடைமுறைக்கு வந்துவிட்டன. அண்மையில் கைக் கடிகாரத் தில் மொபைல் போன் விற்பனைக்கு வந்துள்ளது. ஜி.எஸ்.எம். ரிஸ்ட் வாட்ச் என அழைக்கப்படும் இந்த கடிகாரத்தில் ஜி.எஸ்.எம். போன் இயங்குகிறது. 1.3 அங்குல வண்ணத்திரை உள்ளது. இதன் ஸ்டைலஸ் குச்சியும் இதனுள்ளேயே செருகப்பட்டுள்ளது. எம்பி3 மற்றும் வீடியோ வசதி தரப்பட்டாலும் இதன் மெமரி 60 எம்பி தான். இதனை அதிகப்படுத்தவும் முடியாது. இது மூன்று பாண்ட்களில் இயங்கும். சவுண்ட் ரெகார்டர், காலண்டர், இ-புக் ரீடர், கால்குலேட்டர், கரன்சி மாற்றி அறியும் வசதி மற்றும் கடிகாரம் இதில் உள்ளன.

இதில் யு.எஸ்.பி. போர்ட் உள்ளதால் கம்ப்யூட்டருடன் இணைத்து பைல்களை மாற்றிக் கொள்ளலாம். வயர்லெஸ் ஹெட்செட், வயர் ஹெட்செட்களுடன் பட்டரி ஒன்றும் மேலதிகமாகத் தரப்படுகிறது. இதன் விலை உத்தேசமாக ரூ.22,000. அமெரிக்காவில் விற்பனையாகும் இந்த ரிஸ்ட் வாட்ச் விரைவில் இலங்கையிலும் கிடைக்க இருக்கிறது.



## தகவல் டொட் கொம்

- சீனர்களின் உருவ எழுத்துக்களில் 40,000 உருவங்கள் உள்ளன.
- பழங்காலத்தில் வழிப்போக்கர்கள் தம்மிடம் ஆயுதம் இல்லை என்பதை நிரூபிக்க கைகளைக் குலுக்கினர்.
- உலகிலுள்ள மூன்றில் இரண்டு பங்கு மக்கள் ஒருமுறையேனும் தொலைபேசியில் பேசியதில்லை.
- கண்சிமிட்டுவதால் சராசரியாக ஒருமனிதன் நாளொன்றுக்கு அரை மணி நேரம் கண்மூடியிருக்கிறான். ஆண்களை விட பெண்கள் இரட்டிப்பாக கண்சிமிட்டுகின்றார்கள்.
- உலகிலேயே அதிக தூரம் பறக்கக்கூடிய பறவை ஆர்க்டிக் டெர்ன். இது நிற்காமல் 4 ஆயிரம் கி.மீ., தூரம் தொடர்ந்து பறக்கக்கூடியது. ஆர்ட்டிக் பகுதியிலிருந்து புறப்பட்டு தென் - மத்திய அமெரிக்கா வரை வந்து போகிறது.
- வாயிலிருந்து வயிறுவரை உள்ள 'ஈசோபேகஸ்' எனப்படும் உணவுக் குழாய், மழைநீர் குழாய் மாதிரித் திறந்தபடி தொங்கிக் கொண்டிருப்பதில்லை. அது 'அப்'பென்று எப்போதும் ஒட்டி மூடியபடிதான் இருக்கும். சாப்பிடும் பொருட்கள் கவளம் கவளமாக பெரிஸ்டோலைஸிஸ் என்ற முறையில் விட்டுவிட்டு நகர்ந்தபடி கீழே இறங்கும். தலைகீழாக சிரசாசனம் செய்தபடிகூட விழுங்கலாம் அப்போதும் உணவு வயிற்றைப் போய் அடையும்.

# மேடும்... பள்ளமும்...



சுடர் ஒளி

சிறுகதை

ச.முருகானந்தன்

சியாமளா, பிரதீபன் இருவரையும் எனக்கு நன்றாகத் தெரியும். சியாமளா எனது இடைநிலைப் பாடசாலை ஆசிரியராக இருந்த கந்தையா வாத்தியாரின் மகள். நீண்ட காலமாகவே அவர்களது குடும்ப வைத்தியர் நான்தான். இந்த உறவு அவளது திருமணத்துக்குப் பின்னரும் தொடர்ந்ததால், சியாமளாவின் கணவன் பிரதீபனும் எனக்கு அறிமுகமானான். ஒரு வைத்தியர்-நோயாளி உறவுக்கு அப்பாலும் எமது குடும்பங்களுக்கிடையே நட்பு இருந்தது. கந்தையா வாத்தியாரின் மரணத்துக்குப் பின்னரும் இந்த நட்பு தொடர்ந்தது.

இப்போது பிரதீபன் வெளிநாட்டில் இருந்து வந்துநிற்கிறான். அவனுக்கு இருமலுக்கு மருந்தெடுப்பதற்காக இருவரும் வந்திருந்தார்கள். பிரதீபனைச் சோதித்துப் பார்த்தபோது அவனுக்கு நுரையீரலில் நிமோனியா தொற்று ஏற்பட்டிருப்பதை என்னால் அனுமானிக்க முடிந்தது. வாட்டில் வைத்திருந்து சிகிச்சை செய்வது நல்லது என என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தேன். அவர்களும் சம்மதிக்கவே, பிரதீபனை வாட்டில் நிற்பாட்டி சிகிச்சையை ஆரம்பித்தேன். தேவையான இரத்த பரிசோதனைகளை எழுதிவிட்டு 'ஒக்மென்ரின்' என்ற நுண்ணுயிர்க் கொல்லி மருந்தை ஊசி மூலம் தினமும் இரு தடவை ஏற்றும்படியும், சேலைன், குளுக்கோஸ் முதலான நாளத் திரவங்களை கொடுக்கும் படியும் பணித்தேன்.

எவ்வளவு திடகாத்திரமாக இருந்த பிரதீபன் இப்படி மெலிந்து போய்விட்டானே என எண்ணினேன். அதேவேளை, அவனுக்கு எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற எனது சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக ஏற்கனவே இரத்த பரிசோனைக்கு எழுதியிருந்தேன். எனது குடும்ப நண்பர்கள் என்பதால் என் மனது பிரதீபனுக்கு எச்.ஐ.வி. தொற்றாக இருக்கக்கூடாது என்று பிரார்த்தித்தது.

சியாமளா படிக்கும் வளரிளம் பருவத்தில் துரு துரு என்று இருப்பாள். அழகி என்பதைவிட, பேரழகி என்பதே பொருத்தம். அழகு எவ்வளவுக்கு இருந்ததோ, அந்தளவுக்கு அவளிடம் கர்வமும் நிறைந்திருந்தது. பல்கலைக்கழகப் பட்டம் பெற்று ஆசிரியை நியமனம் கிடைத்தது. நேரகாலத்துடன் அவளுக்குக் கல்யாணம் செய்து வைத்திட கந்தையா வாத்தியார் யோசித்தார். அவர் அவசரப்பட்டதைக்கு இரண்டு காரணங்களிருந்தன. ஒன்று சியாமளாவுக்கு இளைஞர்களால் இருந்த தொல்லை. மற்றது மூன்று பெண்களுக்கு அவள் மூத்தவளாக இருந்தமை. பாவம் வாத்தியாரின் சொற்ப சம்பளத்தில் வாழ்க்கைச் செலவு போக அதிகம் மீதப்படுத்த முடியவில்லை. நகை நட்டுச் செய்வதற்கு மிச்சம் பிடித்து சேமித்ததும் வாத்தியாரின் மனைவி இராசம்மாவின் கெட்டித்தனம்தான்.

சியாமளாவுக்கோ அரச பரம்பரையில் பிறந்தது போன்ற பெரும் எண்ணம். தனது அழகுக்கு மருத்துவர், பொறியியலாளர், கணக்காளர், வழக்கறிஞர் என வரிசையில் காத்திருப்பார்கள் என்ற மமதை. ஆண்கள் அழகைவிட சீதனப் பணத்திலேயே குறியாக இருந்ததனால் அவளது எண்ணப்படி மாப்பிள்ளை அமையவில்லை. அப்பா பேசிக்கொண்டு வந்த கலியாணங்களையும் அவள் தட்டிக் கழித்தே வந்தாள். காரில் வரும் ராஜகுமாரனுக்குக் காத்திருந்ததனாலேயோ என்னவோ அவளுக்கு வயது ஏறிவிட்டது. தங்கைகளுக்கும் வயது வந்துவிட்டது. இளையவள் பாமிலாவுக்கு காதல் இருந்தது. மணமகனின் பக்கத்தில் திருமணத்துக்கு அவசரப்பட்டார்கள். தாமதித்தால் எங்கே தனது திருமணம் தடங்கிப் போய்விடுமோ என்ற பயம் அவளுக்கு. இதனால் அக்காவுடன் மல்லுக்கட்டிக் கொண்டு நின்றாள்.

இந்த நிலையில்தான் அவளுக்கு ஒரு மாப்பிள்ளை பார்க்கும்படி மாஸ்ரர் என்னிடமும் கேட்டுக் கொண்டார். நானும் முயற்சித்தேன். எனது மருத்துவமனையில் பணிபுரியும் பாமசிஸ்ட். சுகுமாரனை கேட்டேன். அவன் சம்மதம் என்று தலையசைத்ததும் நான் மாஸ்ரரிடம் சென்றேன். நானும் மாஸ்ரரும் கதைத்துக் கொண்டிருக்கும்போது சியாமளா தேநீர் கொண்டுவந்து பரிமாறினாள். அழகிதான் எனினும் முகத்தில் வயது தெரிந்தது. சுகுமாரனையும் அவளையும் அருகில் நிறுத்திப் பார்த்தேன். பொருத்தமான ஜோடி. அத்துடன், சுகுமாரன் நல்ல பையன். பிரயாசை மிக்கவன். வாழ்வில் முன்னேறக் கூடியவன். குடும்பத்துக்கு அனுசரணையாக இருக்கக் கூடியவன். மனதில் நிறைவு ஏற்பட்டது.

''சியாமளா... நில்லும்... உமக்கொரு நல்ல மாப்பிள்ளை பார்த்திருக்கிறன்... என்ன சொல்லுறீர்?'' பீடிகையோடு கூறினேன். சியாமளாவுக்கு மாப்பிள்ளைப் பையன் யாரென்று நான் கூறாததில் குழப்பம். என்னை ஏறிட்டு நோக்கினாள். நான் மௌனமாக இருக்கவே சியாமளா நாணத்தோடு கூறினாள்.

''டொக்டர்... நீங்கள் பார்த்திருந்தால் நன்றாகத்தானிருக்கும் என்று நினைக்கின்றேன்.... யாரென்று சொல்லவில்லையே...'' மாப்பிள்ளையை அறியும் ஆவல் அவள் முகத்தில் தெரிந்தது.

''உமக்கும் மாப்பிள்ளைப் பையனைத் தெரியும்...'' நான் நிறுத்தவே, என் முகத்தை ஆவலோடு பார்த்திருந்தாள்.

''சியாமளா... என்னோடு வைத்தியசாலையில் வேலை செய்கிற சுகுமாரன்.... சீதனமும் வேண்டாமாம்...''

அவள் முகம் சட்டென்று இருண்டது. எனினும் உதட்டில் சிரிப்பு. அந்தச் சிரிப்பின் அர்த்தத்தை வார்த்தையில் வடிப்பது கடினம். என்.எஸ்.கிருஷ்ணனின் ஏமாற்றச் சிரிப்பாக இருக்கவேண்டும். நான் பேசி வந்ததால் இவ்வளவு நேரமும் டொக்டர் மாப்பிள்ளை என அவள் நினைத்திருக்கவேண்டும். அவள் மேற்கொண்டு பேசாமல் உள்ளே போய்விட்டாள். தேநீர் றேயை 'டங்' என்று வைக்கும் சத்தம் கேட்டது. மௌனம் சம்மதத்திற்கு அர்த்தம் என்ற பேச்சுக்கு இடமில்லாத நிலைமை. மாஸ்ரரின் முகத்தில் அசடு வழிந்தது.

நான் விடைபெற்றுக்கொண்டு சென்றேன். மருந்து கொடுக்கும் மாப்பிள்ளையை பேசிவந்தவர் என்று வீட்டில் சத்தம் போட்டதாக பின்னர் கேள்விப்பட்டேன். பாமசிஸ்ட் உத்தியோகம் பெறவேண்டுமாயின் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இரசாயனத்தில் திறமைச் சித்தியுடன் எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும். பின்னர் மருத்துவக் கல்லூரியில் இரண்டு வருடம் பயிற்சிபெறவேண்டும். பட்டதாரி ஆசிரியருக்கு மேலான சம்பளம். இவை எதுவும் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. மருந்து கொடுக்கும் உத்தியோகம் என தட்டிக் கழித்துவிட்டாள்.

இதற்குப் பின்னர் நான் அவளுக்குக் கலியாணம் பேசவில்லை. 'சாதகம் பொருந்தவில்லை சுகுமாரன்' என்று அவனிடம் ஒரு பொய் சொல்லி தப்பித்துக் கொண்டேன்.

சில மாதங்களின் பின் வெளிநாட்டு மாப்பிள்ளையை பேசிவந்தபோது கூட அவளுக்கு பூரண சம்மதமில்லை. எனினும், வயது வட்டுக்குள் போய்க்கொண்டிருந்ததாலும், தங்கையின் அவசரத்தாலும், குறைந்தபட்சம் வெளிநாட்டுப் பணத்தில் சொகுசாக வாழலாம் என்பதாலும் சம்மதித்தாள்.

மேலும் பிரதீபன் ஏறத்தாள ஐந்தரை அடிக்கு மேல் உயரமானவன். கம்பீரமான தோற்றமுடையவன். தீர்க்கமான கண்களும் சிரித்த முகமுமாக அப்போதைய பிரபல கதாநாயகன் கமல்ஹாசன் போலிருந்தான்.

அவனை நேரில் பார்த்ததும் சியாமளா தன்னை முற்றாகவே இழந்துவிட்டாள்.

அப்புறம் திருமணம் முற்றாகி எல்லாம் நல்லபடி நிறைவேறியது. கலியாணத்திற்கு என்னையும் அழைத்திருந்தார்கள். நேரில் சென்று வாழ்த்திவிட்டு வந்தாலும் மனதில் ஒரு நெருடல். சுகுமாரனிடம் இருக்கின்ற நல்ல பண்பு, அவனது விடாமுயற்சி, செயலூக்கம், மனிதநேயம் எல்லாம் எனது மனக் கண்ணில் வந்து போனது. பிரதீபன் கூட நன்றாகத்தானே இருக்கிறான் என என் மனதைத் தேற்றிக் கொண்டேன்.

சுகுமாரன் தன் உறவினரான ஆசிரியை ஒருத்தியை சீதனம் எதுவுமின்றிக் கைப்பிடித்தான். அவன் மனைவி மாலதி சியாமளாவைப் போல் அழகி தான். அத்துடன் ஆசிரியையாகப் பணியாற்றிக்கொண்டிருந்தாள். சுகுமாரன் என்னோடு பணியாற்றிக்கொண்டிருந்தபோதே, யாழ். மருத்துவபீட உதவி வைத்தியர் படிப்புக்குத் தெரிவானான். மூன்று வருடங்களின் பின் மருத்துவனாக வெளியேறி விரைவிலேயே புகழ்பெற்ற மருத்துவனாகி, இடர்படும் போர்ப்பிரதேசத்தில் பணியாற்றினான். அவனது மனிதாபிமானம் மிக்க சேவையினால் மக்கள் மத்தியில் பிரபல்யமான வைத்தியனாக இருந்தான். மூன்று ஆண்டுகளின் பின்னர் அவன் பதிவு வைத்தியர் பரீட்சையில் தேறி முழுமையான மருத்துவரானான்.இப்போது மீண்டும் என்னோடு பணியாற்றிக்கொண்டிருக்கிறான். மனைவி மாலதியும் வெளிவாரியாகப் படித்து பட்டம் பெற்றாள். முயற்சி திருவினையாக்கும் என எண்ணினேன்.

மறுநாள் நிமோனியா நோயுடன் வாட்டில் மறித்திருந்த பிரதீபனின் ஆய்வுகூட மருத்துவ அறிக்கை வந்தபோது நான் கலங்கிப்போய் விட்டேன். எச்.ஐ.வி. தொற்று இருப்பதாக அறிக்கை வந்திருந்தது. இதை எப்படி அவர்களிடம் சொல்வது என நான் குழம்பிக்கொண்டிருந்த போது டாக்டர் சுகுமாரன் வந்ததை நான் கவனிக்கவில்லை. மகிழ்ச்சி

(19 ஆம் பக்கம் பார்க்க)




**அன்பு மாணவர்களே, பெற்றோர்களே, வழிகாட்டும் ஆசிரியர்களே!**

2008ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள (தற்போது தரம்-04 இல் கற்கும்) இளம் சிறார்களை பாடத்திட்ட ஒழுங்கில் இறுதிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் எமது அயராத முயற்சியாலும் பிரபல இளம் தலைமுறை ஆசிரியர்களான து.திலீப்குமார் - கொழும்பு, சண்.சுதர்சன் -கண்டி, தி.சுரேஸ்குமார்-கம்பளை மற்றும் பிரபல ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியினாலும் உருவாக்கப்பட்ட படிமுறை மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளிவரும். இதனை மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்தால் பரீட்சையில் வெற்றி அடைவதுடன் மாணவர்களின் முன்னேற்றம் இயல்பாகவே புரியும் என்பது எமது அசையாத நம்பிக்கை. அந்த வகையில் 16ஆவது வினாத்தாள் இன்று வெளிவருகின்றது.

இப்படிமுறைப் பரீட்சையையொட்டி, எப்பத்திரிகையிலும் இல்லாத ஒரு விசேட சேவையை எமது கல்விச் சுடர், முதல் தடவையாக ஆரம்பித்து தொடர்ந்துகொண்டிருக்கின்றது......

அதாவது, இப்பகுதியில் பிரசுரமாகும் படிமுறைப்பரீட்சை வினாத்தாளுக்கு அன்றையதினமோ அல்லது அடுத்துவரும் நாட்களில் மாணவர்கள் சுயமாக விடையளித்து இவ்வினாத்தாளை எமக்கு தொடர்ந்துவரும் வியாழக்கிழமைக்கு முன் அல்லது வியாழக்கிழமை கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தால், அவை எமது கல்விச்சுடர் ஆசிரியர் குழுவினால் திருத்தி, புள்ளியிடப்பட்டு மறுநாளே தங்களுக்குத் தபாலிடப்படும். நீங்கள் இவ்வினாத்தாளை அனுப்பும் போது அதனுடன் தங்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றையும் அனுப்புதல் அவசியமாகும். பாடசாலைகள், கல்வி நிலையங்கள் அதிக வினாத்தாள் களை அனுப்பவேண்டி இருப்பின், அதனை அனுப்பும் போது அதன் நிறைக்கேற்ப பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடித உறை ஒன்றையும் வைத்து அனுப்புதல் அவசியமாகும்.

வினாத்தாளின் மேலே உள்ள சுயவிவரங்கள் யாவும் தெளிவாகப் பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

**உங்கள் வினாத்தாள்களை அனுப்பவேண்டிய முறை:-**

கடித உறையின் வலதுபக்க மேல்மூலையில் படிமுறைப் பரீட்சை -17 (Steping Exam - 17) எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

ஆசிரியர்,
கல்விச்சுடர்,
சுடர் ஒளி பணிமனை,
இல. 85,
ஜயந்தமல்லிமாராச்சிமாவத்த,
கொழும்பு-14.

யாழ் மாணவர்களுக்கு மட்டும்..
ஆசிரியர்,
கல்விச்சுடர்,
உதயன் பணிமனை,
இல. 361,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## "எந்தமாதிரியும் இல்லாத முன்மாதிரியான கல்விச்சுடரின் புதிய படைப்பு"

மாணவர்களே! பெற்றோர்களே! வழிகாட்டும் ஆசிரியர்களே!

எம்முடன் இணைந்து இந்த அளப்பெரிய சேவையின் பயனை அனுபவிக்க உங்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.

### பாராட்டப்படும் கல்விச்சுடர் மாணவச் செல்வங்கள்

படிமுறைப் பரீட்சை - 14 இல் சிறந்த புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


N.கிருஷாகரி
192 (கல்முனை-02)


R.டன்ஸ்டன்
192 (கல்முனை-01)


T.பிரதீப்
192 (மட்டக்களப்பு)

| | | | |
|---|---|---|---|
| பாத்திமா ரிம்ஸியா 196 (உடுகொட) | M.பிரதாஜினி 192 (கம்பளை) | S.அஹ்தர் அலி 192 (புத்தளம்) | R.றைஹானா 180 (நிந்தவூர்) |
| S.சஸ்னி 180 (நிந்தவூர்) | I.இஹ்சான் முஹமது 176 (கல்பிட்டி) | H.ஜெய்சித்ஹசன் 156 (நிந்தவூர்-13) | |

**எமது படிமுறைப் பரீட்சை நடைபெறும் கல்விநிலையங்கள் :-**

வவுனியா - எக்ஸ்பிரஸ் கல்வி நிலையம் (024 567190)

திருமலை - A.C.A கல்வி நிலையம் (060 2263511)

கண்டி - மதீனா பாடசாலை (071 3456020)

கம்பளை - கதிரொளி கல்வி நிலையம் (077 3407175)

சம்மாந்துறை - ஸ்ரார் கல்வி நிலையம் (060 2676675)

நிந்தவூர் - இல்மா ஹொலிடே பாடசாலை (077 9597407)

-கல்விச்சுடர் ஆசிரியர்-

சுடர் சிந்தனை:- " முயற்சியும் பயிற்சியுமே வெற்றிக்குச் சிறந்த வழி "

## படிமுறைப் பரீட்சை - 17 நேரம்: 1 மணி

| | | |
|---|---|---|
| மாணவர் பெயர் | : | ................................................ |
| முகவரி | : | ................................................ |
| கற்கும் பாடசாலை/ | : | ................................................ |
| கல்வி நிலையம் | | ................................................ |
| தொலைபேசி இலக்கம் | : | ................................................ |

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01.** கீழே தரப்பட்டுள்ள பந்தியின் உதவியுடன் வினாக்களுக்கு விடை தருக.

கதிரவன் தனது ஒளிக்கதிர்களைப் பரப்பிக்கொண்டு கிழக்குவானில் மெல்லமெல்ல எழுகிறான். இதைக்கண்ட பறவை இனங்கள் மகிழ்ச்சியில் ஒலிஎழுப்புகின்றன. கதிரவனின் ஒளியை எதிர்பார்த்துக் காத்திருந்த தாமரை மலர்கள் இதழ்களை விரிக்கின்றன. கம்பீரமாகக் கூவிய சேவலின் ஒலிகேட்ட மக்கள் மலர்ந்த காலைப்பொழுதினை மகிழ்வுடன் வரவேற்கின்றனர்.

1) பந்தியில், நாள் ஒன்றில் எவ்வேளை பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது?

................................................................

2) பறவையினங்கள் என்பதைப் பிரித்து எழுதுக.

................................................................

3) கதிரவன் என்பதன் ஒத்தகருத்துச் சொல் ஒன்றைத் தருக.

................................................................

4) தாமரை மலர்கள் என்ன செய்கின்றன?

................................................................

5) வரவேற்கின்றனர் எனும் சொல் உணர்த்தும் காலம் எது?

................................................................

**02.** பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துப் பதங்களைத் தருக.

1) மாதன் - ..........................................
2) சீதன் - ..........................................
3) காலவம் - ..........................................
4) துகில் - ..........................................
5) சருப்பம் - ..........................................

**03.** பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துப் பதங்களைத் தருக.

1) அலங்காரம் - ..........................................
2) நூதனம் - ..........................................
3) கலகம் - ..........................................
4) அர்த்தம் - ..........................................
5) சுற்றம் - ..........................................

**04.** பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்து கோடிடுக.

1) தாவரத்தின் சகல பகுதிகளும் உணவுக்குப் பயன்படாதது,


A

B

C

D

2) முக்கனிகளுள் அடங்காதது,


A

B

C

D

3) யூரியா உற்பத்தி செய்யப்படுவது,


A

B

C

D

4) பாலைவனத்தில் பயணம்செய்ய உதவுவது,


A

B

C

D

# தொப்பையைக் குறைங்க ப்ளீஸ்

பெண்





அப்டோமினோ பிளாஸ்டி!! வயிற்றில் மேடிடும் தொப்பையைக் குறைப்பதற்காக வந்திருக்கும் வரப்பிரசாதம்.

பிரசவத்துக்குப் பிறகு தளர்ந்து பெருத்துக்கொண்டே போகும் வயிற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கச் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை, இது.

அப்டோமினோ பிளாஸ்டி மூலம் தொள தொள வயிற்றை இறுக்கமானதாக மாற்றலாம். இதனால், பெண்கள், பிரசவத்துக்கு முன்பிருந்த தட்டையான வயிற்றைத் திரும்பப் பெறலாம்.

இந்த அறுவைச் சிகிச்சையில் 2 விதங்கள் உண்டு. முதலாவது முழுமையான அப்டோமினோ பிளாஸ்டி. இதில் தொப்புளுக்கு மேல்பகுதி மற்றும் கீழ்ப்பகுதி இரண்டுமே சரி செய்யப்படுகின்றன. இதில் வயிற்றின் அடிப்புறம், அதாவது பிக்னி லைன் பகுதி வெட்டப்பட்டு சருமம் மற்றும் கொழுப்பு மேல்நோக்கி இழுக்கப்படுகிறது. கூடவே தசைநார்களும் இறுக்கமாக்கப்படும்.

இதன் பிறகு உபரியான சருமம் அகற்றப்படுகிறது. இதில் தொப்புளுக்குக்கும் புதிய வடிவம் மற்றும் இடம் தரப்படுகிறது.

இரண்டாவது வகை'டம்மி டக்' எனப்படுகிறது. தொப்பை ஓரளவே இருக்கும் பட்சத்தில் - அதாவது தொப்புளுக்கு கீழிருக்கும் பகுதி மட்டும் தளர்ந்து போயிருக்குமானால் - அதை 'டம்மி டக்' மூலம் சரி செய்யலாம். இது சிறிய அறுவைச் சிகிச்சை என்பதால் 'லோக்கல் அனஸ்தீசியா' மூலமே செய்யப்படுகிறது.

இந்த இரண்டு அறுவைச் சிகிச்சைகளிலும் 'லைப்போசக்ஷன்' சிகிச்சையையும் சேர்த்துச் செய்வது கூடுதல் பலனிக்கக்கூடியதாகும். ஒருசில நோயாளிகளுக்கு லைப்போ சக்ஷன் மட்டுமே போதுமானது.

'அப்டோமினோ பிளாஸ்டி'யைப் பற்றிய சில முக்கியமான விஷயங்கள்:

இந்த அறுவைச் சிகிச்சைக்கு பிறகு ஏற்படும் தழும்பின் அளவு எந்த அளவுக்கு சருமம் நீக்கப்படுகிறது என்பதைப் பொறுத்தது. இது காலப்போக்கில் லேசானதாக மாறுவதுடன், பிக்னி லைனுடன் மறைந்து போகவும் செய்யும்.

இந்த அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள நல்ல உடலாரோக்கியத்துடன் இருப்பது அவசியம். குறிப்பாக, நீரிழிவு நோய், இரத்த அழுத்தம் ஆகியவை இருக்கக்கூடாது. உங்களுடைய எதிர்பார்ப்புகள் குறித்து மருத்துவருடன் கலந்தாலோசித்து நிச்சயம் செய்துகொள்ளுங்கள்.

மேலும் நல்ல பெறுபேறு கிடைப்பதற்காக 2-3 மாதங்கள் வரை காத்திருக்கவேண்டியும் இருக்கலாம்.

பொதுவாக இந்த அறுவைச் சிகிச்சை பிரசவத்துக்குப் பிறகே செய்யப்படுகிறது.

உடல் எடையைக் குறைப்பதற்காக இந்த அறுவைச் சிகிச்சையை செய்ய விரும்புபவர்கள் முதலில் உடல் இளைப்பதற்கான வழிமுறைகளை கடைப்பிடிக்கவேண்டும். அப்போதுதான் வயிற்றுப் பகுதியில் உள்ள கூடுதல் சருமத்தை அகற்றுவதில் நல்ல பலன் கிடைக்கும்.

இந்த அறுவைச் சிகிச்சை செய்து 3 முதல் 6 வாரங்களுக்குப் பிறகு மீண்டும் வீட்டு வேலைகளைத் தொடரலாம்.

ஒரு சில கேஸ்களில் 'பல்மோனரி எம்போலிஸம்' பிரச்சினை ஏற்பட வாய்ப்புண்டு. இதில் கொழுப்பானது நுரையீரலுக்குள் சென்று மூச்சுப் பாதையை அடைத்துவிடும். இந்தப் பிரச்சினை ஏற்படுவது அரிது என்ற போதிலும், அதற்கான அறிகுறிகள் தென்பட்டதுமே மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுக்கொண்டால் குணமாவது எளிது.


அறுவைச் சிகிச்சை செய்து சில ஆண்டுகள் ஆனதும் வயிறு லேசாகத் தளர்ந்துபோகும். ஆனால், முன்பிருந்த அளவை ஒப்பிடும்போது இது குறைவாகவே இருக்கும்.

முழுமையான அப்டோமினோ பிளாஸ்டி அறுவைச் சிகிச்சைக்கு இந்திய ரூபாவில் சுமார் 35-40 ஆயிரம் வரை செலவழிக்க வேண்டியிருக்கும். ஆனால், 'லோயர் டம்மி டக்' அறுவைச் சிகிச்சைக்கு ரூபாய் 20-25 ஆயிரம் வரை செலவாகும்.

அமெரிக்கா வெளியிட்டுள்ள புள்ளிவிவரப்படி கடந்த ஆண்டில் அங்கு சுமார் 1,01,000 பேர் இந்த அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டுள்ளனர். இந்தியாவில் இப்போதுதான் இந்த அறுவைச் சிகிச்சை சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. பெண்கள் மட்டுமின்றி, ஆண்களும் இதில் ஆர்வம் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

# பேன்! சின்ன விஷயம் செயின் ரியாக்ஷன்





பார்ப்பதற்கு சின்ன விஷயம் தான். பாதிப்பும் பெரிய அளவில் இல்லை. ஆனாலும், தலையைப் பிய்த்துக் கொண்டு எம்மைத் தவிக்க வைத்துவிடும். உதாரணத்திற்கு எத்தனையோ சொல்லலாம். அதிலும் குறிப்பாக, ஆண்களுக்கு ஆயிரத்தெட்டு இருக்கும். செல்ப் ஷேவ் பண்ணும்போது, ஒருபக்க மீசையில் ஒருமுடி குறைந்துவிடுவதுபோல்... ஆனால், பெண்களுக்கு இதுதான் தலையாய பிரச்சினையாம்.

பேன் ஏன் பெண்களையே அதிகம் தாக்குகிறது. கூந்தலை அழுக்காக வைத்திருப்பது தான் அதற்குக் காரணமா? பேனிடம் இருந்து எப்படித்தப்பலாம்?

சின்னப் பிரச்சினை தான், ஒரு சென்டி மீட்டரில் எட்டில் ஒரு பங்கு தான். ஆனால் தலையாய பிரச்சினை. எழுதிக் கொண்டிருக்கும் பென்சிலின் பின்புறத்தால் காதுக்குக் கீழே எத்தனை முறை சொறிந்துகொண்டாலும் கண்டுபிடிக்க முடியாத தீர்வு. பின் கழுத்தில் சொறிவதற்காகவே விரல் நகத்தை வளர்த்து ஷார்ப்பாக கட் பண்ணி பொலிஸ் போட்டு பாஷன் என்று எவ்வளவு நாள்தான் பம்மாத்து பண்ணுவது.

அலுவலகத்தில் வேலை கூட ஒருகையால்தான். இன்னொரு கை ஈர் உருவ...! சொப்ட்வேர் பெண்கள் கூட விதிவிலக்கல்ல.

தலையைப் பிய்த்துக் கொள்ள வைக்கும் இந்தப் பேன் பிரச்சினை, இன்று நேற்றல்ல ஆயிரக்கணக்கான வருஷங்களாக வளர்ந்துகொண்டிருக்கிறது. ஒரு விதத்தில் வரலாறும்கூட.

இந்தப் பேன்களின் வாழ்நாள் என்னவோ அதிகபட்சம் நாற்பதுநாள் தான். அதற்குள் இவை செய்யும் சிரச்சேதம் இருக்கிறதே. அப்பப்பா... தாங்க முடியாது.

முடியில் க்ளிப் போட்டு ஒட்டவைப்பது போல் முட்டையிடும் கலையில் பேன்கள் கில்லாடி. ஒரு பேன் ஒரு தடவைக்கு ஏழு முதல் எட்டு முட்டைகள் போடும். மொத்த வாழ் நாளில் அதிக பட்சம் நூறுமுட்டைகள் உங்கள் தலையில் இருக்கும். பேனைக் கணக்கெடுத்து நூறால் பெருக்கிக் கொண்டால், ஈர்களின் எண்ணிக்கையைத் தெரிந்து கொள்ளலாம். இந்தக் கணக்கெல்லாம் ஏழுநாளைக்குத் தான். அதற்குள் முட்டையில் இருந்து குஞ்சு வந்து விடும். வெளிவந்த பத்துப் பன்னிரண்டு நாட்களில் அது முட்டை போட ஆரம்பித்து விடும். ஸோ கம்ப்யூட்டரே உங்கள் மூளையில் இருந்தாலும் கணக்கெடுக்க முடியாமல் தலையைச் சொறிந்து கொண்டுதான் இருக்க வேண்டும்.

சொறிவது சுகமாக இருந்தாலும் இந்தப் பேன் கடி இருக்கிறதே எல்லா நாளும் ஒன்று போல் இருக்காது. குஞ்சுப் பேன் முட்டை யில் இருந்து வெளிவந்த 24 மணி நேரத்திற்குள் உங்கள் இரத்தத்தைச் சுவைக்காவிட்டால் செத்து விடும். உயிர் பிழைக்கும் வேகத்தில் அது தலையோடு ஒட்டி உறிஞ்ச ஆரம்பிக்கும் சமயத்தில் நீங்கள் என்ன சொறிந்தாலும் விடாது. எந்தச் சீப்புக்கும் சிக்காது.


சரி இந்தப் பேனை என்ன தான் செய்வது?

பிரபல இந்திய அழகுக்கலை நிபுணர் ஷிபாணி தரும் சில டிப்ஸ்கள்..

"அழுக்கான தலையில்தான் பேன் வரும் என்பது தவறான கருத்து. பேன்கள் சுத்தமான தலையைத் தான் விரும்பும். வந்தபின் அந்தத் தலையை

(27 ஆம் பக்கம் பார்க்க)

## பலாப்பழ அப்பம்



**தேவை:**

| | |
|---|---|
| கொட்டை நீக்கிய பலாச்சுளை | - 2 கப் |
| பச்சையரிசி | - ஒரு கப் |
| புழுங்கல் அரிசி | - ஒரு கப் |
| தேங்காய் துருவியது | - ஒரு கப் |
| ஏலப்பொடி | - ஒருதே.க. |
| சீனி | - 2 கப் |

**செய்முறை:**

பச்சையரிசியையும், புழுங்கல் அரிசியை யும் ஒருமணி நேரம் ஒன்றாகச் சேர்த்து ஊற வைக்கவும். பலாச்சுளை களை சிறுசிறு துண்டுகளாக நறுக் கிக் கொள்ளவும். ஊறிய அரிசியை நன்றாகக் கல்போக சுத்தம் பண்ணி, அரிசியுடன் பலாச் சுளையை சேர்த்து நன்றாக அரைத்து எடுக்கவும். தேங்காயைத் துருவல் செய்து அதை மாவுடன் கலக்கவும். மாவுடன் ஏலக்காய் தூள், சீனி கலந்து அதை நன்றாகப் பிசையவும். இட்லி தட்டில் இட்லி அவிப்பது போல் மாவை ஊற்றி அவிக்கவேண்டும். இதை அப்பம் என்று சொல்லலாம். இல்லை பலாப்பழ இட்லி என்றும் சொல்லலாம்.





ஷியாம் பெனகல் இயக்கும் படத்தில் புத்தராக நடிக்கிறார் ஹிருத்திக் ரோஷன். புத்தரின் வாழ்க்கை வரலாறை இலங்கை அரசுடன் சேர்ந்து தயாரிக்கிறார் ஷியாம் பெனகல். இதில் புத்தராக நடிக்கும் நடிகர் தேர்வு நடந்து முடிந்துள்ளது. இது குறித்து பெனகல் கூறும்போது, "இந்தப் படத்துக்கான ஸ்கிரிப்ட் வேலை முடியும் நிலையில் உள்ளது. புத்தராக நடிப்பதற்கான முகவெட்டு ஹிருத்திக்கிடம் இருப்பதால் அவரை தேர்வு செய்தோம். இன்னும் ஹீரோயின் முடிவாகவில்லை. ஒருவரின் வாழ்க்கை வரலாறை சில மணி நேர படமாக எடுப்பது கஷ்டம். இருந்தாலும் அவர் வாழ்க்கையில் நடந்த முக்கியமான நிகழ்வுகளை கொண்டதாக இந்தப் படம் இருக்கும். இது அதிக பொருட் செலவில் தயாரிக்கப்படு கின்றது" என்றார்.

# புத்தர் வேடத்தில் ஹிருத்திக்

★ கவுண்டமணி, விவேக், வடிவேலு, செந்தில் ஆகியோர் கதாநாயகர்களாக நடித்ததைத் தொடர்ந்து தற்போது நகைச்சுவை நடிகர் கருணாஸுக்கும் கதாநாயக னாகும் ஆசைவந்துவிட்டது. இதற்காக தானே ஒரு படத்தைத் தயா ரிக்க ஏற்பாடு செய்து வருவதுடன், ஏதாவது ஒரு முன்னணி கதாநாயகியை நாயகியாகப் போட பலரை அணுகி வருகிறார்.



★ சினேகாவிற்கு சினிமாவில் கிடைக்கும் வருமானத்தைவிட, விளம்பரப் படங் களில் நடிப்பதில்தான் அதிக வருமானம் கிடைக்கிறது. அதனால், அவரது தந்தை, தெலுங்கு படத்தை தவிர தமிழில் விளம்பரப் படத்திற்கு மட்டும் ஒத்துக்கொள், அதில்தான் நாம் நன்றாக கல்லா கட்டமுடியும் என்று மகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

★ பருத்திவீரன் வெற்றிப் படத்தைத் தொடர்ந்து சிவகுமாரின் இளைய மகன் கார்த்தி, செல்வராகவன் இயக்கத்தில் 'ஆயிரத்தில் ஒருவன்' என்ற படத்தில் நடித்து வருகிறார். அடுத்த படத்திற்காக பல இயக்குநர்கள் இவரை அணுகியபோது என் தந்தை ஒரு நேரத்தில் ஒருபடத்தில் மட்டுமே நடிக்கச்சொல்லியிருக் கிறார். எனவே, இந்தப் படம் ரிலீஸ்ஆனபிறகு வாருங் கள்' என்று 'அன்புடன் மறுத்துவிடுகிறார்.



★ அஜித் நடித்த, 'பில்லா' நன்றாக ஓடினாலும், எதிர்பார்த்த பரபரப்பு இல்லாததால், கொஞ்சம் மனக்குறையில் இருக் கிறார் அஜித்குமார். இதனால், தனது அடுத்த படத்தை சொந்தக் கொம்பனியான ஏ.கே. பிலிம்ஸ் இன்டர்நேசனல் மூலம் கே.எஸ்.ரவிக்குமாரை வைத்து இயக்க ஆரம்ப கட்ட வேலைகளில் இறங்கிவிட்டார். ரவிக்குமாரோ தசாவதாரம் ரிலீசாகும் வரை வருவாரா என்பது தெரியவில்லை.



### வதந்தி.கொம்

அரவாணியாக நடிக்க மனோரமாவுக்கு தீராத ஆசை! உண்மைதான்! நூற்றுக்கணக்கான வேடங்களில் நடித்திருந்தும், அரவாணி கதாபாத்திரத்தில் நடிக்கவில்லையே என்ற ஏக்கம் நீண்ட நாட்களாக அவருக்கு இருந்து வந்தது. இதற்காகவே, 'ஜான்' படத்தில் அரவாணி கேரக்டரை மனோரமாவுக்காக உருவாக்கியிருக்கிறார்கள். இதனால் அளவற்ற மகிழ்ச்சியில் இருக்கிறார் அரவாணி; சொரி... ஆச்சி.



# அரசியல்வாதியாகிறார் மல்லிகா ஷெராவத்!

பொலிவுட்டின் 'கிளாமர் குயின்' என்று வர்ணிக்கப்படும் மல்லிகா ஷெராவத் அரசியல்வாதி வேடத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். டைரக்டர் குந்தன் ஷா 'மஸ்கூரட்' என்ற படத்தை இயக்குகிறார். அரசியலை மையமாக வைத்து எடுக்கும் படத்தில் விலைமாதுவாக இருக் கும் மல்லிகா ஷெராவத் படிப்படியாக உயர்ந்து முதல்வராகிறார் என்பது தான் படத்தின் கதை. முதல் பாதி படத்தில் வழக்கம்போல் செக்ஸியாக நடிக்கவுள்ள மல்லிகா, பின் பாதியில் பின்னியெடுக்கப் போகிறாராம். விரைவில் 'மஸ்கூரட்' படத்தின் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது.



பாலாஜி – அனிஷா

# காதல் கடிதம்

நம்மவர்கள் இயக்கும் காதல் கடிதம் ஒரு திரைப்படம். இலங்கை இந்தியக் கலைஞர்கள் நடித்துள்ளார்கள். இலங்கை காட்சிகளும் படத்தில் அதிகமாக இடம் பெற்றுள்ளன.

இந்தியக் கலைஞர்களான ஸ்ரீபாலாஜி, அனிஷா, நிழல்கள் ரவி, சந்தான பாரதி, 'காதல்' சுகுமார், முத்துக்காளை, ஸ்ரீ ரஞ்சனி, சிஸர் மனோகர், மணிகண்டன் இவர்களுடன் இலங்கைக் கலைஞர்களான நடராஜா சிவம், ஏ.ஈ. மனோகரன், கிலினி (சிங்களம்), டயானா (தமிழ்) ஆகியோரும் இத்திரைப்படத்தில் நடித்துள்ளார்கள்.

காதல் கடிதத்தின் இன்னொரு சிறப்பம்சம் என்னவெனில் தொழில் நுட்பப் பகுதியில் இலங்கை மற்றும் நோர்வே கனடா போன்ற நாடுகளிலும் வாழ்ந்து வரும் தமிழ் இளைஞர்களும் பங்களிப்புச் செய்துள்ளமைதான்.

இதன் தயாரிப்பாளர் தி.தில்லைவண்ணன். திரைப்படத்தின் உதவி இயக்குநர்களாக செல்வன் (மூதூர்) மனோஜ் (யாழ்ப்பாணம்), யுதிஸ்ற்றன் (கொழும்பு) ஆகியோரும் தமது பங்களிப்புக்களை முறையே உதவி இயக்குநர், ஒப்பனை, தயாரிப்பு, நிருவாக உதவி என்று வழங்கியுள்ளனர். திரைப்படத்தின் பாடல்களை வசீகரன் (நோர்வே) இயற்றியுள்ளார்.

இந்தியாவிலிருந்து தனது காதலியைத் தேடி கொழும்பு வரும் கதாநாயகன் யாழ்தேவியில் வன்னி நோக்கி பயணிக்கிறான். அக்காட்சியில் இசைபார்வலர்களை மட்டுமல்லாது பலரின் இதயத்தையும் ஈர்த்து இறுக்கிப்பிடித்துக் கொள்ளும் ஓர் அருமையான பாடல் ஒலிக்கிறது. ரயிலுக்குள் இடம் பெறும் ஆடலுடன் கூடிய இப்பாடல் மல்லிகா கீர்த்தி, நந்தகுமார், சாந்தி ஆகிய நமது இலங்கைக் கலைஞர்களின் பங்களிப்பாக மிளிர்கின்றது.

வினோலியாவின் கதையை முகேஸ் இயக்கியுள்ளார். இசையமைப்பு உதயா, பீ. ஆர். ராஜனின் ஒளிப்பதிவில் உருவானதை வாசு, சலீம் தொகுத்து வழங்கியுள்ளனர்.

வோட்டர் போல்ஸ் மூவி மேக்கர்ஸ் இத்திரைப் படத்தை தயாரித்து வழங்கியுள்ளது.

# நலன்புரி நிலையங்களில் நிரந்தர அவலங்கள்!

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு மூன்று வருடங்கள் கடந்து விட்டன. இவ் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் தற்காலிக நலன்புரி நிலையங் களில் வாழ்



கின்றனர் என்றால் நம்புவதற்கு கடினமாக இருக்கும். ஆனால், திருகோணமலை மாவட்டத்தில் சில பகுதியில் இந்த அவலத்தை நேரடியாக காண முடியும். அத்துடன் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மூதூர் கிழக்கு தமிழ் மக்கள் கூட இன்னும் இடம் பெயர்ந்த இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்கின்றனர் என்பதும் வேதனைக்குரிய விடயம்.



தற்போது கிழக்கில் அடிக்கடி பெய்துவரும் மழை காரணமாக திருகோணமலை மாவட்டத்தின் கரையோரக் கிராமங்கள் பலவும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர். திருகோணமலை நகரின் தெருக்கிராமத்தில் இருந்து சல்லிக்கிராமம் வரையிலான கடலோரக் கிராமங்களின் கடற்கரைப் பகுதியில் கடல் கொந்தளிப்புக் காரணமாக கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. சுனாமியினாலும் மோசமாக பாதிக்கப்பட்ட இக்கிராமங்களில் சுமார் 50 அடிவரை கடல் அரிப்பு ஏற்பட்டிருப்பதாக மீனவ சங்கப் பிரதிநிதிகள் கவலை தெரிவிக்கின்றனர். குடியிருப்புக்கள், பொதுக் கட்டடங்கள் என்பனவும் இதனால் பாதிக்கப்படுவதாகவும் இவர்கள் குறிப்பிடுகின்றனர். இதே வேளை இக்கிராமங்களில் கடல் கொந்தளிப்பு அதிகரித்துள்ளமையினால் மீன்பிடிப் படகுகள், தோணிகள், வள்ளங்களை உயர்ந்த பாதுகாப்பான பகுதிகளுக்கு இழுத்து வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். எனவே, கடலரிப்பைத் தடுப்பதற்கு கருங்கல் தடுப்புச் சுவர்களை ஏற்படுத்த வேண்டும் என இம்மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க மழை காரணமாக பட்டித்திடல், கிளிவெட்டி நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மூதூர் கிழக்கு தமிழ் மக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். குறிப்பாக மலசலகூட வசதிகள் பாதிக்கப்பட்டு சுகாதாரப் பிரச்சினைகளையும் இவர்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட கரையோர பகுதிகளில் நிரந்தர வீடுகளை நிர்மாணித்து பயனாளிகளுக்கு வழங்கும் பொறுப்பை 110 அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆரம்பத்தில் ஏற்றன. ஆனால், நாட்டின் யுத்த நிலைவரம் மற்றும் சில காரணங்களால் சுமார் 80 அரச சார்பற்ற நிறுவனங்கள் தாம் ஏற்ற பொறுப்புக்களிலிருந்து இடையில் விலகிக்கொண்டன. அரச சார்பற்ற நிறுவனங்களால் சுமார் 10,000 நிரந்தர வீடுகள் திருகோணமலை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்படவிருந்தன. 80 நிறுவனங்கள் இடையில் விலகிக் கொண்டதால் நிர்மாணிக்கப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை சுமார் 6,000 என்று நிர்ணயிக்

## மூதூர் கிழக்கான்

கப்பட்டது. இறுதியில் 3,600 வீடுகள் வரையே நிர்மாணிக்கப்பட்டன. சுமார் 2,300 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எந்த ஸ்தாபனமும் முன்வராத நிலை ஏற்பட்டது. இப்போது எஞ்சிய இவ்வீடுகளை யார் நிர்மாணிப்பது என்ற கேள்வி எழுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில், திருகோணமலை பட்டினமும் சூழலும், மூதூர், கிண்ணியா, குச்சவெளி, ஈச்சிலம்பற்று, சேருவில ஆகிய ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 59 கிராம சேவகர் பிரிவுகள் சுனாமியால் பாதிக்கப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது. அரச சார்பற்ற நிறுவனங்கள் இன்னும் நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. இது மிகவும் மந்தமாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் நலன்புரி நிலையங்களில் வாழும் நிலை நீடிக்கின்றது. அத்துடன் மூதூர்கிழக்குப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டதால் அங்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அமைக்கப்பட இருந்த நிரந்தர வீடுகளும் நிறுத்தப்பட்டன. அப்பகுதி தமிழ் மக்கள் இன்றும் நலன்புரி நிலையங்களில் அவல வாழ்க்கை வாழும் நிலை தொடர்கின்றது.

### வாசக அன்பர்களுக்கு

உங்கள் அபிமானத்துக்குரிய சுடர்ஒளி வார இதழ்கள் இரண்டு கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, அந்த வாரங்களுக்குரிய தொடர் அம்சங்கள் கொண்ட பக்கங்களும் இந்த இதழுடன் இணைக்கப்பட்டுள்ளன.



# செல் நம்பர் 17

விஞ்ஞானச் சிறுகதை

வேலிக்குள் பதினைந்து மாடிக்கட்டடங்கள் நான்கு பதிந்து நின்றுகொண்டிருந்தன. அவைகளின் ஒவ்வொரு ஜன்னலுக்கும் ஒருகுடும்பம் என்று கணக்குப்போட்டால் தலைசுற்றும். கட்டடங்கள் ஏதோ ஒரு பிரமை போல, பொய் போல, அப்போதுதான் தோன்றியது போல நின்றன. கட்டடங்களின் இடைவெளியில், சதுரப் புல்வெளிகளில் நிறையக் குழந்தைகள் உற்சாகமாக விளையாடிக்கொண்டிருந்தன. இளம்பெண்கள் பந்து விளையாட்டுகளில் குதித்துக்கொண்டிருந்தார்கள். வெயிலில் நின்றுகொண்டிருந்தார்கள். பூப்பறித்துக் கொண்டிருந்தார்கள். நிறையப் பெண்கள், நிறையக் குழந்தைகள், ஆண்கள் அலுவலகத்துக்குச் சென்றிருந்த காலை பத்தரை மணிபோலும் .

கட்டடங்களைச் சுற்றி அமைத்திருந்த வேலி மிகவும் சிரத்தையுடன் இழுத்து விண் என்று கட்டப்பட்டுச் சராசரி மனிதன் எவனும் கடக்கமுடியாத உயரம்வரை எந்த இடத்திலும் இடைவெளியோ வெட்டோ இல்லாமல் நல்ல கற்புடன் ஆக்ரோஷமாக இருந்தது. போதாக்குறைக்கு அங்கங்கே சிவப்பு அறிவிப்புகள் மண்டைஓட்டுடன் Warning High Voltage என்று அறிவித்தன. யாருக்கும் அந்த வேலியைத் தொட விருப்பம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், வேலியிலிருந்து சற்று ஆரோக்கியமான தூரத்தில் பல இளைஞர்கள் நின்றுகொண்டு வேலிக்கு உள்ளே வெயிலில்



விளையாடிக்கொண்டிருந்த அந்தப் பெண்களை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர்.....வேண்டாம்.

வாசுதேவன் கையில் குழந்தையுடன் கட்டடங்களின் பிரதான கேட்டைவிட்டு வெளியில் வருவதை அந்த இளைஞர்களில் ஒருவன் பார்த்துவிட்டான். அவனுடன் மற்றும் சிலர் சேர்ந்துகொண்டு வாசுதேவனை அணுகினார்கள். வாசுதேவன் தன் குழந்தையுடன் சிரித்துப்பேசிக்கொண்டே நடந்தான். குழந்தை மிக புஷ்டியாக இருந்தது. அதன் கன்னங்களில் புதுரத்தம் சிவந்திருந்தது. அதன்முகத்தில் கவர்ன்மெண்ட் காஸ்மெட்டிக் தொழிற்சாலையின் முகப்பவுடர் நிறைய அப்பப்பட்டு அதன் அகில இந்திய வாசனை வாசுதேவனிடத்திலும் பரவியிருந்தது. வாசுதேவனின் கேள்விக்குப் பதில்சொல்லமுடியாத வயதுக்குழந்தை. எட்டுமாதம்.

வாசுதேவனை அந்த இளைஞர்கள் கூட்டமாக அணுகினார்கள்.

"ஹலோ" என்றான் ஒரு சின்னப் பையன்.

"ஹலோ" என்றான் வாசுதேவன்.

"பையனா பெண்ணா? பாப்பா அழகாக இருக்கிறது".

"பையன்! மாமாவுக்கு டாட்டா சொல்லு" குழந்தை கையாட்டியது.

"ஐயா! உங்களிடம் கெஸ்ட் பாஸ் இருக்குமா?" என்றான் இளைஞர்களின் ஒருத்தன்.

"ஏன்?"

"இருக்குமா? எங்களுக்கு ஒரு பாஸ் வேண்டும்".

"எவ்வளவு தருவீர்கள்?"

"முந்நூறு மானெக்ஷா"

"அடேயப்பா! உங்களுக்கு அவர்கள் கண்ணில் காசையே காட்ட மாட்டார்களே, எப்படி இவ்வளவு பணம் கிடைத்தது?"

"உங்களைப் போன்ற நபும்சகர்களிடம் அடித்துப் பிடுங்கியது"

"டேய் சும்மா இருடா".

வாசுதேவன் கோபத்துடன் "பாஸ் கிடையாது" என்றான்.

"இல்லையா?"

"இருக்கிறது.தரமாட்டேன். நீங்கள் உள்ளேவந்து ரகளை பண்ணுவீர்கள். பெண்களை..."

"கொடுக்காவிட்டால் அடித்துப் பிடுங்குவோம்"

"முடியாது"

"அழுக்குத் தலையா கொடு" அவர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். பிரசுரிக்கமுடியாத வார்த்தைகளை உபயோகித்தார்கள். "மரியாதையுடன் கொடுக்கப்போகிறாயா இல்லையா?"

அவர்கள் அவன் சட்டையைப் பிடித்தார்கள்.

வாசுதேவன் தன் சட்டைப் பையில் இருந்த ஊதலை எடுத்து "ஊதட்டுமா ரயர்ட் விஷில்!" என்றான். அதைப் பார்த்த கணமே அவர்கள் வாசுதேவனை விட்டுவிட்டார்கள். ஒதுங்கிக்கொண்டார்கள். அவர்கள் கண்களில் பீதி தெரிந்தது. " ஐயா, ஐயா! ஊதாதே. ப்ளீஸ்! ப்ளீஸ்! வேண்டாம்".

வாசுதேவன் அவர்களை பெருமிதத்துடன் பார்த்தான்.தன் வாயருகே அந்த ஊதலைக் கொண்டு சென்றான். "என்ன ஆகும் தெரியுமா? பாய்ந்து வந்து உங்களை அழைத்துச் செல்லச் சொல்லட்டுமா?"


"வேண்டாம் வேண்டாம் ஊதாதே! ஊதாதே!"

"ஒழிந்துபோ."

அவர்கள் அவனை வணங்கிவிட்டு

(18 ஆம் பக்கம் பார்க்க)

5) ஒரு நாட்டின் கொடியாகக் கருதமுடியாதது.



A B C D

6) வேறுபட்ட பரவல் முறையைக் கொண்ட வித்து.



A B C D

05. பின்வரும் வாக்கியங்களில் உள்ள வழுக்களைத் திருத்தி, திருத்தமான வாக்கிங்களை எழுதுக.

1) தோட்டத் தொளிலாழர்கள் இன்று வேளைக்குச் செல்லவில்லை.

..........................................................................................

2) கடும்மலை காரணமாக கண்டிப் பிரதெசத்தில் மண்சறிவு ஏற்பட்டது.

..........................................................................................

06. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளைப் பூரணப்படுத்துக.

2) சந்திரன் முழுமையாக மறையும் நாள் .......................... ஆகும்.

3) செஞ்சிலுவைச் சங்கத்தின் தந்தை .......................... ஆவார்.

4) அறிஞர்கள் பலர்கூடி வாதிடும் இடம் .......................... ஆகும்.

5) ஒரு விழாவின் இறுதியில் நடைபெறும் நிகழ்வு ..........................

07. பின்வருவன சரியாயின் "சரி"எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அடைப்பினுள் எழுதுக.

1) இலங்கையின் அயல்நாடு சீனா. ( ............ )

2) கப்பல்கள் நிறுத்தும் இடம் விமானநிலையம். ( ............ )

3) உலகில் சனத்தொகை குறைந்த நாடு வத்திக்கான். ( ............ )

4) இலங்கையின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி நயகரா. ( ............ )

5) நியூசிலாந்து ஒரு தீவு. ( ............ )

08. பின்வருவனவற்றிற்குச் சரியான விடைதருக.

1) தண்ணீர் எனும் சொல்லைப் பிரித்து எழுதுக.

..........................................................

2) சிவப்பு+தாமரை என்பதைச் சேர்த்து எழுதுக.

..........................................................

3) வீரன் என்பதன் எதிர்ப்பாற் சொல் யாது?

..........................................................

4) மூவிடப் பெயர்களையும் குறிப்பிடுக.

..........................................................

5) பெயர்ச்சொல் ஒன்றும் வினைச்சொல் ஒன்றும் குறிப்பிடுக.

..........................................................

09. 1) சவர்க்காரக் கட்டியின் நிறை 130g எனின், இதேபோன்ற 7 சவர்க்காரக் கட்டிகளின் நிறையைக் காண்க. ..........................

2)  உருவில் நிழற்றிய பகுதியின் பரப்பு $3m^2$ எனின், உருவின் மொத்தப் பரப்பளவைக் காண்க.

..................................

3) அருகிலுள்ள உருவில் காணப்படும் செவ்வக வடிவ முகங்களின் எண்ணிக்கை எத்தனை?

..................................

4) சங்கிலித்துண்டுகள் இரண்டினது நீளங்கள் முறையே 2m15cm, 1m75cm, ஆகும். இரண்டினதும் மொத்த நீளங்களைச் சென்ரிமீற்றரில் தருக. ..................................

5) 2kg தேயிலையின் விலை ரூ1500எனின், 750g தேயிலையின் விலை யாது? ..................................

10. பின்வருவனவற்றுக்குச் மிகச்சரியான விடைதருக.

1) பரீட்சை எழுதிய மாணவர்களுள் 25 வீதத்தினர் சித்தியடைந்தனர். சித்தியடையாதோரின் எண்ணிக்கை 350 எனின்; சித்தியடைந்தோரின் எண்ணிக்கை எத்தனை? ..........................

2) 10kg பொதியை 1km தூரம் கொண்டுசெல்வதற்கான கூலி ரூபா3 எனின், ரூபா 48 ஐக் கூலியாகப் பெற எத்தனை கிலோகிராம் பொதியைக் கொண்டு செல்லவேண்டும்? ..........................

3) சதுரம் ஒன்றின் சுற்றளவு 144m எனின், ஒருபக்க நீளம் யாது? ..........................

4) ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முரளி கோவிலுக்குப் போவான். அவன் நேற்றைய முன்தினம் கோயிலுக்குச் சென்றிருந்தால், நாளைய மறு தினம் என்ன நாளாக இருக்கும்? ..........................

5) 0.1, 0.01, 0.001, 1.0 எனும் தசமஎண்களின் கூட்டுத்தொகை எவ்வளவு? ..........................

6) தந்தை 10 நாட்களில் செய்துமுடிக்கும் வேலையை மகன் 5 நாட்களில் செய்வான். தந்தையின் முழுவேலைக்குமான கூலி ரூபா1500 எனின், மகனின் பத்துநாட் கூலி எவ்வளவு? ..........................

7) பி.ப 5.55 மணியை 24 மணிநேரக் கடிகாரம் எவ்வாறு காட்டும்? ..........................

8) 250g மீனில் 175g புரதத்தைப் பெறலாம். 25g மீனிலிருந்து கிடைக்கும் புரதம் எவ்வளவு? ..........................

9) இலங்கை நேரப்படி இரவு 9.45 இற்கு லண்டன் பி.பி.சி கேட்கும் ஒருவர், லண்டனில் இருந்தால் எத்தனை மணிக்குக் கேட்பார்?(இரு நாடு களுக்கும் இடையிலான நேரவித்தியாசம் 6 மணித்தியாலங்கள்) ..........................

11. கீழே தரப்பட்டுள்ள உருக்களை நன்கு அவதானித்து அவற்றின் பெயர் களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தருக.

A 

த: ..............................

ஆ: ..............................

B 

த: ..............................

ஆ: ..............................

C 

த: ..............................

ஆ: ..............................

D

த: ..............................

ஆ: ..............................

12. பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

1) பேராசிரியர் - ..............................

2) இணையத்தளம் - ..............................

13. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) Lake - ..............................

2) Writer - ..............................

14. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) நவ - ..............................

2) லேய் - ..............................

15. பின்வருவனவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.

A B C D



______ ______ ______ ______

16. இலங்கையில் நீர் பார்த்துரசித்தவை என்னும் தலைப்பின் கீழ் பொருத்தமான கருத்துள்ள வசனப்பிழைகள் அற்ற திருத்தமான ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

1) ..............................................................

2) ..............................................................

3) ..............................................................

4) ..............................................................

5) ..............................................................

முற்றும்

தரம்-04 மாணவர்களைப் புலமைப்பரிசிற் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவதற்காக நடாத்தப்படும்

**படிமுறைப் பரீட்சை - 17, 2007**

ஆசிரியர்:- சண்.சுதர்சன் (குறிஞ்சி வெளியீடு)

(மதீனா தேசிய பாடசாலை - கண்டி. தொ.பே.இல:- 071-3456020)

## படிமுறைப்பரீட்சை-12 இன் விடைக்குறிப்புகள்
ஆசிரியர்:- சண்.சுதர்சன் (குறிஞ்சி வெளியீடு-கண்டி)

01. 1) தொலைக்காட்சி.
2) நடப்பது + எல்லாம்
3) விண்வெளியில் நடப்பவரை.
4) சந்தோசம்/மகிழ்ச்சி.
5) பத்திரிகை/வானொலி.

02. 1) கோயில். 2) கருத்து/பண்டம்.
3) இல்லம். 4) மக்கள்/மனிதர்.

03. 1) தெளிவு. 2) இகழ்.
3) புத்திசாலி. 4) இறப்பு.

04. 1) A 2) A 3) B 4) A

05. 1) சரி. 2) பிழை. 3) சரி. 4) சரி.
5) பிழை.

06. 1) காய்ச்சல் 2) மண்ணெண்ணெய்.
3) கடலுக்கு. 4) திருவிழா

07. 1) வெற்று+இலை. 2) தென்னை+கீற்று.
3) கல்+காலம். 3) பல்+சிகிச்சை.

08. 1) குடை. 2) கிரிக்கற்.
3) 1000ml

09. 1) ஆயிரம் 2) 0.06 3) 1) 164 2) 70
3) 1404 4) 1278

10. 1) 4 2) 12cm² 3) 05.05 4) 1/4

11. 1) ரு.30 2) 3m 90cm
3) ரு.75 4) ரு.320

12. 1) வாழைப்பழம். 2) 7

13. 1) காண்டாமிருகம் - Rhinoceros.
2) குயில் - Cuckoo.
3) செய்மதி - Saterlite.
4) ..........

14. 1) Judge. 2) Labourer.

15. 1) ஜன்னல் 2) அலுவலகம்/காரியாலயம்


16. பொருத்தமான கருத்துள்ள திருத்தமான ஐந்து வாக்கியங்கள்.

## படிமுறைப்பரீட்சை-13 இன் விடைக்குறிப்புகள்
ஆசிரியர்:- யு.எல்.எம்.சாஜித் (நிந்தவூர்)

01. 1) தென்னை, பனை, மா. 2) மா.
3) பறிக்காதே. 4) இறங்காதே.
5) அ) பிள்ளை/கன்று. ஆ) கன்று. இ) வடலி.

02. 1) உதிரம்/செந்நீர்/இரத்தம். 2) நித்திரை.
3) குரங்கு/பாட்டு. 4) சூரியன். 5) குளிர்ச்சி.

03. 1) அதர்மம். 2) மறைவு.
3) வன்சொல். 4) அக்கரை.
5) நகரம்.

04. 1)  2) 

05. 1) B 2) A 3) B 4) B

06. 1) பாட்டி என்னிடம் பணம் இல்லை.
2) நரியின் தந்திரம் புரிந்துவிட்டது.
3) நாம் நலமாக இருக்கவேண்டும்.
4) அனைவரும் கல்வி கற்கவேண்டும்.
5) இலங்கையின் தலைநகரம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர ஆகும்.

07. 1) 32
2) a) 4 b) 10 c) 6 d) 15
3) 245

08. 5

09. 1) 5 2) 20 3) 0.48 4) 30

10. 4 மணி 30 நிமிடங்கள்.

11. 1) 9 மணித்தியாலங்கள். 2) 6km 3) 128ரூபா

12. 1) D 2) B 3) D

13. 1) எருமை - Buffalo.
2) செரிப்பழம் - Strawberry.
3) மின்விசிறி - Fan.
4) ..........

14. 1) Telegram. 2) Graph.

15. 1) சூழல். 2) கல்வி.

16. 1) அமருங்கள். 2) இருங்கள்.

17. பொருத்தமான கருத்துள்ள திருத்தமான வாக்கியங்கள்.

## படிமுறைப்பரீட்சை-14 இன் விடைக்குறிப்புகள்
ஆசிரியர்:- சண்.சுதர்சன் (குறிஞ்சி வெளியீடு-கண்டி)

01. 1) வண்ணத்துப்பூச்சி.
2) குதூகலமாய் ஆடுவோம்.
3) நான் வண்ணவண்ண ஆடைகளை அணிந்து மகிழ்ந்தேன். (இவ்வாறான வாக்கியங்கள்)
4) ஆடினேன். 5) வண்ணத்துப்பூச்சி.

02. 1) சொற்பொழிவு. 2) அறிவு/ஞானம்.
3) நாழிகை/சமயம்/வேதம்.
4) முறைமை/விதி. 5) வர்ணம்.

03. 1) அதர்மம். 2) மறைவு.
3) பதற்றம். 4) அழிவு.
5) விகாரம்.

04. 1) ரீங்காரம் இடும். 2) பாடும்.
3) குறுகுறுக்கும். 4) அழும்.

05. 1) 3 2) 1 3) 1

06. 1) B 2) A 3) B 4) A

07. 1) படிப்போம். 2) ஒழுக்கம்.
3) சேமிப்போம். 4) பாடசாலை.
5) கலையமுதம்.

08. 1) 100 2) 3, 6 3) 4cm³
4) 1. 5 தடவை.
2. B, C ஒவ்வொன்றிலும் மூன்று தடவைகள்.

09. 1) 100kg 2) 10 3) 4 4) 750

10. 97.2kg

11. 1) ரூபா337.50 2) 16 3) 90

12. 1) B 2) D 3) C

13. 1) நீர்நாய் - Seal. 2) திராட்சை - Grape.
3) கலங்கரை விளக்கு - Light house.
4) இடதுபக்கம் திரும்பவேண்டாம் - Don't.go left.

14. 1) Report. 2) Technician.

15. 1) மேற்பார்வையாளர். 2) ஏற்றுமதி.

16. 1) குடும்பம். 2) பாய்.

17. பொருத்தமான கருத்துள்ள திருத்தமான வாக்கியங்கள்.

## படிமுறைப்பரீட்சை - 15 இன் விடைகள்
ஆசிரியர்:- சண்.சுதர்சன் (குறிஞ்சி வெளியீடு-கண்டி)

01. 1) நுரை. 2) துள்ளுகிறது.
3) பார். 4) முத்து.
5) கடற்கரைக் காட்சி.

02. 1) அழிவுக்காலம். 2) ஆகாயம்.
3) முடிவு/வரையறை. 4) விருப்பம்/ஆசை.
5) அலட்சியம்.

03. 1) பதற்றம். 2) நயப்பு.
3) கொடுமை. 4) பங்க.
5) வறட்சி.

04. 1) 1. 1 2) 1. உதைபந்தாட்டம்.
2. 3 2. கொக்கி.
3. 4 3. கரப்பந்தாட்டம்.
4. 7 4. டெனிஸ்

05. 1) B 2) C 3) A 4) B

06. 1) கவிழ்ந்தது. 2) மது ஒழிப்பு.
3) நன்மை. 4) கல்வியறிவு.
5) உணர்ந்தான்.

07. 1) சிவப்புநிற வட்டங்கள்.
2) 40cm
3) பி.ப 07.45

08. 1) 2 2) 1

09. 15 நாட்கள்.

10. 4 மணித்தியாலங்கள்.

11. 1) 164 2) 8 3) 3

12. 1) பன்றி - Pig.
2) நண்டு -
3) அன்னாசிப்பழம் - Pine apple.
4) .........

13. 1) Buttery. 2) Art

14. 1) சந்தை. 2) மொழி.

15. 1) சமாதானம். 2) பாதுகாப்பு.

16. பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.

## படிமுறைப்பரீட்சை-16 இன் விடைக்குறிப்புகள்
ஆசிரியர்:- யு.எல்.எம்.சாஜித் (நிந்தவூர்)

01. 1) முதலில் வலதுபக்கமும் பின் இடதுபக்கமும் மீண்டும் வலது பக்கமும் பார்த்து, பாதையைக்கடக்க வேண்டும்.
2) ஏது + இனி.
3) சாலை விதிகள்.
4) வீதிகளில்.
5) பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு.

02. 1) வீதி/தெரு. 2) உள்ளம்/அகம்.
3) முகடு/சிகரம். 4) அவ்விதானம்.
5) சொத்து.

03. 1) நிதரிசனம். 2) இம்சை.
3) இழிவு. 4) மூர்ச்சம்.
5) விற்பனவு.

04. 1) A 2) C 3) A

05. 1) 3 2) 3 3) 2

06. 1) பத்திரிகை. 2) நாய்.

07. 1) கிராமமாகும். 2) மேடான.
3) நகரமாகும். 4) பள்ளமான.
5) கடலில்.

08. 1) 24km 2) மேற்கு.
3) ரூ1722.00 4) ரூ10.00
5) 182m

09. 1) 164 2) 8 3) 3

10. 1) கழுதை - Donkey/Ass.
2) பலாப்பழம் - Jack fruit.
3) கையடக்கத் தொலைபேசி - Hand phone
4) நிறுத்துக - Stop.

11. 1) Director. 2) City.

12. 1) சந்தை. 2) மொழி.

13. 1) சமாதானம். 2) பாதுகாப்பு.

14. பொருத்தமான கருத்துள்ள திருத்தமான வாக்கியங்கள்.

# ரூல் நம்பர் 17...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடகபாணியில் அவனுக்கு உடல் வளைந்து வழிவிட, வாசுதேவன் புன்னகையுடன் குழந்தையோடு மெயின்ரோட்டிற்கு வந்தான்.

ஏராளமான ஜனங்கள் சாலையின் இருமருங்கிலும் நடந்துகொண்டிருந்தார்கள். நடப்பதற்கே போதிய இடமில்லாமல் ஒருவர் மேல் ஒருவர் அடிக்கடி முட்டிமோதிக்கொண்டுபோனார்கள். ஏராளமான சைக்கிள்களும் போயாடின. அகலமான சாலை, இரண்டாகப் பிரிக்கப்பட்டு நடுவே ஒதுக்கப்பட்ட பகுதியில் பற்றாரி சக்தியில் இராட்சத பஸ்கள் ஜனங்கள் நிரம்பிவழிய விரைந்துகொண்டிருந்தன. ஒலிபெருக்கி சொல்லுவது எவருக்கும் புரியாத குழப்பம். சுவரொட்டிகளில் அந்த இராணுவ உடை ஆசாமி ஒரே மாதிரி சிரித்துக் கொண்டிருந்தான். அடுத்தவாரத்தில் இருந்து அதிகளவு சோயா பீன்ஸ் என்று சந்தோஷமாக அறிவித்தது சுவர்ச்செய்தித்தாள்.

சாலையின் மறுபுறத்திற்கு வந்த வாசுதேவன் சற்றுத் தூரம் நடந்து அரசாங்கத்தின் 9ஆம் நம்பர் கட்டடத்தை அடைந்தான். கீழே ஹோலில் ஜனங்கள் இலக்கமற்ற திக்குகளில் சென்றுகொண்டிருந்தார்கள். ரயில்வே ஸ்ரேஷன் போல் இருந்தது. ஹோலின் நடுவே கெட்டியான கண்ணாடிப் பெட்டிக்குள் டைபிள் திறந்துவைக்கப்பட்டிருந்தது. திறந்திருந்த குளியலறையில் இருந்து தீவிர அமோனியா வாசனை வந்தது. வாசுதேவன் 'தகவல்' பகுதிக்குச் சென்று தன்னிடமிருந்த கடிதத்தைக் காட்டினான். அந்தச் சிப்பந்தி குழந்தையைப் பார்த்ததுமே, "நான்காவது மாடி, 28 ஆம் எண் அறை. லிப்ட் உபயோகிக்காதீர்கள். படிவழியே செல்லுங்கள்" என்றான். லிப்டுக்காக காத்திருந்த ஜனவரிசை கட்டடத்துக்கு வெளிவரையில் சென்றது.

வாசுதேவன் நான்கு மாடிகளையும் சந்தோஷத்துடனேயே ஏறினான். தன் குழந்தையிடம், "கொஞ்சம் கூட வலிக்காது, எறும்பு கடிக்கிறாற் போல, சுருக். அவ்வளவுதான்!" என்று பேசினான். குழந்தை சிரித்தது. மூன்றாம் மாடியில் மிக அதிக கூட்டம் இருந்தது. திருமண பெர்மிட் என்ற வாசலில் ரகளை நடந்துகொண்டிருந்தது. ஹெல்மட் அணிந்த பொலிஸ் ஓர் ஆசாமியை தரதரவென இழுத்துச்செல்ல அவன் வாயில் ரத்தம் தெரிந்தது.

வாசுதேவன் செல்லவேண்டிய 28ஆம் நம்பர் அறையின் முகப்பில் 'இம்யூனைஸேஷன்' என்று எழுதியிருந்தது. உள்ளே 20-25பேர்கள் பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்தார்கள். ஒவ்வோரிடமும் ஒரு குழந்தை இருந்தது. அவர்கள் எல்லோரிடமும் ஒரு மஞ்சள் கார்ட் இருப்பதை கவனித்த வாசுதேவன் அருகில் சென்று "இந்தக் கார்ட் எங்கே கொடுக்கிறார்கள்" என்று கேட்டான்.

ஓரத்தில் உட்கார்ந்திருந்த கிளார்க்கைக் காட்டினார்கள். அந்தப் பெண் ஒரு 'கொமிக்' வாசித்துக்கொண்டிருந்தாள்.

அவள் முன் ஒரு டெர்மினல் இருந்தது. அவளிடமிருந்து அரசாங்க கொஸ்மெற்றிக் தொழிற்சாலையின் பவுடர் மணம் வீசியது.

வாசுதேவன் தன் கடிதத்தை நீட்ட அவள் கொமிக்கில் இருந்து கண் எடுத்தாள். வாசுதேவனைப் பார்த்தாள். பார்வையில் வெறுப்பு இருந்தது. வாசுதேவன் சிரித்தான். பதில் சிரிப்பைத் தேடினான்.

"பெயர்"

"வாசுதேவன்"

அவள் டெலிடைப் அடித்தாள்.

"சிற்றிசன் கார்ட் எண்"

"வி667684.432 1578"

"திருமண பெர்மிட் எண்"

"வி.என்.768-1834 11.1665"

அவள் விரல்கள் விளையாடின.

"இருங்கள்" என்றாள்.

கொமிக்கை எடுத்துக்கொண்டாள். சற்றுநேரத்தில் டெலிடைப் உயிர்பெற்று தானாக அடிக்க ஆரம்பித்தது. அதை வாசுதேவன் தலைகீழாகத் திருப்பி படிக்க முயற்சித்தான்.

ASK CITIZEN TO REPORT TO Q DEPT WITH CHILD

அவள் நிமிர்ந்து வாசுதேவனைப் பார்த்தாள்.

"என்ன?" என்றான் வாசுதேவன்.

"உங்கள் திருமண பெர்மிட்டைக் காண்பியுங்கள்" வாசுதேவன் அந்தச் சிவப்புகார்ட்டை தன்பையில் இருந்து தேடி எடுத்துக்காட்ட அதை மௌனமாகப் பார்த்துவிட்டு திருப்பிக்கொடுத்தாள்.

"உங்களை க்யூ டிபார்ட்மெண்டில் கூப்பிடுகிறார்கள்"

"எதற்கு?"

"அங்கே போனால் தெரியும். நேராக இந்த வரிசையில் கடைசியில் இருக்கிறது. உடன் ஓர் ஆள் வருவான். அவனுடன் செல்லுங்கள்..."

செக்கியூரிட்டி ஆசாமி ஒருவன்கூட வர வாசுதேவன் அந்தக் கடைசி அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அறைக்கதவு திறந்த உடனேயே, "மிஸ்டர் வாசுதேவன்" என்றான் கண்ணாடி அணிந்த ஆசாமி. அவன் மேசை சுத்தமாக இருந்தது. "உட்காருங்கள்" என்றான். இண்டர்காமைத் தட்டிவிட்டு "நீலா, கொஞ்சம் வருகிறாயா?" என்றான்.

மற்றொரு கதவு திறந்து சுமார் நாற்பது வயதுப் பெண் வந்தாள்.

"குழந்தையைப் பார்த்துக்கொள்" என்றான்.

அவள் "வாடா கண்ணே" என்று வாசுதேவனிடம் இருந்து குழந்தையை கூப்பிட குழந்தை சந்தோஷத்துடன் அவள் மார்பில் பாய்ந்தது. அவள் அதை அணைத்துக்கொண்டு அதற்கு விளையாட்டுக் காட்டிக்கொண்டு உள்ளே சென்றாள்.

"எல்லோரிடமும் போலவா வேற்றுமுகம் கிடையாது" என்றான் வாசுதேவன்.

"உட்காருங்கள்"

"குழந்தைக்கு இம்யுனைஸேஷனுக்கு வந்தேன். என்னைமட்டும் இங்கே அனுப்பினார்கள்"

"உங்கள் திருமண பெர்மிட் எங்கே?"

(27 ஆம் பக்கம் பார்க்க)

மெக்சிக்கோவின் டெபால்சிங்கே நகரம். அரசியல்வாதியான மெண்டோசாவும் திருமதி மெண்டோசாவும் அவர்களது மகளும் மியாமி ரெஸ்டோரண்டில் சேரிவாசிகளான சொசிமோ, பற்றிஸ் இருவரினாலும், பொலிஸ் அதிகாரி மெக்டொனாலினால் பணம் கொடுக்கப்பட்டு கொலை செய்யப் படுகின்றனர். அச்சம்பவத்தில் ஏற்பட்ட ரயில் விபத்தில் பற்றிஸ் காருடன் எரியுண்டு போகிறான். பின்னர் மெக்டொனால் சொசிமோவை கொல்ல முயல்கிறான். தப்பியோடிய சொசிமோ பற்றிஸின் மனைவி டுமாச்சியுடன் காட்டுக்குள் தஞ்சமடைகிறான். அவர்களை தேடி ரீட்டா காட்டுக்குள் செல்கிறாள். ரீட்டாவை அழைத்து வர ஜோன்சன் தேவாலய பக்கம் செல்கின்றான். அங்கிருந்து இருவரும் தப்பித்துச் செல்லும்போது அம்புலன்ஸிலிருந்து வந்த துப்பாக்கி ரவைகள் அவர்களை பதம் பார்த்ததில் அசைவற்று விழுகின்றனர். மோட்டார் சைக்கிளில் புலனாய்வுத்துறை அதிகாரிகளான அலெக்ஸாண்டரும், கிறிஸ்தோபரும் அம்புலன்ஸை விரட்டுகிறார்கள். அம்புலன்ஸ் அலெக்ஸாண்டரை மோதித்தள்ளுகின்றது.

இனி...

## தொடர் - 15

கிறிஸ்தோபர் -

சில நிமிடங்களுக்குள் கண்முன்னே நடைபெற்ற திகில் சம்பவங்களினால் விறைத்துப் போனான். தனது உயிருக்கும் ஆபத்து நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்த கணத்தில் உஷாராகிவிட்டான்.

இத்தகைய திடீர்த்தாக்குதல்கள் அவனுக்குப் புதியவை அல்ல. வியட்நாமில் சில காலம் பணியாற்றியுள்ளான். வியட்கொங்குகளின் சில நுட்பமான அதிரடித்தாக்குதல்களின்போது மயிரிழையில் உயிர்தப்பியுள்ளான். அந்த அனுபவங்கள் அவன் மனதை பக்குவப்படுத்தியிருக்கின்றன. கடினப்படுத்தியிருக்கின்றன.

கண்முன் நடைபெற்ற அம்புலன்ஸ் வண்டியின் தாக்குதல் ஓர் அதிரடித்தாக்குதல். இத்தகைய தாக்குதல்கள், உயிர் அச்சமற்ற மூர்க்கமான தாக்குதல்கள் என்றே அவன் கருதினான்.

ஆனால்,

அவன் மனத்தில் குழப்பம். இந்தாக்குதல்கள் யாரை குறிவைத்தன என்பதை புரிந்துகொள்ளமுடியவில்லை. நண்பன் யார்? எதிரி யார்? என்பதை இனம் காணமுடியவில்லை.

அம்புலன்ஸ் வண்டியின் முதல் தாக்குதல் அவனையோ, அலெக்சாண்டரையோ குறிவைக்கவில்லை என்பதை அவன் தெளிவாக உணர்ந்தான்.

அவர்கள் அந்த இளஞ்சோடியை மோட்டார் சைக்கிளில் விரட்டியபோது அம்புலன்ஸ் வண்டியும் விரட்டியது. அம்புலன்ஸ் வண்டியில் இருந்தவர்கள் பயங்கரவாதிகளாக இருந்திருந்தால் அந்தக்கணமே அவர்களை மோட்டார் சைக்கிளில் துரத்திவந்தவர்கள் சுட்டுத் தள்ளியிருக்கலாம். அது அவர்களுக்கு எளிது. ஏனென்றால், அம்புலன்ஸ் இவர்களின் பின்னால் வந்துகொண்டிருந்தது. அவ்வண்டி பற்றி இவர்களுக்கு எதுவித சந்தேகமும் இருக்கவில்லை. அதனை அவர்கள் பொருட்படுத்தவும் இல்லை. அம்புலன்ஸை அவர்களின் முன்னால் விட்டால், அவர்களின் வேட்டையான இளஞ்சோடி, அவர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு மறைந்துவிடலாம் என்று நினைத்தார்கள். அதன் காரணமாக அவர்கள் போக்கில் சர்ர்ர்ரென மோட்டார்சைக்கிள்களைச் செலுத்தி இளஞ்சோடியை பின்தொடர்ந்துகொண்டிருந்தார்கள்.

திடீரென அம்புலன்ஸின் அவசர ஹோர்ன் ஒலி கதறிக்கொண்டு எழுந்தது. அவசரம்! அவசரம்! வழி விடுங்கள்! என்பதைப்போல அதன் அலறல் பயங்கரமாக ஒலித்தது.

இப்பேரொலியினால் அதிர்ந்துபோன அலெக்ஸும் கிறிஸ்தோபரும் தமது மோட்டார் சைக்கிள்களுடன் இருபுறமாக கரையொதுங்கிக்கொண்டு வீதியின் நடுவாக வழிகொடுத்தார்கள்.

சரேலென அதனூடாக விரைந்த அம்புலன்ஸ் வண்டி முன்னால் பாய்ந்தது.

அதிலிருந்து -

குண்டுகள் பறந்தன. அந்தத் மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டிருந் தது. குண்டடிபட்டு வீதியில் விழுந்த அப்பெண்ணைக் காணவில்லை.

அவள் எங்கே?

அவளைத் தேடுவதற்கான வாய்ப்பு மின்னல்வேகத்தில் இல்லாது போய்விட்டது. ஏனெனில், அலெக்சாண்டர் அப்பெண்ணைத் தேடுவதில் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தவேளையில் அலெக்சாண்டர் - அவனுடைய மோட்டார் சைக்கிள் - இரண்டுமே நடுவீதியில்.

அம்புலன்ஸ் வண்டியும் நடுவீதியில் விரைந்துகொண்டிருக்கிறது. அது அலெக்சாண்டர் மீதும் மோட்டார் சைக்கிள் மீதும் நொடிப்பொழுதில் படுவேகத்துடன் மோதிவிடலாம்.

அலெக்க்க்...!

கிறிஸ்தோபர் அலறினான்.

அதற்கு முன்னரே அலெக்சாண்டர் ஆகாயத்தில் தூக்கியெறியப்பட்டான். அவனுடைய மோட்டார்சைக்கிள் மீதே மோதுண்டு தடாலென்ன நடுவீதியில் விழுந்தான்.

என்பதை அவர்களின் நடவடிக்கைகள் காட்டிக்கொடுத்தன.

அவர்கள் பிரதேச பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள்தானா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அவனுக்கு கஷ்டமாகவிருந்தது.

இருள் கொஞ்சம் செறிந்துவிட்டது.

தூரத்துக்கு ஒன்றாகவிருந்த வீதி விளக்குகளும் மங்கலான வெளிச்சத்தை உமிழத் தொடங்கியிருந்தன. மோட்டார் சைக்கிள் களின் முன் விளக்குகளும் மங்கலாகவே எரிந்துகொண்டிருந்தன. அவர்கள் பொலிஸ் சீருடையில் இருந்தார்கள்.

பயங்கரவாதிகளும் அவ்வாறு பயணிக்க முடியும் அல்லவா என்ற எண்ணம் ஏற்படவே அவர்களை நோக்கிச் செல்லவும் பாதுகாப் புக் கோரவும் அவன் தயங்கினான். அது அவனாகவே முன்சென்று தன்னை பலிகொடுப்பதாகவல்லவா இருக்கும்.

அந்தவேளையில்தான் மறுபடியும் அம்புலன்ஸ் வண்டி வீதியின் தொலைவில் தோன்றியது. ஓர் இயந்திர கொலைகாரனாக, ரோபோவைப்போல மின்னல்வேகத்தில் மனித சம்ஹாரம்




துப்பாக்கிச் சூட்டில் இளஞ்சோடி தாக்குதலுக்குள்ளானது. வண்டி சரிந்தது. அவர்கள் காயமடைந்து வீதியில் விழுந்தார்கள்.

இது முதல் சம்பவம்.

அவர்களைச் சுட்டுவிட்டு முன்னால் விரைந்த அம்புலன்ஸ் தப்பிச்சென்று மறைந்துவிட்டது என்றுதான் அலெக்ஸும் கிறிஸ்தோபரும் நினைத்தார்கள். காயமடைந்த இளஞ்சோடியை காப்பாற்ற நினைத்தார்கள். மோட்டார் சைக்கிள்களை நிறுத்திவிட்டு கீழிறங்கி அவர்களை அணுகினார்கள்.

அப்போது -


அம்புலன்ஸ் திரும்பியது. மின்னல் வேகத்தில் வந்தது. அதுவரும் கடுகதி வேகத்தை கிறிஸ்தோபர் அவதானித்தான்.

நிச்சயமாக அது மறுபடியும் ஒரு தாக்குதலுக்கே வருகின்றது என்பதை ஊகிக்க அவனுக்கு வெகுநேரமாகவில்லை.

ஆனால், யாரைத் தாக்குவதற்கு? என்ற சிந்தனைகள் அவன் மனத்தில் எழுந்தன. அவன் ஒதுக்குப்புறமாகவே நின்றிருந்தான். அம்புலன்ஸ் கண்சிமிட்டும் நேரத்திற்குள் அவனைக் கடந்து சென்றது. படபடவென இயந்திரத் துப்பாக்கிக் குண்டுகளை சரமாரியாக உமிழ்ந்தது. வீதியில் கிடக்கும் ஜோன்சனின் உடல் சல்லடையானது. அது நடுங்கிக்கொண்டே அமைதி கண்டது. அலெக்சாண்டர் நடு வீதியில் நின்றிருந்தான். அவனுக்கு சில அடிகள் முன்னால் அவனுடைய

அனைத்துமே கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்துமுடிந்தன.

அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு கிறிஸ்தோபருக்கு சிலகணங்கள் பிடித்தன. அதன்பின்னர் அவன் மிகவும் உஷாராகிவிட்டான். ஆபத்து அந்த இளஞ்சோடிக்கு மட்டுமல்ல. பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரான தமக்கும் ஏற்படலாம் என்று எண்ணினான். அலெக்சாண்டர் மீதான தாக்குதல் வேண்டும் என்றே இழைக்கப்பட்டதாக இருக்கமுடியாது. அது தவிர்க்கமுடியாத விதத்தில் பதற்றத்தின் விளைவாகவும் ஏற்பட்டிருக்க லாம் என்று




மனதில் ஓர் எண்ணமும் ஏற்பட்டது.

ஆனால் -

அதனை உறுதியாக நினைக்கமுடியாது என்று எண்ணிக்கொண்டு எதற்கும் தன்னை பாதுகாத்துக்கொள்ளவேண் டும் என்று உஷார் அடைந்துகொண்டான்.

அந்நேரத்தில் -

பொலிஸ் நாய்களும், மோட்டார் சைக்கிள்களில் பொலிஸ்காரர்களும் வந்தனர். இச்சம்பவத்தைப் பற்றிய தகவலறிந்துகொண்டு, பிரதேச பொலிஸார் தமக்கு உதவிக்கு வந்திருப்பதாகவே கிறிஸ்தோபர் நினைத்தான்.

ஆனால், அவர்கள் வேறு எதனையோ தேடிக்கொண்டுதான் புறப்பட்டிருக்கிறார்கள்

புரிந்துமறைந்தது.

அம்புலன்ஸ் மோதி நாய்கள் சிதறியோடின. மரணித்து விழுந்தன. மோட்டார் சைக்கிள்கள் மாயாஜால வண்டிகளாகி ஆகாயத்தில் பறந்து தீப்பிழம்புகளாக நிலத்தில் விழுந்து திகுதிகுவென எரிந்தன.

அவைகளில் சில -

தீ உருளைகளாக பள்ளத்தில் சடசடவென உருண்டு ஓரிடத்தில் விழுந்து தீச்சுவாலை எழுப்பியவாறு எரிந்தன.

ஆறு மோட்டார் சைக்கிள்களும் பரவலாக பல இடங்களிலும் சிதறி விழுந்து எரிந்துகொண்டிருந்தன.

அதில் பயணித்தவர்கள் -

ஆங்காங்கே குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்தார்கள். அவர்களில் சிலரின் உடல்கள் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந் தன. இரண்டு மூன்று பேர் எதுவித சலனமும் இன்றி வீதியில் குப்பைகளாக எரிந்து கொண்டிருந்தார்கள்.

ஒருவன் -

தீயுடன் ஓடிக்கொண்டிருந்தான். மோட்டார் சைக்கிளின் எரிபொருள் பகுதி வெடித்துச் சிதறி, சைக்கிளை ஓட்டிவந்தவர் கள் மீது முழுவதுமாகப் படர்ந்து, அவர்களின் உடல்களை பஸ்பமாக்கத் தொடங்கியிருந்தது.

அவர்களில் ஒருவன் ஒரு தீப்பந்தமென எரிந்தபடி ஓடிக் கொண்டிருந்தான். தீப் பிழம்பு கிறிஸ்தோபரை நோக்கி ஓடிவருகின்றது.

(தொடரும்)

## மேடும் பள்ள...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுகுமாரன் வந்ததை நான் கவனிக்கவில்லை. மகிழ்ச்சி ததும்பும் புன்னகையோடு வந்த சுகுமாரன், ''டேர்... ஒரு மகிழ்ச்சியான செய்தி... என்னுடைய மனைவி கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைஞ்சிருக்கிறா...'' என தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டான். அவனை வாழ்த்தினாலும், மகிழ்ச்சியில் ஒன்ற முடியாமல் பிரதீபனின் எயிட்ஸ் தொற்று என் மனதை ஆக்கிரமித்திருந்தது.

சுகுமாரன் விடைபெற்றுச் சென்ற பின்னரும் எனது மனம் சியாமளாவுக்காகவும், பிரதீபனுக்காகவும் தவித்தது. மரணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது, எந்த மருந்தாலும் குணமாக்க முடியாத நோய் விரைவில் பிரதீபனை மரணத்திற்கு அழைத்துச் செல்லப்போகின்றதே என்ற கவலை ஒருபுறம்; வெளிநாட்டிலிருந்து வந்தபின் பிரதீபன் பாலுறவு கொண்டிருந்தால் சியாமளாவுக்கும் இந்த நோய் தொற்றியிருக்குமே என்ற ஆதங்கம் மறுபுறம் மிகவும் குழம்பிப் போயிருந்தேன்.


சாவு, அதுவும் நிச்சயிக்கப்பட்ட சாவு! இதை சியாமளா எப்படித் தாங்கிக்கொள்ளப்போகிறாள்... காலடியில் வந்த சொர்க்கத்தை எட்டி உதைத்துவிட்டு இப்போது காலனடிக்கு நிச்சயிக்கப்பட்டவனுக்கு பலியாகிவிட்டாளே என எண்ணிக்கொண்டிருந்த போதே சியாமளா வந்தாள்.

''இப்ப பிரதீபனுக்கு எப்படி டொக்டர்?'' என்னை நோக்கிய அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தவித்தேன். சின்னஞ்சிறு வயது முதல் கண்முன்னே வளர்ந்தவள். ஆடல், பாடல், நடிப்பு, படிப்பு எல்லாவற்றிலும் திறமையான மாணவியாக இருந்தவள். நிர்வாகத் திறன்மிக்க துணிச்சலான பெண்ணாக வளர்ந்து பட்டதாரியாகி ஆசிரியையாகப் பணியாற்றுபவள்... ம்... இந்த நோய் இவளையாவது பீடிக்காதிருக்கவேண்டுமென பிரார்த்தித்தபடி, பிரதீபனின் நிலைபற்றி இங்கிதமாக எடுத்துச் சொல்வதற்காக வார்த்தைகளைத் தேடிக்கொண்டிருந்தேன். சுகுமாரன் பிரதீபனின் மருத்துவ அறிக்கையுடன் பிரசன்னமானான்.

# சிறுவர் பக்கம்




## அழகாக நிறம் தீட்டுங்கள் 33



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விபரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கை வண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.



ஜி.அஸ்கா பானுன்,
தரம் 4 சி,
கைரியா முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலம்,
கொழும்பு- ).

அமிர்தலிங்கம் வசந்தன்,
தரம் 12,
முல்லைத்தீவு மகா வித்தியாலயம்,
முல்லைத்தீவு.




## சிறுவர் கைவண்ணம்



ஜி.அலிமா பானுன்,
தரம் 7 பி,
கைரியா முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயம்,
கொழும்பு- 09.

சி.பிரபூர்ணா,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.



## தெரிஞ்சுக்கணுமா?



- அறிவாளிக்கு ஒவ்வொரு நாளும் ஒரு புதுவாழ்வுதான்.
- உனக்கு கொஞ்சம் எனக்கு கொஞ்சம் அதுதான் நட்பு.
- உளறிக் கொண்டிருப்பவனை விட ஊமையே சிறந்தவன்.
- நீ யாரையாவது வெறுத்தால் அவரைப் பற்றி மட்டும் ஒருபோதும் பேசாதே.
- ஆண்களுக்கு உண்டு வெளிப்பார்வை, பெண்களுக்கு உண்டு அகப்பார்வை.
- இல்லாமல் போனாலும் சொல்லாமல் போகாதே.
- முடியாததை செய்ய வேண்டும் என்பது எவருக்கும் கட்டாயமில்லை.



ஹாய் குட்டீஸ்! இந்த மரத்தின் அடியிலிருந்து அதன் கிளைகளின் வழியே போய் உச்சியிலிருக்கும் பழத்தை பறித்து சாப்பிட உங்களால் முடியுமா?

தொகுப்பு:
கிளன் அல்பின்- என்.பி.விஜயன்,
பதுளை.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 30



### பாராட்டுப் பெறுவோர்....

1. ச.சஜிதா,
   தரம் 5 ஏ,
   குரவில் தமிழ் மகா வித்தியாலயம்,
   உடையார்கட்டு தெற்கு.
2. பி.சிவாஜினி,
   இல: 95 கோவில் வீதி,
   குருமன்காடு, வவுனியா.
3. எம்.எஸ்.எப்.ஷிப்னா,
   தரம் 4 பீ,
   ஜப்பார் மத்திய கல்லூரி, கண்டி.
4. எஸ்.மதுஷன்,
   தரம் 1,
   உயிர்த்தராசன் குளம், மன்னார்.
5. அ.கஷ்த்தினி,
   தரம் 4 பி,
   செண் சிசிலியா பெண்கள் கல்லூரி,
   மட்டக்களப்பு.

முதலிடம் பெற்றவர் - பா. பிரதீப், தரம் 8 பி,
நெடுங்கேணி மகா வித்தியாலயம், வவுனியா.

# தமிழ் கல்விக்கு தடைபோட நாம் தரம் கெட்டவர்கள் அல்லர்

மத்திய மாகாண சபையில் அங்கம் வகிக்கும் தமிழ்உறுப்பினர்கள் தமிழ்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகளை எதிர்த்தனர் என்று கூறுவதில் எந்த ஓர் உண்மையும் இல்லை. தனியாக தமிழ்கல்வி அமைச்சுக்கு நிதி ஒதுக்கப் படவும் இல்லை என அடித்துக் கூறுகின்றார் மத்திய மாகாண சபை உறுப்பினர் கே.பி.கோவிந்தராஜ்.

மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சு, முதல் அமைச்சின் கீழ் உள்ளது. பொதுவாகக் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஏற்கனவே அங்கீகரிக்கப் பட்டுள்ளன. முதல் அமைச்சரே மத்திய மாகாணத்தில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகளின் தேவைக்கேற்ப நிதியைப் பகிர்ந்தளிப்பார். ஆனால், அமைச்சர் அருள்சாமி கூறுவது போன்று தமிழ்கல்வி அமைச்சுக்கென ஒரு போதும் தனியாக வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்படுவதில்லை என்றும் அவர் விளக்கம் அளிக்கின்றார்.




''அமைச்சர் அருள்சாமி தேசிய ஊடகங் களுக்கு தகவல்களைத் தரும்போது சற்று நிதானத்துடன் செயற்படவேண்டும்.

அண்மையில் தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் போது மத்திய மாகாண சபை தமிழ் உறுப்பினர்கள் தமிழ பாடசாலைகளின் அபிவிருத்தியை குழி தோண்டிப் புதைக்க முயற்சிக்கின்றார் என்று குற்றம்சாட்டி உள்ளார். அவருடைய குற்றச்சாட்டு ஓர் இயலாமையே அன்றி உண்மை இல்லை.

கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தின்போது அதில் கலந்துகொண்ட இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி உட்பட ஆளும்கட்சி எதிர்க் கட்சி தமிழ் உறுப்பினர்கள் அனைவருமே முதல் அமைச்சர் இம்முறை தமிழ்பாடசாலைகள் அபிவிருத்திக்கு கூடுதலான நிதியை வழங்கவேண்டும் என வலி யுறுத்திப் பேசினர்.

கல்வி அமைச்சுக்குப் பொறுப்பான முதல் அமைச்சர் சரத் ஏக்கநாயக்க தமிழ் உறுப் பினர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு தமிழ் பாடசாலைகளுக்கு கூடுதலான நிதியை வழங்கவும் உறுதியளித்




துள்ளார். இதன்படி கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தமிழ்உறுப்பினர்களின் ஒட்டுமொத்த ஆதரவுடன் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இதுதான் உண்மை'' என்றும் அவர் விளக்கம் அளிக்கின்றார்.

அமைச்சர் அருள்சாமியின் பொதுவான இந்த குற்றச்சாட்டுகளை மையமாகக் கொண்டு வெளியான கட்டுரை தொடர்பாகவும் கோவிந்தராஜ் இப்படிக் கூறுகின்றார்.

''அமைச்சர் அருள்சாமியின் புலம்பலைக் கேட்டு மத்திய மாகாண சபையில் உள்ள தமிழ் உறுப்பினர்கள் தமிழ்கல்வி அபிவிருத்திக்கு தடையாக இருக்கின்றனர் என்று தீர்ப்பளித்துவிடக்கூடாது அமைச்சரின் கூற்றில் எந்த உண்மையும் இல்லை.

மத்திய மாகாணக் கல்வி அமைச்சராக கௌரவ இராமநாதன் தமிழ்க்கல்வி அமைச் சர்களான சதாசிவம், இராதாகிருஷ்ணன் புத்திரசிகாமணி ஆகியோர் பதவி வகித்துள்ளனர். அவர்கள் தமது அமைச்சின் அபிவிருத்தி மற்றும் செயல்திட்டங்கள் தொடர்பாக மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து தமிழ்உறுப்பினர்களையும் அழைத்து ஆலோசனைகளையும் பெற்று கலந்துரையாடிய பின்னரே நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். அவை வெற்றியடைந்தன.

ஆனால், அமைச்சர் அருள்சாமியோ தமிழ் உறுப்பினர்கள் அனைவரையும் ஓரம்கட்டிவிட்டு தன்னிச்சையாக செயல்படுகின்றார்.

மாகாணசபை உறுப்பினர்களை உதாசீனப்படுத்திவிட்டு தரகர்களின் ஆலோசனைப்படியே செயற்படுகின்றார். தமிழ்உறுப்பினர்களின் கோரிக்கைகளைக் கூட ஏற்பதில்லை.

அமைச்சர் அருள்சாமிக்கு நேரடியாக கைத்தொழில், நெசவு, விளையாட்டு, மகளிர் விவகாரம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் என்பன ஒப்படைக்கப் பட்டுள்ளன. இம்முறை இந்த அமைச்சுகளுக்கு 137 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் இவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதி முறையாகப் பயன்

**- சராகோகுலன் -**

படுத்தப்பவில்லை. உறுப்பினர்களின் சிபார்சுகளை உதா சீனப்படுத்திவிட்டு தனது தொழிற்சங்கத்தை வளர்ப்பதற்காக தனது தொழிற்சங்க பிரதிநிதிகளின் சிபார்சுகளுக்கே முன்னுரிமைகொடுத்து செயற்பட்டார்.

குறிப்பாகத் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியை

(23ஆம் பக்கம் பார்க்க)




எம்.பி.எம்.அன்ஸார்,
போத்தலப்பிட்டிய.

*கேள்வி:* நாகரிகம் என்ற பெயரில் பெண்கள் தொப்புளில் கம்மல் குத்திக்கொள்வது அழகாகவா இருக்கிறது பித்தா?

*பதில்:* அழகினை ஆராதிப்பவன் நான். என்றாலும்...சிலசமயம் 'சுதந்திரத் தொப்புளுக்கு ஏன் இந்தக் குட்டிவிலங்கு' என்றும் கேட்கத் தோன்றுகிறது!



செல்வமலர்,
ஹட்டன்.

*கேள்வி:* கழுதைக்கும் கழுதைக்கும் கல்யாணம் பண்ணிவச்சால் மழை வரும் என்கிறார்களே! உண்மையா?

*பதில்:* கழுதைக்கும் கழுதைக்கும் கல்யாணம் பண்ணிவச்சால் மழை வராது. இன்னொரு கழுதைக்குட்டிதான் வரும்.

என்.அனுஷா,
கொழும்பு- 11.

*கேள்வி:* கோழைகளுக்கும் வீரர்களுக்கும் இடையிலான வேறுபாடு என்ன பித்தா?

*பதில்:* கோழைகள் மரணத்துக்கு முன்பே பலமுறை இறந்து போகின்றனர். வீரர்கள் மரணத்தின் ருசியை ஒரு முறையே அறிகின்றனர்.

எல்.சாருமதி,
கொழும்பு- 05.

**கேள்வி:** காதலன் காதலிக்குக் கொடுக்கும் முத்தத்துக்கும் கணவன்





மனைவிக்குக் கொடுக்கும் முத்தத்துக்கும் என்ன வித்தியாசம்?

**பதில்:** முதலாவது 'விண்ணப்பம்' இரண்டாவது 'நன்றி'. எதற்கு 'நன்றி' என்றெல்லாம் கேட்கக்கூடாது.

எம்.லட்சுமி,
திருமுறிகண்டி.

**கேள்வி:** பெண்களை ஏமாற்றும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?



**பதில்:** எரிவது நின்றால் புகைவதும் நிற்கும். ஏமாறுவது குறைந்தால் ஏமாற்றுவதும் குறையும்.

எம்.லட்சுமி,
திருமுறிகண்டி.

*கேள்வி:* பிறப்பு, இறப்பு, வளைகாப்பு, திருமணச் சடங்குகள், திறப்பு விழாக்கள் ஆகிய செய்திளை நாம் உற்றார், உறவினர் ஆகியோருக்கு அறியச் செய்வது ஏன்?

*பதில்:* ஒருவர் நண்பரைப் பார்த்து உன் தங்கை எவனோ ஒருவனோடு சுற்றிக் கொண்டிருக்கிறாள், அவளைக் கண்டித்து வை; அவனோடு சுற்றுபவனைப் பார்த்தால் அவ்வளவு நல்லவனாகத் தெரியவில்லை என்றார் ஒருவர் மிக அக்கறையோடு. அந்த நண்பரோ சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் திணறினார். என்ன விஷயம் என்று விசாரித்தால், தன் தங்கையின் திருமணத்துக்கு அந்த நண்பருக்கு இவர் அழைப்பு அனுப்பவில்லை. அதனால் திருமணம் நடந்த விவரமே அவருக்குத் தெரியவில்லை. எனவே தன் நண்பனின் தங்கையையும் அவனது கணவரையும் கள்ளக் காதலர்கள் என்று எண்ணி விட்டார். விஷயம் தெரிய நேர்ந்ததும் அவருக்கு முகத்தை எப்படி வைத்துக் கொள்வதெனத் தெரியவில்லை. இப்படி சத்தமில்லாமல் இல்லத்து நிகழ்ச்சிகளை செய்துவிட்டு பின்னர் அழைக்கப் படாதவர்கள் அறிய நேரும்போது சம்பந்தப்பட்டவர்கள் வெட்கப்பட, வருத்தப்பட்ட நேருகின்றது.

பிறப்பு, இறப்பு, வளைகாப்பு, திருமணச் சடங்குகள், திறப்பு விழாக்கள் ஆகிய உங்கள் வட்டத்துச் செய்திகள் அனைத்தையும் உங்களைச் சுற்றியவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

இத்தகைய நிகழ்ச்சிகள் மகிழ்ச்சியையும், துன்பத்தையும் பலரோடு பகிர்ந்து கொள்ளவும், உறவையும் நட்பையும் புதுப்பித்துக் கொள்ளவும், இறுக்கமடையச் செய்யவும் உதவுகின்றன.

எம்.ஜீவா,
கொழும்புத்துறை.

*கேள்வி:* திருமணம் செய்துகொள் வதற்கு என்ன தகுதி வேண்டும் பித்தா?

**பதில்:** லைசென்ஸ் இல்லாமல் யாரும் எந்த வண்டியையும் ஓட்ட முடியாது.

நீங்கள் பதினெட்டு வயதிற்கு உட்பட்டவராக இருந்தால் (மோட்டார் வாகன சட்டப்படி) ஐம்பது சி.சிக்கும் குறைவான கியர் இல்லாத வாகனத்தை லைசென்ஸ் பெறாமல் ஓட்டமுடியும். அதுவே, பதினெட்டு வயது நிரம்பியவராக இருந்தால் ஐம்பது சி.சிக்கு மேற்பட்ட கியர் உள்ள வாகனத்தை லைசென்ஸ் பெற்று ஓட்டத் தகுதிபெறுவீர்!

நிரோஷ்,
திருமுறிகண்டி.



*கேள்வி:* அன்பின் பித்தா! நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். காதலை எப்படிச் சொல்லலாம்?

*பதில்:*

''செல்லம்! நீ ஒரு நடமாடும் தோட்டம்... உன்னிடம் பூ இருக்கு...காய் இருக்கு... கனி இருக்கு...'' என்று ஆரம்பியுங்கள்.

''ஏற்கனவே என் செருப்பு பிஞ்சு இருக்கு'' என்று பதில் வராட்டி சரி!

எஸ்.செந்திலன்,
பிரமலை.

*கேள்வி:* பித்து அங்கிள்! கப்பல் ஏன் ஆடுகின்றது என்று உங்களுக்குத் தெரியுமா?

*பதில்:* அது எப்பவும் 'தண்ணி'யில் இருக்கிறது அதுதான்.

புலவேந்திரன்,
கல்முனை.

*கேள்வி:* முட்டாள்களின் அறிவுரை எப்படியிருக்கும் பித்தா?

*பதில்:* ஒரு செய்தித் தாளுக்கு வந்த விளம்பரம் நீங்கள் எழுதப்படிக்கத் தெரியாதவரா? அப்படி இருந்தால் எனக்கு எழுதுங்கள். நான் உங்களுக்கு உதவத் தயாராக இருக்கிறேன்.

**பித்தன் மீது பித்தாய் உள்ள பித்தர்களே! பித்தனிடம் எத்தனை பித்தான கேள்விகளையும் நீங்கள் தொடுக்கலாம். அவைகளின் தரம் அறிந்து பித்தன் பதிலளிப்பான்.**
**அனுப்ப வேண்டிய முகவரி:**
**'பித்தன் பதில்கள்'**
**சுடர் ஒளி (வாரஇதழ்)**
**இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு- 14.**




பிரசவ
வலியோடிருக்கும்
எனக்காக
பால்மா பெறுவதற்கு
பக்கத்து தெருவிற்குப்போன
என் கணவர்
இனந்தெரியாத நபரின்
துப்பாக்கிச் சன்னத்திற்கு
இரையாகி விட்டார்

பிறந்ததோ
ஆண்குழந்தை
அழகான மென்சிரிப்பு
அற்புதக் கண்கள்
அளவான முக்கு
கன்னங்கறுப்புடன்
என்னவரைப் போலவே
இன்னமுதன் பிறந்துள்ளான்.

நானோ...
தனிமையில்
கணவனோ...
நீள் துயிலில்
இப்படி இருக்கையில்
எந்தனது கண்மணிக்கு
யார் பெயர் வைப்பது?
யாருடைய பெயர் வைப்பது?

■ ஒட்டுசுட்டான் வே.முல்லைத்தீபன்

## காதல் அரங்கேற்றம்

இரவுப் பொழுதினில் - என்
இதய மேடைதனில் காதல் அரங்கேற்றம்,

கண்ணாடி இதயத்தின் முன்- உன்
காதல் அரங்கேற்றம்,
கண்முன்னே வேறொன்று...

ஒத்திகைக்கான தாளத்தை மட்டும்
இன்னும் நிறுத்த முடியாமலேயே
உன் பெயரில் துடித்துக் கொண்டிருக்கும்
என் இதயம்,

பாதணியில்லா கால்களை
பதம் பார்க்கிறது
உன் உடைந்து போன
காதல் கண்ணாடி துகள்கள்...

எப்படி நான் தாங்கிக் கொள்வேன்?
இப்படி ஓர் அரங்கேற்றத்தை....

உன் உச்சரிக்கப்படாத மௌன பாடலுக்கு மட்டுமே
நாட்டியமாட கற்றுத் தந்தாய்,

நிசப்தம் இன்றிக் கேட்கும் கறுப்பு யுகங்களை
எப்படி கழித்து விடும்? - இக் காதல் அரங்கேற்றம்......

■ பொகவந்தலாவை சோ.சுதர்ஷினி




## புகழ்மாலை சூட்டி விட்டாள் லுணுகலை - ஸ்ரீ புலம்புவதை நீ விட்டு லுணுகலையே சிரி!!

■ கவிஞர் லுணுகலை ஸ்ரீ



அழகு சூழ்ந்த மலைகள் ஆறு.
ஆளு கின்ற மலையகம்!
பழகும்போது பாசகீதம்
பாடு கின்ற மலையகம்!
உலகம் யாவும் வந்தால்கூட
உவந்து ஏற்கும் மலையகம்!
விலகியோடும் துயரம் யாவும்
விரும்பி வருவீர் மலையகம்!

இலங்கைத் தீவின் பெயரை எங்கும்
இலங்க வைத்த மலையகம்!
சலங்கை கட்டி ஆடும்பேயால்
சவளை யான மலையகம்!
விலங்குகளை ஒடித்தெறிந்தால்
விடிவு காணும் மலையகம்!
'இளங்கை'யெலாம் ஒன்றுசேர்ந்தால்
இலங்குமடா மலையகம்!



கொலைவாசம் வீசும் எம்தேசத்தில் கலை வாசம் கமழ்ந்து சிரிக்கிறது மலையகம்! மலையகத்தை மலையகம் என்பதைவிட கலையகம் என்றே கூறலாம். அங்கே புதிய புதிய கவிஞர்களும், கலைஞர்களும், எழுத்தாளர்களும் புத்துணர்ச்சியோடு புதுமைகள் படைக்க புறப்பட்டுக்கொண்டிருப்பதால் பூந்தமிழ்த்தாய் பூரிப்பெய்துகிறாள்.

மலையக மண்ணின் வாசத்தை மட்டுமல்ல அ[இ]ந்தத் தேசத்தின் நேசத்தைக்கூட சுவாசத்தில் ஏந்தி எண்திக்கும் வெண்கதிர்களைப் பரப்பி களைக்காது, கலைத்தேரில் கனவுகளையும், கற்பனைகளையும் பூட்டிக்கொண்டு பல பரிகளில் பகலவன்கள் பாருக்கு வந்திருக்கின்றன.

பல சோதனைகளையும், வேதனைகளையும் தாண்டி சாதனைகள் புரிந்து சரித்திரத்தில் இடம்பிடிக்க, ஈழத்து கவிஞர்களோடு சேர்ந்து இன நல்லிணக்கத்திற்கு வடம்பிடிக்க, வாழவழியின்றி வாடிக்கொண்டிருக்கும் மக்களின் வாழ்வைப் படம் பிடிக்க, பட்டிதொட்டியெங்கும் முரசறைய, முகிழ்த்து வந்திருக்கிறாள் லுணுகலை ஸ்ரீ என்னும் இந்த இளையகவி.

இவரது இயற்பெயர் ராதிகா பெருமாள். எனினும், தாய்மண்ணின் மீது கொண்ட அளவற்ற பற்றினால் அப்பெயரையே தனக்குச் சூட்டிக் கொண்டார். இவரது 'மோட்ச முழக்கம்' என்னும் முதற்தொகுதியே இந்தக் கவிதாயினி ஈழத்தின் கவிதா சாம்ராஜ்யத்தை கட்டியாளவந்த கவிராணி என்பதற்கு கட்டியம் கூறுகின்றது.

மோட்ச முழக்கம் நூலில் இவர் இவ்வாறு கூறுகின்றார் 'இந்நூல் எனது முதல்தொகுப்பு; முதல்முனைப்பு. தமிழ் உலகத்துக்கு கவிதைப் பக்கத்தில் நான் இட்ட பிள்ளையார் சுழி. இதில் கற்பனை முலாம் இல்லாத நிஜங்களுமுண்டு. ஒப்பனை போட்டுக் கொண்ட கற்பனைகளும் உண்டு. பெண்கள் சார்ந்த சில அமங்கல சொற்களை கவனத்துடன் கலைத்திருக்கிறேன். அனேக கவிதைகளில் இறுதியில் ஒரு சின்னத் தத்துவத்தை ஒளித்து வைத்துள்ளேன். சில நிதர்சனங்களைத் தவிர கற்பனையில் எந்த விழுமியங்களையும் வீழ்த்தாது, மீறாது வெல்ல முனைந்திருக்கிறேன். பெரும்பாலும் பொருட்குற்றம் புலப்படாதிருக்கப் போராடியிருக்கிறேன். என் பிள்ளை முயற்சியால் தான்தோன்றிய எண்ணங்கலை கவிதைத் தொகுப்பாக உங்கள்முன் மும்மொழிகிறேன்; வழிமொழிந்தாலும் பழிமொழிந்தாலும் எனக்கு இன்பமே. இவ்விரண்டும் என் வளர்ச்சிக்குச் சாதகமே' என்று வசனங்களை வார்க்கும்போது கூட வாக்கியமெங்கும் கவித்துவத்தேன் வழிந்தோடுகின்றது.

''செல்வி லுணுகலை ஸ்ரீ அவர்களின் கவியாக்கம் கண்டேன். முன்னுரை கேட்டு வந்திருந்தார். அன்பு, அறிவு, அடக்கம் அத்தனையும் அவரது நடைமுறையில் காணமுடிந்தது. இப்பண்புகள் கல்வியின் கால்கள். தக்க பாத்தியில் தக்கபடி பயிரிடப்பட்டிருந்தால் விருட்சமாயிருக்க வேண்டிய வித்து. கவித்துவம் அவர் கைவசம் உண்டு. அதைக் கவிந்தகள் சொல்கின்றன. தன் இயல்பாற்றலை மட்டுமே நம்பிக் கவியாத்திருக்கிறார். அவர் இளமைகது இவை ஏற்றவை. ஆனாலும் லுணுகலை ஸ்ரீக்கு காலம் நிறைய இருக்கிறது. இயல்பாற்றல் நிறைந்த இவருக்கு கவிதைக்கடலில் கால்வைப்பது ஒன்றும் கடினமல்ல. முயல்வாராக! இம்மொட்டு போதாகி மலரட்டும்'' என்கின்றார் இவரது கவிதை நூலில் பெரியார் கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள்.

''இந்தத் தொகுதியைப் பார்க்கும்போது லுணுகலை ஸ்ரீயின் கவித்துவம் எல்லா இடங்களிலுமில்லை என்றாலும் அது நிச்சயமாக உள்ளது. முரண்நிலை வார்த்தைகளுக்குள்ளே சொற்சாதுரியம் இருக்கலாம். ஆனால், பெரும்பாலான வேளைகளிலே கவிதை இருப்பதில்லை. புதுக்கவிதை என்பது சொற்சாதுரியமல்ல. கவிதை மனநிலை உணர்ச்சிகளைத் தளமாகக்கொண்டது. ஆனால், இறுதியில் ஓர் உணர்கை ஏற்படவேண்டும். லுணுகலை ஸ்ரீயிடம் கவித்துவப் பயணத்தை மேற்கொள்வதற்கான தகுதி உண்டு'' என்கின்றார் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள். துணிவும், துடிப்பும், ஆற்றலும்மிக்க இந்த இளம்பெண் கவிஞரின் முகவரி:

இல.31/1, லுணுகல, லுணுகலை, பதுளை.
தொ.பே.இல: 0602553272. மின்னஞ்சல்:
lunugalasri@yahoo.com

## ஒன்று + ஒன்று = ஒன்று

ஒன்றுமில்லாமல்
ஒன்றுமில்லை
ஒன்றுக்குள்
ஒன்றாவதிருக்கிறது...

ஒன்றோடு
ஒன்றைக் கூட்டி
ஒன்றோடு
ஒன்றைக் கழித்து
ஒன்றோடு
ஒன்றை பெருக்கி
ஒன்றோடு
ஒன்றை வகுத்தாலும்
ஒன்றே வரும்...

ஒன்றையொன்று
பார்க்கும் போதும்
ஒன்று வரும்...
ஒன்றையொன்று
ஈர்க்கும் போதும்
ஒன்று வரும்...

ஒன்றோடொன்று
கோர்க்கும் போதும்
ஒன்று வரும்...

ஒன்று தெரியுமா?
ஒன்றால்தானே
ஒன்று வந்தது...

ஒன்றாய்
ஒன்றிருக்கிறது...
ஒன்றில்
ஒன்றிருக்கிறது..
ஒன்றோடு
ஒன்றுக்காய்
ஒன்றிருக்கிறது...

ஒன்றிருந்து
ஒன்றிலாது போய்விடின்
ஒன்றுமில்லை...
ஒன்றுக்குத்தானே
ஒன்றிலாது போய்விடும்...!

ஒன்றை
ஒன்றுக்குள் வைத்து
ஒன்றுக்காய்
ஒன்றைக் காட்டாது...
ஒன்றென்றாலும்
ஒன்றை காட்டுவோம்...

ஒன்றுக்காய்
ஒன்றைக் கூறாமலும்...
ஒன்றுக்காய்
ஒன்றோடு சேராமலும்...
ஒன்றுக்காய்
ஒன்றோடு மாறாமலும்
ஒன்றாய் வாழ
ஒன்றாவோம்...
ஒன்றுமில்லாவிட்டாலும்
ஒன்றுவதால்தான்
ஒன்றுமிலாதிருக்கலாம்...

ஒன்றுக்கொன்று
ஒன்றாததால்தான்
ஒன்றுமிலாது இருக்கிறோம்...
இனியாவது
ஒன்றுக்கு
ஒன்று வந்தால்
ஒன்றாகிப் பார்ப்போம்.

ஒவ்வொன்றுக்கும்
ஒவ்வொன்றிருப்பது போல்
ஒவ்வொன்றினுள்ளும்
ஒவ்வொன்றிருக்கிறது
ஒன்றுதானே அதையுணரும்...!

ஒன்றிடம்
ஒன்றில்லாததனாலும்...
ஒன்றுபோல்
ஒன்றிருப்பதனாலும்...
ஒன்றைக் கண்டு
ஒன்றைவிட்டு
ஒன்றுக்காய்
ஒன்றாகினால்
ஒன்றுமிலாது போய்விடும்...

நான் -ஒன்று...
நீ -ஒன்று...
நானும் நீயும் ஒன்று...
நமக்குள்
ஒன்றை தவிர
ஒன்றுமிருக்கக் கூடாது...

வா...
நீயும் நானும்
ஒன்றாவோம்...
ஒன்றில்
ஒன்றை வைத்து
ஒன்றைச் செய்வோம்-நமக்கு
ஒன்றுபோதும்...!

ஆனாலொன்று,
ஒன்றிருந்தால்தான்
ஒன்று வரும்...
ஒன்றுமில்லாவிடின்
ஒன்றுக்குள்ளும்
ஒன்றுமில்லை...!

■ பொத்துவில் அஸ்மின் உதுமாலெவ்வை

## புதிய புத்தாண்டே உன் வரவால்...

புதிய வானமெங்கும்
புது வசந்தங்கள்
பூத்துக் குலுங்கும்
புன்னகைப் பூக்கள்
புலர்ந்து சிரிக்கும்
புதிய புத்தாண்டே
உன் வரவால்...

புவியும் புன்னகைக்கும்
புதுவாழ்வு மலர்ந்திடும்
பூவையர் அகம்மகிழ்ந்திட
புதுத் தென்றல் கானம் இசைத்திடும்
புதிய புத்தாண்டே
உன் வரவால்...

மனைகள் மாண்புற...
மங்கலங்கள் தங்கிடும்
மறைத்தமிழர் வாழ்வில்
மாற்றங்கள் தந்திடும்
புதிய புத்தாண்டே
உன் வரவால்...

கடந்த காலங்கள்
காணாமல் போய்விடும்
நடந்துவந்த பாதைதனில்
நம்பிக்கை ஒளிவீசும்
நம்தேசமெங்கும் நேச முரசொலிக்கும்
புலர்ந்திட்ட
புதிய புத்தாண்டே
உன் வரவால்...

தாயகம் பூரிக்கும்
தமிழர் கரங்கள் ஓங்கும்
தமிழின் இனிமை மணக்கும்
தரணியில் சமாதானம் பிறக்கும்
புதிய புத்தாண்டே
உன் வரவால்...

■ சண்டிலிப்பாய் க.நாகேஸ்வரா

## பறவையின் பாடல்

காலை நேர நிலவாய் ...
என் வாழ்நாள் கழிகிறது...
ஐயறிவு ஜீவன் கொண்ட
உரிமை கூட இன்றி... நான்!
என் தலைதனில் அரைக்கப்படும்
மிளகாயின் காரங்கள்
மகா கொடுமை...
வேலைவெட்டியின்றி...
வெட்டிவேலை செய்வதில் தான்
காலனுக்கும்
சந்தோஷமோ என்னவோ?
என் இதயப் பாத்திரத்துக்குள்
வேக வைக்கப்படுகின்ற
உணர்ச்சிகளெனும்
உணவுகள் உப்புச் சப்பற்றதாகவே
கொட்டப்படுகின்றன நித்மும்!
வழிதேடமுடியா பறவையின்
நிலையில் நான்.. வலியில் சிறகுகள்
து(அ) டித்துக் கொள்கின்றன!
என் நெஞ்சாங் கூட்டுக்குள்
தடவித் தடவி எதையோ தேடுகிறேன்
வெறுமைதான் என் கைகளை
அணைக்கிறது.. !

■ நீயத்தலாவை எச்.எப்.ரின்னா

# சங்கிலித் தொடராகும்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி )

வழிபாட்டுத் தலத்தில் வைத்து பகிரங்கமாகவே படுகொலை செய்யப்பட்டார். அப்படியானால் மகேஸ்வரனின் பாதுகாப்பை நீக்கி கொலைகாரர்களுக்கு அரசாங்கமே வழியமைத்துக் கொடுத்துள்ளது. கொலை செய்யயப்படப்போகின்றனர் என்பதை நன்கு தெரிந்துகொண்டே இவர்களின் பாதுகாப்பை அரசு நீக்கி உள்ளது. இது திட்டமிடப்பட்ட ஒரு சதி. அரசுக்கு எதிராக பேசுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு மரணம்தான் பதில் என்று கூறப்பட்டுள்ளது. இப் படுகொலைக்குப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டபாய ராஜபக்ஷ உட்பட முழு அரசாங்கமுமே பொறுப்பேற்கவேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நேரடியாகவே குற்றம் சுமத்தி உள்ளனர்.

மகேஸ்வரனின் கொலையில் ஒரு திருப்பம் ஏற்பட்டுள்ளது. இதுவரை இடம்பெற்ற கொலைச் சம்பவங்களின் போது கொலைகாரர்கள் சாதுரியமாக தப்பிச் சென்றுள்ளனர்.

ஆனால் மகேஸ்வரன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர் மகேஸ்வரனின் விசுவாசமான மெய்ப்பாதுகாவலரின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகியதால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். அவர் பயன்படுத்திய கைத்துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நபர் யார்? இந்த கைக்கூலியை ஏவிவிட்டவர்கள் யார்? இதன் பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் யார் என்பது அறியப்படவேண்டிய ஒன்று.

அரசாங்கம் நடத்தும் விசாரணைகளில் சிறிதும் நம்பிக்கை இல்லை. எனவே சர்வதேச பொலிஸார் அழைக்கப்படவேண்டும். அவர்கள் அரச தலையீடு இன்றி சுதந்திரமாக விசாரணைகளை நடத்த அனுமதிக்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சாட்சியங்கள் பாதுகாக்கப்படவேண்டும். சந்தேகநபர் பாதுகாக்கப்படவேண்டும். இதற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கவேண்டும்.

கடந்த கால சம்பவங்களை இங்கே சுட்டிக்காட்டவேண்டிய அவசியம் அத்தியாவசியமாகி உள்ளது.

திருகோணமலையில் பாடசாலை மாணவர்கள் ஐவர் விசேட அதிரடிப் படையினால் சுட்டுக்கொல்லப்பட்ட போது கைப்பற்றப்பட்ட ரவைகள், மாயமாக மறைந்துவிட்டன. தடயப் பொருட்கள் மாற்றப்பட்டுள்ளன.

கொழும்பில் இடம்பெற்ற ஆட்கடத்தல்கள், கொலைகள் மற்றும் கப்பம் பெறுவதில் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்த முன்னாள் விமானப்படை அதிகாரியான கஜநாயக்க கைது செய்யப்பட்டார். அவர் இப்போது எங்கே? கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பல கோடி ரூபா பணத்திற்கு என்ன நடந்தது? இவற்றுடன் தொடர்புடையவர் என கருதப்பட்ட கருணா இராஜதந்திரிகளுக்கான பாஸ்போட்டில் சிங்களப் பெயரில் லண்டன் சென்றுவிட்டார்.

இதேபோன்று மகேஸ்வரன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த சந்தேகநபரும் கொலை செய்யப் படலாம் அல்லது காணாமல் போய் விடலாம். தடயப் பொருட்களும் சிதைக் கப்படலாம் என்ற சந்தேகம் எழுப்பப் பட்டுள்ளது. எனவே இவை இடம்பெறா மல் பாதுகாக்க வேண்டியதும் அதற் கான உத்தரவாதம் அளிக்க வேண்டியதும் அரசின் கடமை.

சட்டவிரோத கும்பலினாலும் அரசியல் எதிரிகளாலும் இலக்கு வைக்கப்பட்ட இருவரில் ஒருவரான மகேஸ்வரன் கொலை செய்யப்பட்டுவிட்டார். இரண்டாம் நபரான மனோகணேசன் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறித்தான் தம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு இன்று கேள்விக் குறியாகிவிட்டது.

இந்நிலையில் அரசின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல என்ன கூறுகின்றார்?

''மகேஸ்வரனின் பாதுகாப்பு நீக்கப்பட்டதால் தான் உயிராபத்து ஏற்பட்டது என்று கூறமுடியாது. 18 பேரல்ல அதற்கு மேலானவர்கள் உடன் இருந்திருந்தாலும் சுடப்பட்டிருப்பார். இவர் யாழ்ப்பாணம் சென்றபோதே அங்கு சுற்றிவளைக்கப்பட்டுள்ளார். ஆனால் அதில் தப்பி வந்துள்ளார். மகேஸ்வரனின் கொலைக்கு அரசின் மீது விரல் நீட்டக்கூடாது'' என்று கூறிவிட்டார். அப்படியானால் மகேஸ்வரனுக்கு கொலை அச்சுறுத்தல் இருந்துள்ளது என்பதை இந்த அமைச்சர் ஏற்றுக்கொள்கிறார். எனினும் அவருடைய பாதுகாப்பு நீக்கப்பட்டது ஏன்? கொலைகாரர்களின் அடுத்த குறி யார்? அடுத்து பலியாகவுள்ள தமிழ் அரசியல்வாதி யார்?

இன்று மக்கள் முன் எழுத்துள்ள கேள்விகள் இவை. இதற்கு பொறுப்பான அரசின் பதில் என்ன? விடைதான் கிடைக்குமா?

# தமிழ்க் கல்விக்கு...

(23 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் இல்லாத ஒன்றைக் காட்டி தனது தவறுகளை மறைக்க முயல்கின்றார்.

மலையகத்தில் உள்ள தமிழ்ப்பாட சாலைகளின் அபிவிருத்திக்கு கூடுதலான நிதியைப் பெற்றுக்கொடுத்துள்ளோம் என்பதுதான் உண்மை.

நடப்பு ஆண்டில் மத்திய மாகாணத்தில் இருந்து 500 மாணவர்களை பல்கலைக் கழகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்ப தாகக் கூறுகின்றார்.

அதற்காக இவரிடம் எந்த ஒரு திட்டமும் இல்லை. எமது பிள்ளைகள் கஷ்டப்பட்டுப் படிக்கின்றனர். ஆசிரியர்கள் அக்கறையுடன் படிப்பிக்கின்றார்கள். மேலதிக வகுப்புகளை நடத்துகின்றனர். இதனால், மலையகம் சிறிதளவாவது பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. நாம் எமது பிள்ளைகளை பல்கலைக்கழகம் வரை அனுப்பி வைப்போம். அதில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் B.A. அல்லது B.Sc. பட்டதாரிகளாகி வெளிவருகின்றனர்.

ஆனால், இவர்கள் அதற்குமேல் படிக்கக்கூடிய பொருளாதாரம் இல்லை. எனவே, திறமையாகச் சித்தியடைந்த பத்து மாணவர்களையாவது தெரிவு செய்து அவர்கள் எம்.எஸ்.சி., பி.எச்.டி. என்று தமது படிப்பைத் தொடர திட்டம் வகுக்க வேண்டும். அதனைச் செயல்படுத்த வேண்டும்.

இதை விட்டு விட்டு, தெருத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு அடிப்பது போல் பல்கலைக்கழகம் அனுப்பப்போகிறேன் என்று கூறுவதில் அர்த்தம் இல்லை. பல்கலைக்கழகத்தில் இருந்து மேலே அழைத்துச்செல்லவேண்டும். அதுதான் மலையகத்திற்கு ஆற்றும் சேவை'' என்று கோவிந்தராஜ் கூறினார்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 296

*சொற்சிலம்பம் 296போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் ஜனவரி 13ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர் கள் ஜனவரி 26 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.294 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.*

*தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண் ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண் டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரிய வர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 296

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | ■ | 10 | | ■ | 11 | |
| 12 | | 13 | | ■ | 14 | | ■ |
| | ■ | 15 | | 16 | | ■ | 17 |
| ■ | 18 | | ■ | 19 | | 20 | |
| 21 | | | 22 | | ■ | 23 | |
| 24 | | ■ | | ■ | 25 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 294

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பெ | ண் | 2 சா | 3 தி | ■ | 4 அ | 5 ச | டு |
| று | ■ | 6 ம | ன | நி | றை | வு | ■ |
| 7 ம | 8 க | ர | ம் | ■ | 9 த | ரி | 10 சு |
| 11 தி | ட | ம் | ■ | 12 மே | ல் | ■ | த் |
| ■ | ன் | ■ | 13 ஓ | சை | ■ | 14 ச | தி |
| 15 ச | மூ | 16 க | ம் | ■ | 17 க | ரி | ய |
| 18 கு | றி | ல் | ■ | 19 கா | த் | த | ல் |
| னி | ■ | 20 வி | ன | வு | த | ல் | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல.296

**இடமிருந்து வலம்**

1. கலந்துரையாடல்/ ஆலோசனை கேட்கும் பேச்சு.
4. ஒத்தாசை.
7. பத்திரிகையின் 'கொலத்தை' இப்படித் தமிழில் கூறுவர். நறுமணப் புகையையும் வெளியிடுவது இதுதான்.
8. பொன், வெள்ளி போன்ற வற்றை உரைத்துப் பார்ப்பது இதில்.
9. வழக்கில் மனுதாரர்.
10. மத்தி.
11. ஒன்றை மாட்ட வைக்க பின்னுவது.
12. சாய்தல்.
14. வீடு.
15. பலதும் சேர்ந்திருப்பதை இப்படிக் கூறுவர்.
18. பாரமான/ அதிக.
19. கட்டுப்பாடில்லாமல் அலைபவன்.
21. தாய், தகப்பன், பிள்ளைகள் ஒன்று சேரும் அலகு.
23. பாடல்/பாடகன்/குரங்கு.
24. கணவனை இழந்த நிலைமை.
25. தங்குமிடம்.

**மேலிருந்து கீழ்**

1. உண்ணாதிருப்பது.
2. (சாத்திரம்) கணித்துக் கூறுபவன்.
3. வாழ்.
4. பேசு/ தேய்.
5. செய்தி/ புதினம்.
6. மாத்திரை.
8. விண்மீன்/ அணி.
10. கூடாதது அல்ல.
13. எரியும் செயற்பாடு.
14. நிகழ்கால நாள்.
16. அழித்தல் (தொழில்).
17. சிரசில் எழுதப்பட்டது.
18. தீவிரமான நிலைமை.
20. உலோகத்தை மெல்லிய படையாக உருவாக்கினால் வருவது.
21. ஆதி மனிதன் வாழ்ந்தது இங்கே.
22. புரவி/ குதிரை.

## சொற்சிலம்பம் போட்டி இல. 294

1. **முத்துசாமி பரந்தாமன்,**
   போம்பகலை தோட்டம்,
   வெலிமடை.
2. **செ.வெ.ரென்ஸ்,**
   333/3E, புனித அந்தோனியார் மாவத்தை,
   கெரவலப்பிட்டிய ஹெந்தல,
   வத்தளை.
3. **கே.சின்னத்தம்பி,**
   இல.309, நீதிமன்ற வீதி,
   திருகோணமலை.

### பாராட்டுப் பெறுவோர்

1. **செல்வன் எம்.ஏ.எம்.ஷரீக்,** தர்காநகர்.
2. **சாம்பவி மனோகரன்,** திருகோணமலை.
3. **ஆர்.கௌஷிகன்,** கொழும்பு- 06.
4. **செல்வி எம்.என்.ரிஸ்னியா,** மாவனல்ல.
5. **எம்.நிதர்ஷினி,** வவுனியா.
6. **ஜே.எச்.பாத்திமா மரியம்,** புத்தளம்.
7. **பி.கலையரசன்,** கிளிநொச்சி.
8. **எம்.ஐ.எம்.முன்ஸிப்,** வெலிகாமம்.
9. **பா.ரகுதரன்,** தம்பிலுவில் -01.
10. **ஏ.எச்.ஏ.அப்துல்லாஹ்,** தர்காநகர்.
11. **சோமா.திருச்செல்வம்,** கொழும்பு- 04.
12. **மாஸ். எஸ்.ஜோய்,** திருகோணமலை.
13. **ஆ.துஷ்யந்தினி,** நீர்கொழும்பு.
14. **செ.ஜெயசோதி,** கொழும்பு- 06.
15. **சு.சாந்தி (யாழ்மதி),** முல்லைத்தீவு.

# காலச்சுவடுகளில் கண்டதையும் கேட்டதையும் ஆவணமாக சுமக்கும் முத்தான முத்துப்பேட்டை

## மானா மக்கீனின் 30 ஆவது நூல்

முத்தான முத்துப்பேட்டை எனும் நூலை கலாபூஷணம் தமிழ்மணி மானா மக்கீன் வழங்கியிருக்கிறார். இது அவருடைய 30ஆவது நூலாகும்.

முத்தான முத்துப்பேட்டை யின் வெளியீட்டுவிழா, தமிழ்நாடு திருவல்லிக்கேணியில் அமைந்துள்ள உலக மகாகவி பாரதியார் இல்லத்தில் 15/12/2007 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெற்றது.

பன்னாட்டுத் தமிழறிவு மன்றத்தின் உலக அமைப்பாளர் நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களின் தலைமையில் கவி வேந்தர் மு.மேத்தா நூல் அறிமுகம் செய்துள்ளார். சிறப்பு ரையாளர்களாக தென்கச்சி கோ.சுவாமிநாதன், கீழக்கரை இலக்கிய மாமணி சீனா தானா செய்யது அப்துல் காதர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பன்னாட்டுத் தமிழறிவு மன்றமும், முத்துப்பேட்டை சேமநலச் சங்கமும் இணைந்து தமிழ்மணி மானா மக்கீனின் 70 ஆம் அகவை விழாவாகவும் இந்த நிகழ்வை ஒழுங்குபடுத் தியிருந்தனர். பல்வேறு நிகழ்வுகளுடன் விழா சிறப் பாக நடந்தேறியுள்ளது.

முத்தான முத்துப்பேட்டையின் காலச் சுடுகளில் கண்டதும் கேட்டதுமாக ஆவணப்பதிப்பாகியுள்ள இந்த நூலினை சென்னை ரஹ்மத் அறக்கட்டளை பதிப்பித்துள்ளது.

சிப்பிக்குள் முத்து என்பதுபோல் நூலுக்குள் முத்துப்பேட்டை வரைபடம்- வாழ்ந்து சிறந்தோர் - மூத்த பெருமக்கள் - முதல்வர்கள்- முன்னுரையாகவே முதல் அத்தியாயம் - நா இனிக்கும் 'நானா?'- போடப்படாத பாலம் - ஆழிப் பேரலைகளை அடக்கிய அலையாற்றி-வித்தியாசமான கர்ண பரம்பரைக் கதை- வேட்டைக்கு போகலாம் வாங்க- சரித்திரம் படைத்த சாம்புவராயன்- சோழநாடு சோறுடைத்து - அலைகடல் தாண்டி அயல் தேசங்களில்- இதயத்தில் வாழ்வோர்- வாழும்போதே வாழ்த்துவோம்- சந்தித்ததில் சிந்திய முத்துக்கள்- அறிவுக் கொடை அளிக்கும் கல்விக் கூடங்கள்- 'ரஹமத்' என்ற முதல் அறக்கட்டளை- அன்னை தமிழுக்கும் அனைத்து மக்கள் நலனுக்கும் அமைப்புக்கள் - சோழநாட்டு சோளப்பொரிகள்- நூலின் முத்தாய்ப்பில் ஒரு சிலம்பு விளையாட்டு - விடைபெறும் வேளை ஆகிய தலைப்புக்களில் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

குத்பா பள்ளிவாசல், குட்டியார் பள்ளிவாசல், முகைதீன் பள்ளிவாசல், புதுப்பள்ளிவாசல், அரபுசாகிப் பள்ளிவாசல், பேட்டை பள்ளிவாசல், ஆசாத் நகர் ஜூம் ஆப் பள்ளிவாசல், மதீனா பள்ளி வாசல், அக்கரைப் பள்ளிவாசல், மக்காப் பள்ளிவாசல், நூர் பள்ளிவாசல், ஜாமி ஆப் பள்ளிவாசல், கோவிலூர் கோவில், செம்படவன் காடு கோவில், பேட்டை கோவில் ஆகிய இந்து இஸ்லாமிய வணக்கஸ்தலங்களின் பல வர்ண அழகிய படங்கள் நூலில் அச்சிடப்பட்டிருப்பது முக்கியத்துவம் மிக்கதோர் அம்சமாகும். வேறுபல நிகழ்வுகளும், அம்சங்களும் நிழற்படங்களாகத் தரப்பட்டுள்ளன.

இலங்கைக்கும், முத்துப்பேட்டைக்கும் ஒரு நீண்ட வரலாற்றுத் தொடர்பு உண்டு. அதை வலுப்படுத்த வேண்டும். அதற்கு முத்துப்பேட்டை பற்றி ஒரு வரலாற்று ஆய்வு எழுத வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தார் சென்னை ரஹ்மத் அறக்கட்டளை எம்.ஏ. முஸ்தபா அவர்கள். அதற்குப் பொருத்தமானவர் நமது



ஆய்வெழுத்தாளர் தமிழ்மணி மானா மக்கீன்தான் என்று முடிவு எடுத்துவிட்ட அவர் அப்பொறுப்பினை தமிழ்மணியிடமே ஒப்படைத்து விட்டார். வாய்மொழித் தகவல்களின் மூலமும், தனக்குக் கிடைத்த பதிவுகள், தகவல்களின் அடிப்படையிலும் அழகியதொரு பெட்டகமாக நூலினை தொகுத்து




வழங்கிவிட்டார் ஆய்வெழுத்தாளர். தமிழ் ஆய்வுத்துறையின் ஒரு பொக்கிஷமாகவும் நூல் திகழ்கிறது. ஒவ்வொரு பக்கங்களிலும் முத்துப்பேட்டை குறித்த சுவையான தகவல்கள் மாதுளம்

**கே.வி.**

பழத்தின் வித்துக்களாக செறிந்துள்ளன.

முத்துப்பேட்டை எப்படி இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. முத்துக் கவிஞரின் நீண்ட கவிமலர் மாலை ஒன்று நூலில் இருக்கிறது. அதில் ஒரு பூ பதிலாக இதழ் விரிக்கிறது.

**''படியரிசி பெறுவதற்கு பைதூக்கி காத்திருப்போர்!**
**கூடிந்து மனம் நோவுகின்ற காலமிது; முற்காலம்**
**கொடிதூக்கி மரக்கலத்தில் கொண்டு சென்று இலங்கைக்கு**
**பிடியென்று வணிகர் பலர் பிறந்ததுவும் இந்நகரே!''**

'ஆய்வு நூலா? ஐயோ சாமி அலர்ஜிதான்' என்று தலை யைப் பிய்த்துக் கொள்பவர் களை கண்டிருக்கிறேன். ஏனெ னில் அவற்றை வாசிப்பதற்கு ஏற்படும் கஷ்டம்தான். அப்படியொரு மொழிச்சிக் கலோடு அவற்றின் பக் கங்கள் விரியும். ஆனால் தமிழ்மணி மானாவுக்கு ஆய்வுநூல் எழுதுவது சக்கரைப்பொங்கலாகி விட்டதோ என்னவோ அவ்வளவு சுவையான தோர் எழுத்து நடையுடன் நகர்த்திச் செல்வார். நம் கண்கள் விருவிருவென மேய்ச்சலிட, கைவிரல்கள் மடமடவென பக்கங்களை புரட்டிச் செல்லும். 'ஆழிப் பேரலைகளை அடக்கிய அலையாற்றி' இப்படி ஓர் அத்தியாயம் முத்துப்பேட் டையின் தன்மையைச் சொல்கிறது. முத்துப்பேட் டையை அலையாற்றி என் றும் அழைப்பதும் உண்டு. அதை விபரிக்கும் போது:

2004 - இறுதிப் பொழுதுகளில் கடல்சார் இந்தோனேஷியா, தமிழகம், கேரளம், இலங்கை, மாலைதீவு, அந்தமான் என அகோரப் பசிகொண்ட ஆழிப்பேரலை (சுனாமி) குமரி மாவட்ட குளச்சல் , நாகர்கோயில் என ஆர்ப்பரித்துவிட்டு, நாகை மாவட்டம், நாகப்பட்டி னத்தையும், நாகூரையும் பதம் பார்த்தது. வேளாங் கண்ணி வேதாரணியம் என்றெல்லாம் கைவரிசை காட்டியது.

ஆனால் இவற்றுக்கு அண்மிய இந்த முத்தான முத்துப்பேட்டையை அணுகத் தயங்கியது.


அதன் ஆர்ப்பரிப்பு இங்கே அடங்கிப் போனது. அனைவருக்கும் புதிர்! அண்டை, அயல் ஊர் மக் கள், அவலப்பட்டு அல்லோலப்பட்டு, துன்பங்கள், துயரங்கள் என்று மூழ்க முத்துப் பேட்டை மட்டும் எப்படி முட்டுக் கொடுத்தது என்று யோசித்தார்கள் அப்படி! அப்புறம் புரிந்தது.

இயற்கையே 'அரண்' ஒன்றை தங்களுக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறது என்பதும் அது இப்படியான அழிவுகளிலிருந்து காக்கும் என்பதும் அறிந்து அடியாத்தி அலையாற்றி' என்று ஆச்சரியப்பட்டார்கள்.''

இப்படி சுவையான அத்தியாயங்கள், கதைகள், தகவல்கள் தாராளமாகவே உள்ளன. கதைபோல மளமளவென்று வாசிக்கலாம்.

நூலை வாசிக்க ஆவல் அலை மோதுகின்றதா? தொடர்புகளுக்கு! தமிழ்மணி மானா மக்கீன்.

**B-54 1/2, N.H.S.Flat,**
**Colombo - 10.**
**Tele: 2332225**




## சொல்லிப் போட்டன் பெண்டுகளை வெளிச்சத்துக்கு கொண்டுவரப்படாது!

''எங்களில் பலர் அரை நூற்றாண்டுக்கு மேலாக இலக்கிய இயக்கங்களில் கலந்துகொண்டுள்ளோம். ஆனால் எமது மனைவிமாரை தகுதிக்கு மீறிப் புகழ்வெளிச்சத்துக்கு கொண்டு வர தெண்டிக்க வில்லை....!'' அம்மான் சஞ்சிகை வாசித்துக் கொண்டிருக்கிறார்.

''என்ன அம்மான்? ஆர்ட சுயசரிதம்? வலு உன்னிப்பா சத்தம் போட்டு வாசிக்கிறியள்?'' இலக்கிய ஆர்வலர் கேட்கிறார்.

''ஆர்ட சொல்லும் பார்ப்போம்?''

''ஒரு பண்டிதப் பெருமானுடையதாகத்தான் இருக்கும். உவையல்தானே பெண்களை வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படாதென்று கோஷம் போடுரவையே. அதுசரி கொஞ்சம் மெதுவா வாசியுங்கோ. அம்மாமியை மகளீர் விழாவிலே கண்டனான். காதுலே விழப்போவுது. பிறகு மென்னியை திருகப்போறா!''

''இதுல பகிடி என்னென்றால் இதைச் சொன்னவர் ஒரு முற்போக்கு முதுசம். சாதிச்சண்டை, தீண்டாமை இதுகளுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி கதை எழுதுனவர்.''

''என்ட தம்புரானே!''

''பேராசிரியர் கா.சிவத்தம்பிக்கு பவளவிழா மலர் போட்டு ஒரு சஞ்சி கைக்காரர் விழா நடத்தினவர். அதை நீர் ஏன் செய்யவில்லை என்டு ரசிகர் பட்டாளம் மல்லிகை சஞ்சிகைக்காரரை பிச்சு எடுத்துப் போட்டு தாம். அதுக்கு பதில் சொல்ல வெளிக்கிட்ட மனுஷன் விழா நடத்துன வங்களை கணவன் மனைவி சஞ்சிகை என கிண்டலடிச்சுப் போட்டு பெண் சமூகத்தை எப்படி வைச்சிருக்கவேண்டும், நாங்கள் எப்படி வைச்சிருந்தனாங்கள் என்ற ஒரு சங்கீதக் கச்சேரியே நடத்திப் போட்டார் அந்த வரிகளைத்தான் சத்தம் போட்டு வாசிச்சுப் கொண்டிருந்தனான்.''

''என்ட தம்புரானே! முற்போக்காளர் இப்புடி பேசலாமோ?''

''அப்பு! சும்மா வீறாப்பு பேச எல்லோராலும் முடியும். நடத்தையிலே காட்ட வேணும். பெண் விடுதலை வேணும். பெரிய கடவுள் காக்க வேணும். என்றல்லோ பாரதி பாடினான். பெண் என்பவள் கையொடுங்கி, கால் ஒடுங்கி தலைகுனிந்து கணவன் பின்னே செல்ல வேண்டும் என்ற சட்ட திட்டம் இருந்த காலத்திலே, அன்போடும் ஆதரவோடும் முகத்துலே உரிமை கர்வத்தோடும் மனையாளின் கழுத்துலே கைபோட்டு அழைத்துச் செல்வானாமே பாரதி. அவனைக் தூக்கிப்பிடிச்சிக் கொண்டிருக்கிற இவையல் (சும்மா பாசாங்கு) பெண்ணை இருட்டிலே அடைக்கச் சொல்லலாமோ? உது என்ன முற்போக்கு?''

''காலம் மாறுதல்லே. அதுபோல முற்போக்கும் மாறுதாக்கும்''

''முற்போக்குல புழை இல்லே ராசா! முற்போக்காளர் என்று சொல்லிக் கொள்ரவைதான் மாறினம். நீட்டலும் மழித்தலும் வேண்டா உலகு பழித்தது ஒழித்து விடின் என்றல்லோ வள்ளுவப் பெருமான் சொன்னவர். கொள்கை சொல்லுல இருந்தால் மட்டும் போதாது.. அது நடத்தையிலே இருந்தால் பேச்சே தேவை இல்லே கண்டியலே. சாதிச் சண்டை, சமதர்மச் சண்டை, பெண் விடுதலைச் சண்டை போட்டனாங்கள் என்றல்லோ மேடையிலே முழங்கறவங்கள். சந்தேகமாகக் கிடக்குது இவையல் இப்புடி சண்டை போட்டவங்கலோ என்டு. இலக்கிய இயக்க காலமெல்லாம் எமது மனைவியரை வெளிச்சத்துக்கு கொண்டுவர தெண்டிக்கவில்லை என்றல்லோ பிரலாபம் கேட்குது. இப்புடி எல்லோரும் இருந்திருந்தால் உலக அளவில் ஓர் அன்னை தெரேஷா, அரசியலில் ஓர் இந்திராகாந்தி, எழுத்துலகில் ஒரு தஸ்லிமா நஸ்லின் என்றெல்லாம் கிடைச்சிருப்பாங் களோ. ஏன் நம்மிடையே கூட பத்மா சோமகாந்தன், அன்னலட்சுமி ராசதுரை, செல்வி திருச்சந்திரன், கோகிலா மகேந்திரன், முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த அன்பேரியா ஹனீபா, இளம் டாக்டரான கவிஞை அஞ்சான மக்கீன் இப்புடி ஒரு தொகை பெண் சமூக படைப்பாளிகளின் பட்டியல் சீன பெருஞ்சுவர் போல் நீட்டலாகியிருக்குமே.''

''அப்புடி போடுங்கோ அம்மான்.''

''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம். வைய வாழ்வில் என்றும் எந்த வகையிலும் நமக்குள்ளே மாதர் தம்மை இழிவு செய்யும் மடமைமை கொளுத்துவோம்''

''என்ட தம்புரானே! மெல்லப் பாடுங்கோ அம்மான். மகளீர் சங்கங்க ளின்ட காதுல விழுந்துது என்றால் பெரிய பொல்லாப்பா போகப் போகுது.''

''என்ன கண்டறியாத பாட்டு. சொல்லிப் போட்டன். மனுஷிமாரை வெளிச்சத்துக்கு கொண்டுவர தெண்டிக்கப்படாது''

## சமஷ்டி..........

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயணப்பாதை வழமையாக ஒரே மார்க்கத்தில் இருப்பதை இவ் விடயங்களை ஊன்றிக் கவனிப் போர் அவதானித்திருக்க முடியும்.

ஒஸ்லோவிலிருந்து புறப்படும் சொல்ஹெய்ம் முதலில் லண்டனில் வந்திறங்குவார். பாலா தம்பதியருடன் ஒரு சந்திப்பு. அதன்பின் வெளியில் ஓர் உணவுவிடுதியில் மதியபோசனம் என்று அவர்களது உறவாடல் அமையும்.

பின்னர் லண்டனிலிருந்து இலங்கைக்குப் பயணம்.

கொழும்பிலும் வன்னியிலும் அமைதி முயற்சி நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு அந்த முயற்சிகளின் பெறுபேறை விளக்குவதற்காக கொழும்பி லிருந்து புதுடில்லி புறப்பாடு. புதுடில்லியில் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயண னுடன் தான் முக்கிய கலந்துரை யாடல் பெரும்பாலும் நடக்கும்.

அதை முடித்துக்கொண்டு சொல்ஹெய்ம் மீண்டும் லண்டன் செல்வார். அங்கு திரும்பவும் பாலாவுடன் சந்திப்பை முடித்துக்கொண்டு அவர் ஒஸ்லோ திரும்புவார்.

- இதுதான் பெரும்பாலும் சொல்ஹெய்மின் பயண வாய்ப் பாடாக இருக்கும்.

இந்தப் பயணங்களின் மூலமே பாலா - நாராயணன் இடையேயான பழைய நட்புறவு புதுப்பிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்காக எண்பதுகளின் மத்தியில் இந்தியா வில் பாலசிங்கம் செயற்பட்டபோது அப்போது இந்திய உளவுத்துறை யின் உயரதிகாரியாக இருந்த நாராயணனுடன் அவருக்கு ஏற்பட்ட நட்புறவு சுமார் இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் புதுமெருகு பெறுவதற்கு இடைத்தரகராக சொல்ஹெய்மே விளங்கினார்.

புதுடில்லி - புலிகள் இடையே சீர்கெட்டிருக்கும் உறவைச் சீர்படுத்துவதற்கு தமது கடைசி முயற்சியாக நாராயணனுடனான தமது அறிமுகத்தை பயன்படுத்த எண்ணினார் பாலா.

அந்தக் காய்நகர்த்தல் எப்படி விரிந்தது?

அந்தக் காய்நகர்த்தலை முன் னெடுப்பதற்காக, தமது இல்லத்தில் தம்முடைய வழமையான பாணிப் படி - தமது கீழ்ச்சொண்டை வலது கையால் மடக்கியபடி - தமது வீட்டுக்குள் இரண்டு நாட்களாக ஆழ்ந்த யோசனையோடு குறுக் கும் நெடுக்குமாக நடைபோட் டார் பாலா அண்ணன்.

அவரது திட்டம் மெல்லக் கட்டவிழ்ந்தது. அது எப்படி? அடுத்தவாரம் பார்ப்போம்.

(வளரும்)

# விஜயகாந்த் கட்சியுடன் காங்கிரஸ் கூட்டணி! மூன்றாவது அணி தயார்

தமிழகத்தில் புதிய சக்தியாக உருவெடுத்துள்ள விஜயகாந்த்தின் தே.மு.தி.கவுடன் காங்கிரஸ் கட்சி கூட்டணி வைத்துக் கொள்ளும் சாத்தியம் குறித்து சமீபகாலமாக பலமாகப் பேசப்படுகிறது. தி.மு.கவுடனும் அ.தி.மு.கவுடனும் கூட்டணி கிடையாது என விஜயகாந்த் அறிவித்திருந்தார். சமீபத்தில்



மதுரையில் அ.தி.மு.கவினரும் தே.மு.தி.க.வினரும் மோதிக்கொண்டனர். மேலும் தே.மு.தி.கவினால் அ.தி.மு.க.வின் வாக்கு வங்கிக்கே ஆபத்து அதிகமுள்ளது. எனவே, விஜயகாந்த்துடன் அணிசேர அம்மாவும் சற்றே தயங்குகிறார்.

கலைஞரும், விஜயகாந்த்தும் அறிக்கைகளால் அடிக்கடி மோதிக்கொள்வதும் நடக்கிறது. இதனால், தி.மு.க., அ.தி.மு.க. இரண்டுடனும் விஜயகாந்த் கூட்டணி வைத்துக்கொள்ள விரும்பவில்லை என்றே தெரிகிறது. பாரதிய ஜனதா மதவாதக் கட்சி என்பதால் அதையும் சேர்த்துக்கொள்ள விஜயகாந்த்துக்கு இஷ்டமில்லை. பாட்டாளி மக்கள் கட்சி சினிமாவை எதிர்ப்பதால் அக்கட்சியுடனும் சேரமுடியாது.

எனவே, இப்போதைக்கு விஜயகாந்த்துக்கு இணக்கமான ஒரே கட்சி காங்கிரஸ்கட்சியே. கட்சி தொடங்கிய புதிது என்பதால் கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது போலும். காலம் செல்லச் கொள்கையைக் காற்றில் பறக்கவிடும் மற்றைய தமிழக கட்சிகளின் நிலைக்கு தே.மு.தி.கவும் இறங்கநேரிடும். காங்கிரஸ் - விஜயகாந்த்-கம்யூனிஸ்ட்கள் இணைந்தால் அது வலுவான மூன்றாவது அணியாக வரவும்கூடும்.

விஜயகாந்த் காங்கிரஸ் கட்சியை நாடுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. சமீபத்தில் வரவுள்ள தேர்தல் லோக்சபா தேர்தல் தான். அந்தத் தேர்தலுக்கு முகம்கொடுக்க மாநிலக்கட்சியை விட தேசிய கட்சியுடன் கூட்டணி வைப்பது இலாபகரமானது. காங்கிரஸ் அல்லாது பாரதிய ஜனதா இரண்டில் இவற்றில் ஒன்றுடன்தான் கூட்டணி வைத்தாக வேண்டும். பாரதிய ஜனதாவின் மதவாதம் இவருக்குப் பிடிக்கவில்லை. எனவே தான் காங்கிரஸ் பக்கம் சாய்வதாகத் தெரிகிறது. எனினும், அடுத்த லோக்சபா தேர்தலில் காங்கிரஸ்கட்சி மீண்டும் வெல்வதற்கான வாய்ப்பு மிகக். குறைவாகவே உள்ளது.

சமீபத்தில் நடந்த முக்கியமான குஜராத் மற்றும் இமாசல பிரதேச சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி மண்கௌவியது. அந்தக் கட்சியின் செல்வாக்கு குறைந்து மீண்டும் பாரதிய ஜனதாவின் கை ஓங்குவதையே இது குறிக்கிறது. காங்கிரஸுக்கு அடுத்தடுத்து தோல்வியே கிடைப்பதால் அதன் கூட்டணிக்கட்சிகளும் அந்த அணியை விட்டு வெளியேறுவது பற்றிச் சிந்தித்து வருகின்றன.

இந்த நிலையில் விஜயகாந்த் காங்கிரஸ் அணிக்கு செல்வது தற்கொலைக்கு சமனாகும். வேறுவழியின்றி ஏதோ ஒரு திராவிடக் கட்சியுடன் அணிசேரவோ அல்லது கொள்கையை மறந்து பாரதிய ஜனதாவுடன் சேரவோ அவர் கடைசியில் முடிவெடுக்கவும் கூடும்.

தமிழகத்தில் இரு திராவிடக்



கட்சிகளுக்கு மேலதிகமாக பல சிறுசிறு கட்சிகள் சமீபகாலமாக செல்வாக்குப் பெற்றுவருகின்றன. எனவே, திராவிடக் கட்சிகளை விட்டுவிட்டுத் தாமே ஓர் அணியை உருவாக்குவது பற்றி இந்தச் சிறுகட்சிகள் விரும்புவதும் இயற்கையே.

**பக்கத்து வீடு**

பா.ம.க. தலைவர் ராமதாஸ் இப்படியான மூன்றாவது அணிபற்றி ஏற்கனவே விருப்பம் வெளியிட்டுள்ளார். எனினும், பா.ம.க., காங்கிரஸ், ம.தி.மு.க., தே.மு.தி.க., கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் ஆகிய இந்தச் சிறுகட்சிகள் இடையே குறிப்பிட்ட விஷயங்களில் தீர்க்கமான முரண்பாடு உள்ளது. உதாரணமாக பா.ம.க. சினிமாவை விமர்சிப்பதால் விஜயகாந்த்துடன் அணிசேரமுடியாத நிலை உள்ளது.

எனினும், தமிழக அரசியலில் கூட்டணி சேர கொள்கைகள் தடை ஆகாது என்ற அசிங்கமான விதி தற்போது பின்பற்றப்படுகிறது. ஒரு தேர்தலில் தி.மு.கவை தூற்றும் ஒருசிறு கட்சி அடுத்த தேர்தலில் தி.மு.கவில் தஞ்சமடைவது வழக்கமே. ம.தி.மு.க. கூட இதற்கு விதிவிலக்கல்ல. பி.ஜே.பியுடன் கூட் ணி வைத்து மத்திய அரசில் பங்கேற்ற தி.மு.க. இப்போது காங்கிரஸுடன் இணைந்து பி.ஜே.பியை மதவாதிகள் என்று பழிக்கும் சுவாரஸ்மான அரசியல் தமிழ்நாட்டினுடையது. கூட்டணி சேரவேண்டிய நிர்ப்பந்தத்தால் பழிப்பதும் துதிபாடுவதும் மாறிமாறி நடக்கும். மக்கள் ஏமாந்து வாக்கை அளிக்கவேண்டியதே.

தி.மு.கவை பொறுத்தவரை அடுத்த தேர்தலில் காங்கிரஸுடன் கூட்டணி சேர்வது நல்லதல்ல என்பதை கட்சி உணர்கிறது. ஆனால், மாநில அளவில்

**எஸ்.எஸ்.சுரேந்திரஜித்**

தி.மு.க. அரசு காங்கிரஸின் 35எம்.எல்.ஏக்களின் ஆதரவில் தங்கியுள்ளது. எனவே, சென்னையில் ஆட்சி கவிழாமல் இருக்க மத்தியில் காங்கிரஸுடனான உறவைத் தொடரவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. அதாவது அடுத்த லோக் சபா தேர்தலில் காங்கிரஸ் தோற்கப் போகிறது என்பதைத் தெரிந்து கொண்டே காங்கிரஸ் அணியில் போட்டியிட வேண்டியுள்ளது. இதுவரை இல்லாத ஒரு சுவாரஸ்யமான நிகழ்வாக இது இருக்கும்.

தி.மு.க. அவ்வாறு காங்கிரஸ் அணியில் தொடர்ந்தால் அ.தி.மு.க. வுக்கு வேலை சுலபமாகி விடும். பி.ஜே.பியுடன் நேரடியாக கூட்டணியை அ.தி.மு.க. அமைத்துக் கொள்ளும். ஆனால், பி.ஜே.பிக்கோ அம்மாவுடன் அணி சேர்வது மிகச் சங்கடமான விஷயமே. ஏற்கனவே வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது அம்மாவுடன் கூட்டணி அமைத்து படாதபாடுபட்ட அனுபவம் பி.ஜே.பிக்கு உண்டு. ஆனால், வாஜ்பாயை விட அத்வானி ஜெயலலிதாவுடன் நெருக்கமானவர் என்பதால் அத்வானி பிரதமராகினால் அம்மா அவ்வளவு தொல்லை கொடுக்க மாட்டார் என்று கருதப்படுகிறது.

ஆனால், யார் கண்டது எவரையும் தூக்கி எறியத் தயங்காதவரே அம்மா. அத்வானி அவருக்கு எம்மாத்திரம்?

---

# முஷாரப்பின் ...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

-குப் பிறகு பெரும் தலைவராக மதிக்கப்பட்டவர். பாகிஸ்தானின் சிந்தி இனத்தைச் சேர்ந்தவர். பெனாஸிரின் தாயார் பேகம் நஸ்ரத் ஈரானிய குர்திஷ் இனத்தைச் சேர்ந்தவர்.

சுல்பிகார் அலி பூட்டோ 1979ஆம் ஆண்டு அப்போதைய இராணுவ ஆட்சியாளரால் தூக்கிலிடப்பட்டார். இதனை எதிர்த்து குரல் கொடுத்தமைக்காக பெனாஸிர் 1979- 1984 ஆண்டு காலப் பகுதியில் சிறைவாசம் அனுபவித்தார். பின்னர் 1984ஆம் ஆண்டு பிரிட்டனுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார். 1987ஆம் ஆண்டு ஆசிப் அலி சர்தாரியைத் திருமணம் முடித்த பெனாஸிருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

பெனாஸிர் படுகொலைக்கு அல்குவைதா தீவிரவாதிகளே காரணம் எனக் கூறப்படுகின்றது. அதற்கு ஆதாரமாக பெனாஸிரைக் கொன்றபின் அதற்கு உடந்தையாக இருந்த தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானுக்கான அல்குவைதா தலைவர் வாழ்த்துச் சொல்வதாக அமைந்த உரையாடல் பாகிஸ்தான் உள்துறை அமைச்சினால் வெளியிடப்பட்டது. இதை முற்றாக மறுத்திருக்கும் குவைதா, பெனாஸிர் மீதான கொலைக்கு முஷாரப்பும் பாகிஸ்தான் உளவு அமைப்புமே காரணம் எனக் கூறியுள்ளது.

பெனாஸிர் பூட்டோ குடும்பத்தில் இதுவரை நான்குபேர் கொடூரமான முறையில் கொலைசெய்யப்பட்டுள்ளனர். பெனாஸிரின் தந்தையும் முன்னாள் பிரதமருமான சுல்பிகார் அலி பூட்டோ 1979 ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார். இவரின் விடயத்தில் கருணைகாட்டுமாறு உலகநாடுகள் பாகிஸ்தானை நிர்ப்பந்தித்த போதிலும் அதை எல்லாம் புறந்தள்ளிவிட்டு பாகிஸ்தானின் அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த ஸியா - உல்-ஹக், பூட்டோ வைத் தூக்கிலிட்டார். சர்வதேச நாடுகளை உலுக்கிய இச்சம்பவத்தின் நினைவுகள் நீங்குவதற்கு முன்பதாக பெனாஸிரின் சகோதரரான ஹா நவாஷ் மர்மமான முறையில் பிரான்ஸில் கொல்லப்பட்டார்.1996 இல் பெனாஸிரின் மற்றொரு சகோதரரான மிர் முர்தாஷா கொலைசெய்யப்பட்டார். பெனாஸிர் பிரதமராக இருக்கும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. தற்போது உலக அரசியலில் மிகவும் செல்வாக்கு மிக்க பெண்ணாகப் போற்றப்படும் பெனாஸிர் பூட்டோவும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்டுவிட்டார்.

பெனாஸிர் பூட்டோ நாடு திரும்புவதற்கு முன்பாக அவரது உயிருக்கு பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளால் ஆபத்துநேரும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அவர் நாடு திரும்பியிருந்தார். அவர் இறப்பதற்கு முன்பாக தனது நண்பருக்கு அனுப்பியுள்ள மெயிலில்மூலமான செய்தியில் தனக்குரிய பாதுகாப்புகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன என்றும் தனது உயிருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அதற்கு முஷாரப்பே முழுமையாகப் பொறுப்பேற்கவேண்டும் என்றும் கூறியிருந்தார். கடுமையான பாதுகாப்புகள் மிகுந்த நகரமான ராவல் பிண்டிக்குள் தீவிரவாதிகள் எவ்வாறு உள்நுழைந்து பெனாஸிர் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தினார்கள் என்பது புரியாத புதிராகவே உள்ளது. பெனாஸிரின் பாதுகாப்பு விடயத்தில் முஷாரப் நழுவல்போக்கைக் கடைப்பிடித்ததாகவே தோன்றுகின்றது. துணிச்சலான செயற்பாடு, எதற்கும் அஞ்சாமை போன்ற குணநலன்கள் பெனாஸிரை ஒரு தனித்துவம்மிக்க பெண்ணாகவும் தலைவராகவும் உலக அரசியலில் உயர்த்திவிட்டிருந்தன. அவரது மக்கள் கட்சியின் தலைமைப் பொறுப்புக்கு அவரது 19 வயது நிரம்பிய மகன் பிலாவல் நியமிக்கப்பட்டுள்ளார். பெனாஸிர் பூட்டோவின் 19வயது மகனான பிலாவல், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவராக நியமிக்கப்படுவதை முதலில் விரும்பவில்லை என பெனாஸிரின் நெருங்கிய நண்பரொருவர் தெரிவித்துள்ளார். பிரித்தானிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவனான பிலாவால் படிப்பைத் தொடர்வதிலேயே ஆர்வமாக உள்ளார். ஆனாலும் அவர் பட்டப்படிப்பை முடித்தபின் தனது மக்கள் கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவரைக்கும் பெனாஸிரின் கணவர் சர்தாரியே அந்தப் பொறுப்பை வகிப்பார்.

பாகிஸ்தானின் அரசமைப்பின்படி 25வயதுநிரம்பிய ஒருவரே தேர்தலில் போட்டியிடமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், பிலாவால் மக்கள் கட்சியின் தலைவராக பதவிவகித்தாலும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பில்லை.

மக்கள் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் செய்தியாளர்களிடம் பிலாவால் கருத்துத் தெரிவிக்கையில், தனது தாயாரின் வழியில் ஜனநாயகத்துக் காகத் தொடர்ந்தும் போராடப்போவதாகக் கூறியுள்ளார்.

ஆனால், முஷாரப்பின் இரும்புக் கரங்கள் பூட்டோ குடும்பத்தை விட்டுவைக்குமா என்பதே இன்றைய கேள்வி.

பாகிஸ்தான் அரசியல் என்பது ஒரு கறைபடிந்த அரசியலாகிவிட்டது. பெனாஸிர் ஜனநாயகத்தை ஏற்படுத்தப் பாடுபட்டு அதற்காக தனது உயிரையும் கொடுத்துள்ளார்.

இந்த நிலையில் பாகிஸ்தானில் இனி வரும் காலங்களிலாவது தீவிரவாதமற்ற, ஜனநாயக ஆட்சி மலருமா? பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# கலக்கல்

கவிஞான சம்பந்தர்

## குறும்பு






ஜப்பானைச் சேர்ந்த பொம்மை தயாரிப்பு நிறுவனமான செகா டோய்ஸ் நிறுவனம் இந்தப் பியானோவை தயாரித்துள்ளது. 88 கீ களைக் கொண்டுள்ள இந்தப் பியானோவே உலகின் மிகச் சிறிய




## தத்துவம்

தண்ணீர்: தண்ணீரை தண்ணி என்று சொல்லலாம் ஆனா பன்னீரை பன்னி (பன்டி) என்று சொல்லமுடியுமா?

கல்வி : கல்வியை விற்கிறான் கடையிலே - இன்று கற்பவன் நிற்கிறான் படையிலே.

பொடி : இட்லி பொடியை தொட்டுக்கொண்டு இட்லி சாப்பிடலாம், ஆனா மூக்குப் பொடியை தொட்டுக்கிட்டு மூக்கை சாப்பிட முடியுமா?

மண்டை : மண்டை உடையாமல் இருக்க ஹெல்மெற் போடலாம் ஹெல்மெற் உடையாமல் இருக்க மண்டையைப் போடலாமா?


வாழ்வு: வாழ்வில் எரிகிறது நெருப்பு வாழ்வது அவரவர் பொறுப்பு!




இரண்டுபேர் கடுமையாக வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள். ஒருவர் முரட்டு மனிதர். மற்றவர் நோஞ்சான். முரட்டு மனிதர் ஆத்திரத்தை அடக்க முடியாமல் நோஞ்சானை அறைந்துவிட்டார்.
"என்னைக் கோபத்தில் அறைந்தாயா அல்லது கேலியாக அறைந்தாயா" என்று அந்த நோஞ்சான் மனிதர் கேட்டார்.
"கோபத்தில் தான்" என்று உறுமினார் முரட்டு மனிதர்.
"அப்படியானால் சரி. என்னைக் கேலி செய்வதை நான் விரும்புவதில்லை" என்றார் நோஞ்சான்.

## 2 இன் 1





## 'யார் இவர்' தெரிகிறதா? 23

இந்த வாரம் பிரசுரமாகி இருக்கும் உருவம் யாருடையது?



இவர் ஒரு கவிஞர். சட்டத்தரணி. ஒரு கட்சியின் ஸ்தாபகத் தலைவர். இவர் யாரெனக் கண்டு பிடித்து இவர் பெயரை தபாலட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடை எழுதிய அதிஷ்டசாலிகள் ஐவரின் பெயர் விவரம் பிரசுரிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி
"யார் இவர் தெரியுமா?"

★ "யார் இவர் தெரிகிறதா?" இல.21 இற்கான சரியான விடை: - ஹிந்தி நடிகர் ஷாருக்கான். சரியான விடைகளை அனுப்பியோரில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:
1. ஏ.அனு, மன்னார். 2. ஏ.எம்.அஹமட் பஸ்லான், அட்டாளைச்சேனை. 3. எஸ்.அருள்செல்வம், கொழும்பு-12. 4. பி.சுதாஜினி, வவுனியா. 5. பி.சிவாஜினி, வவுனியா.



# நடைப்பயிற்சியின் பயன்கள்



உடற்பயிற்சிகளில் நடைப் பயிற்சிதான் மிகச் சிறந்த பயிற்சியாகும். பெரியவர் முதல் சிறுவர் வரை இதை எளிதாக செய்யமுடியும். நடைப்பயிற்சியால் ஏற்படும் நன்மைகளும் ஏராளம்.

நடைப் பயிற்சியினால் இரத்த ஓட்டம்தங்கு தடையின்றி நடைபெறும். இதனால், மூளையில் உள்ள தமனிகள் நல்ல நெகிழ்வுடன் இருக்கும். வலிப்புபோன்ற கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறையும். நரம்புகள் வலுவடைகின்றன. தசைகளின் தொய்வு நீங்குகின்றது. எலும்புகள் உறுதியாகின்றன. மூட்டுகள், பந்துக்கிண்ணங்கள், கீழ்மூட்டுகள் அசைவதால் மூட்டுவலி குறைகிறது.

உடலில் வியர்வையுடன் கழிவுநீரும் வெளியேறுகிறது. இதனால், சிறுநீரகத்தின் வேலைப்பளு குறைந்து நீண்டநாள் நல்லமுறையில் இயங்க வாய்ப்பாக இருக்கிறது.

சுவாசத்தின்போது பிராணவாயு உட்செல்வது அதிகமாகிறது. எல்லா உறுப்புகளுக்கும் பிராணவாயு நன்கு சென்று நலம் பயக்கிறது. மூளை சுறுசுறுப்படைகிறது. சிந்தனை வளம் பெறுகிறது.

'எண்டார்பின்கள்' எனப்படும் உற்சாகமூட்டும் வேதிப்பொருள்கள் உற்பத்தி மூளையில் இயல்பாக வெளிப்படுவதால் மனநெகிழ்வு, மகிழ்வு, உற்சாகம், ஊக்கம் பிறக்கின்றன. மண்டை ஓட்டின் தோல் பகுதிக்கும் இரத்தம் பரவுவதால் தலைவலி எட்டிப்பார்க்கவும் மறுக்கிறது.

நடப்பதனால் ஏற்படும் சீரான மூச்சு, நுரையீரலின் ஆற்றலை மேம்படுத்துகிறது.

நுரையீரலையும் இரப்பையையும் பிரிக்கும் சுவரான உதரவிதானத் தசைகள் வலுப்படுகின்றன.

## ரூல் நம்பர் 17...

(18-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாசுதேவன் காட்டினான். கண்ணாடி ஆசாமி மேசை விளக்கைத் தட்டி அதன் வெளிச்சத்தில் அதை ஆராய்ந்தான்.

''இது எப்படிக் கிடைத்து உங்களுக்கு''

''இந்தக் கட்டடத்தில் தான் வாங்கினேன். ஏன்?''

''பணம் கட்டினீர்களா?

''ஆம்''

''எவ்வளவு?''

''500 மானெக்ஷா''

அவன் சிரித்தான்.

''ஏன்?''

''நீங்கள் எல்லாம் படித்தவர்கள். பொறுப்புள்ளவர்கள் உங்களுக்காக அரசாங்கம் எவ்வளவு செலவழிக்கிறது தெரியுமா? சில சாதாரண விதிகளைப் பற்றிக்கூட நீங்கள் தெரிந்து வைத்துக்கொள்ள வில்லை. திருமண பெர்மிட்டுக்கு பணம் கட்ட வேண்டியதில்லை. தெரியுமா? உங்களுக்கு?''

''இல்லை. இங்குதான் ஓர் ஆசாமி வந்து பணம் கட்டாமல் கிடைப்பதற்கு வருஷக்கணக்கில் ஆகும். 500 கொடுத்தால் ஒரு மாதத்தில் கிடைத்துவிடும் என்று சொல்லி ..''

''500 கொடுத்தீர்கள்....''

''இல்லை. கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன். பெர்மிட் வந்தபிறகுதான் கொடுத்தேன்''

''நன்றாக ஏமாந்திருக்கிறீர்கள். பெர்மிட் போலி. இதே நம்பரில் 4 பெர்மிட்கள் இது வரை கண்டுபிடித்திருக்கிறோம். இது ஒரு போர்ஜரி. க்யூ டிபார்ட்மெண்டின் முத்திரை இல்லை''.

''அப்படியானால் ...''

''பெர்மிட் இல்லாமல் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். குழந்தை வேறு பெற்றுக்கொண்டு விட்டீர்கள். அரசாங்கத்திற்கு எதிரான குற்றம்''.

''இல்லையே. அனுமதிக்கப்பட்ட காலத்திற்குப் பின்தான் குழந்தை பெற்றுக் கொண்டோம்.

''முதலில் கல்யாணமே அனுமதிக்கப்படவில்லையே! அரசாங்க ரெக்கார்ட்படி வாசுதேவன் கல்யாணமாகாதவர்! பெர்மிட் வாங்குவதற்கு முன் எங்களில் யாரை யாவது கேட்டிருக்கக்கூடாது? பப்ளிக் ரிலேஷன் என்று கொட்டை எழுத்தில் போர்ட் ஒன்று வாசலில் தொங்குகிறதே, அங்கு கேட்டிருக்கக்கூடாதா? இம்மாதிரி ஓர் ஆள் ஐநூறு மானெக்ஷா கொடுத்தால் பெர்மிட் சீக்கிரம் கிடைக்கும் என்கிறானே, நிஜமா என்று கேட்டிருக்கக்கூடாதா? சேச்சே! என்ன வேலை செய்கிறீர்கள்?''

''என்ஜினியர்''.

உங்கள் மனைவி?''

''வீட்டில் இருக்கிறாள். உள்ளே டீச்சர் அவள்... இப்போது என்ன ஆகும்?''

''இந்தப் பர்மிட் உங்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படும். உங்கள் திருமண உரிமைகள் யாவையும் இழந்து விடுகிறீர்கள்''.

''மறுபடியும் 'எம்' ப்ளொக்குக்குப் போக முடியாதா?''

''முடியாது உங்கள் ஊதல் எங்கே?''

''அய்யா, நான் தவறுதலாக அறியாமல் இதில் சிக்கிக்கொண்டு விட்டேன். எனக்கு ஒரு தற்காலிகப் பெர்மிட் கொடுத்து விடுங்கள். நான் வீட்டிற்குப் போக வேண்டும். என் மனைவி காத்திருப்பாள்''

''மனைவி பெர்மிட் இல்லாததால் அவள் மனைவி இல்லை. மிஸ்டர் வாசுதேவன், உங்களால் அரசாங்கத்துக்குத் தலைவலிதான் அதிகம். ஆனால், நீங்கள் ஓர் என்ஜினியர். உங்கள் 'மனைவி' டீச்சர். எனவே, உங்களுக்குக் கொஞ்சம் வாய்ப்பு இருக்கிறது. நான் புதிய பெர்மிட்டுக்கு ஒரு மனு தருகிறேன். அதை நிரப்பி என்னிடம் கொடுங்கள். எங்கள் டிபார்ட்மெண்டிலிருந்து சிபாரிசு போனால் மூன்றுமாதத்தில் பெர்மிட் கிடைத்துவிடும். இன்று என்ன திகதி? 18-06-94. சரி செப்டெம்பர் பதினெட்டாம் திகதி வந்து என்னைப் பாருங்கள்''.

''அதுவரை?''

''அதுவரை நீங்கள் வெளியேதான் இருக்கவேண்டும்''.

''என் மனைவியைப் பார்க்கமுடியாதா?''

''முடியாது. உங்களால் அரசாங்கத்துக்கு எவ்வளவு சங்கடம் பாருங்கள். தப்பான அனுமதிக்காத கல்யாணம் பண்ணிக் கொண்டு வேண்டாத பிரஜை ஒன்றைப் பெற்றுக்கொண்டு விட்டீர்கள். அதுவும் அரசாங்கம் ஒவ்வொரு புதுப்பிறப்பையும் இவ்வளவு தூரம் கண் காணித்துக் கட்டுப்படுத்தும்போது ... இனிமேலாவது ஜாக்கிரதையாக இருங்கள்''.

''குழந்தை?''

அவன் நாற்காலியில் சாய்ந்து கொண்டு வாசுதேவனை நிதானமாகப் பார்த்தான்.

''மிஸ்டர் வாசுதேவன்! எமது அரசாங்கத்தின் ரூல் நம்பர் பதினேழு தெரியாதா உங்களுக்கு...? குழந்தை கொல்லப்பட்டு விட்டது''.

*(நன்றி: சுஜாதா)*

## பொருளாதாரப் பிரச்சினைகள்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலாப்பழ சடையாக்கிவிடுவது இன்விளைவு. எந்த உணவும் இல்லாமல் ஒருநாள் முழுக்க பேன்கள் தலையைவிட்டு வெளியில் வந்து உயிர்வாழும் தன்மையுடையவை.

அதனால், தலையணை முதல் தலைக்கு உபயோகிக்கும் ஒவ்வொரு பொருளையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். மற்றவர்களிடம் இருந்து எமக்குப் பரவாமலும் எம்மிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவாமலும் தடுக்க ஒரே வழி இதுதான்'' என்கிறார்.

# ராசி பலன்

**07-01-2008 முதல் 13-01-2008 வரை**

**பொ. சந்திரலிங்கம்**

### மேஷம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை1.



காரிய சித்தியுண்டு. பியாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயல வர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம் மாணவர்கள் கல்வியிவ் ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். வழக்குகளில் வெற்றி கிட்டும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முத லீகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். உதவிகேட்பர்.

### துலாம்

சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3



காரியத்தடை விலகும். பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவுவர். உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு.

### இடபம்

கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2



காரியத்தடை இருக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் உதவி செய்வர், உதவி எதிர்பார்ப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை



காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### மிதுனம்

மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3



காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். உதவி எதிர்பார்ப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்பு கள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம்.

### தனுசு


மூலம், பூராடம், உத்தராடம் 1



காரியத்தடை விலகும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனங்கள்செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### கடகம்


புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்



காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலம், தந்தை நல மில்லை. நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறைலாம். அதிர்ஷ்டம் இருக் காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் தாமதமாகலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### மகரம்


உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2



காரியத்தடை விலகும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகியிருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு வாகனம் அமையலம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### சிம்மம்

மகம், பூரம், உத்தரம் 1



காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவுவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். உதவியை எதிர்பார்ப்பர்.

### கும்பம்


அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3



காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் செயல்பாடு மன அமைதியைக் கெடுக்கும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார் உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### கன்னி

உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2



காரியத்தடை இருக்கும். வார இறுதியில் பிரயாணம் அமையலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நல மில்லை. தந்தை நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளில் அவதானம் வேண்டும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் லாபம் குறையலாம். எதிர்பார்ப்பு கள் நிறைவேறும்.

### மீனம்

பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி



காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு வாகனம் அமையும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.



# பூமி? தாங்குமா...

அல்கோர் என்பவர் அமெரிக்க குடியரசின் துணைத் தலைவராக இருந்தவர். தற்போது தட்ப வெப்பக் குழுவின் தலைவராக இருக்கிறார். அவருக்கு இந்த ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசு கிடைத்து இருக்கிறது. அவருக்கு ஏன் இந்தப் பரிசு கிடைத்தது என்பதைப் பார்க்கும் போது அதன் மகத்துவம் புரிகின்றது.

1. இன்னும் சில தசாப்தங்களின் பின் மனிதர்கள் வாழ முடியாத அளவுக்கு உலகத்தில் வெப்பத்தின் அளவு உயர்ந்துவிடும்.

2. வெப்பத்தின் அளவு உயர்வதற்கு முக்கியமான காரணம், கரியமிலவாயு. பூமிக்குள் புதைந்து கிடக்கும் நிலக்கரி, எண்ணெய் ஆகியவற்றை



பல காரணங்களுக்காக எரித்து ஒரு நாளைக்கு சமார் 70 மில்லியன் தொன் அளவுக்கு கரியமில வாயுவை விண்வெளிக்கு அனுப்புகிறோம்.

3. விண்வெளியில் பல லட்சம் ஆண்டுகளாக பத்து லட்சம் பகுதிகளில் முந்நூறு பகுதிகளைத் தாண்டாமல் இருந்த கரியமில வாயு கடந்த ஆண்டு 380 ஐத் தாண்டி விட்டது. இதன் விளைவால் உலக வெப்பநிலை உயர்கிறது. வெப்ப நிலை 1 டிகிரி உயர்ந்தால் கடல்நீர் சுமார் ஆயிரம் அடி உள்முகம் வந்து நிலத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும், உலகத்தில் 60 க்கும் மேலான நகரங்கள் கடற்கரை நகரங்களாக இருக்கின்றன. இதனால் விளையக் கூடிய விபரீதத்தைக் கற்பனை செய்துபார்க்க முடியும்.

4. உலகத்தை குளிர்ச்சியாக வைத்திருப்பதில் பெரும் பங்கு ஆற்றுவது வட துருவத்தில் இருக்கும் பனிப்பாறைகள். கணினி கணக்கு சொன்னதை விட அந்த பாறைகள் மூன்று மடங்கு உருகி வருகின்றன, இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் நாற்பது ஆண்டுகளுக்குள் வட துருவத்தில் பனிப்பாறைகளே இருக்க மாட்டா.

5. தென் துருவத்திலும் கலிபோர்னியா அளவுக்கு இருக்கும் பெரிய பனிப்பாறை உருகிக்கொண்டு போகிறது.

6. சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் கிரகம் புதன் கிரகம். ஆனால் அந்த கிரகத்தைவிட தொலைவில் இருக்கும் சுக்கிரன் கிரகம் சூடாக இருக்கிறது. சுக்கிரனின் வெப்பநிலை 860 டிகிரி பாரன்ஹீட் என்று கூறுகின்றனர். இது பூமியில் உள்ள வெப்பநிலையைவிட ஏறக்குறைய 14 மடங்கு அதிகமானது. சுக்கிரன் பூமியைவிட சூரியனுக்கு நெருக்கமாக இருப்பது இதற்குக் காரணம் இல்லை. பூமியில் கரித்துகள்கள் புதைந்து கிடக்கின்றன. சுக்கிரனில் கரித்துகள்கள் சுக்கிரனின் விண்வெளியில் இருப்பதே இதற்குக் காரணம்.

7. அல்கோர் முயற்சியால் க்யோடா வழி முறை என்று ஒன்று உருவாக்கப்பட்டு, அதன்படி வளர்ந்த நாடுகள் 90% கரியமில வாயு உற்பத்தியைக் குறைக்க வேண்டும், மற்ற நாடுகள் 50% குறைக்க வேண்டும் என்று ஒரு நியதி வகுக்கப்பட்டது. ஆனால் நாடுகளுக்கிடையே ஏன் இந்த ஏற்றத்தாழ்வு என்பதால் இந்த நியதி நடைமுறைப்படுத்தப் படுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. உலகத்தின் விண்வெளியில் அதிகமாக கரியமிலவாயுவைச் செலுத்திய வளர்ந்த நாடுகளையும், கரியமில வாயுவை குறைவாகச் செலுத்திய நாடுகளையும் சமமாகப் பார்ப்பது நியாயம் இல்லை.

**இதற்கு என்ன தீர்வு?**

இரண்டு வழிகள் புலப்படுகின்றன.

1. மின்விசை பயன்பாட்டை குறைப்பது.

2. அனல் மின்விசை உற்பத்தியைக் குறைத்து அணுமின் விசை உற்பத்திக்கு மாறுவது.

உடனடியாகத் தீர்வு காண வேண்டிய ஓர் உலகளாவிய மனித இனப்பிரச்சினை இது. மரணமா வாழ்வா என்ற பிரச்சினை. இது அரசியல் பிரச்சினை அல்ல. ஒரு தார்மீகப் பிரச்சினை. ஒருதலை முறை பிரச்சினை. உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனும் தன் பங்கை நிச்சயம் ஆற்ற வேண்டிய ஒரு முக்கியமான பிரச்சினை.


நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஓர் ஆரோக்கியமான, மதிநுட்பத்துடன் கூடிய எதிர்காலமொன்றை பெற்றுக்கொடுக்கின்றீர்களா ?

Cow & Gate

Step-Up 3

AA, DHA மற்றும் FOS என்பன வயிற்றுப் பகுதி தொற்றுநோய்களை கட்டுப்படுத்துவதுடன் மூளை மற்றும் கண் விருத்திகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

AA மற்றும் DHA என்றால் என்ன ?

FOS என்றால் என்ன ?









HOTEL WESTEERN PVT LTD

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No.35, Frankfurt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P: +94 11 2507161, +94 11 2507163, +94 [illegible]
Fax: +94 11 4518481 E-mail: info@hotelwesteern.com
Website: www.hotelwesteern.com